


## டாக்டர் அம்பேத்கார்

தோற்றம்: 14.4.1891

மறைவு: 6.12.1956

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டுச் சிறப்பிதழ்

# இந்த இதழில் ...


மாநிலத்துக்கு ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டும்
— முதல்வர் கலைஞர் ... 3

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும்
— டாக்டர் சா. பெருமாள் ... 6

சமுதாயச் சிற்பி
— கவிஞர் குடியரசு ... 8

ஆதிதிராவிடர் நலம் காண அளவற்ற நற்பணிகள்
— மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் ... 9

டாக்டர் அம்பேத்கார்
— ஆ. முத்துசாமி ... 12

பட்டுக்கோட்டையும் பாடல்களும்
— ப. ஜீவானந்தம் ... 16

சென்னைத் தொலைக்காட்சி நிலைய விழா ... 17



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

சித்திரை திங்கள் - 3

மலர்: 20 16-4-1990 இதழ்: 20



சுற்றுலாப் பொருட்காட்சி நிறைவு விழா ... 19

தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி
— மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் ... 21

அம்பேத்கார் அமுத மொழிகள் ... 47


இந்த இதழுடன் இலவச இணைப்பு

நிதிநிலை அறிக்கை மீதான சட்டமன்ற விவாதங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அளித்த பதிலுரை.

# ஈடு இணையற்ற தலைவர்



—தந்தை பெரியார்

டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.

நம்து 'குடியரசு' ஏட்டில் என்னென்ன கருத்துகள் வருமோ, அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டிவந்தேன்.

நமது குடியரசில் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

அம்பேத்கார் சிறப்பாக - தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச்சொல்லப் பயப்படும்படியான - புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

அநேக அரிய கார்ரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமாவார் டாக்டர் அம்பேத்கார்.



# நீதி தேடும் சீயம்

—பேரறிஞர் அண்ணா

அம்பேத்கார் இருந்த இடமும் தூரமும் மிக அதிகம். எனினும் இங்கு பற்பல இடங்களில் 'அம்பேத்கார் மன்றம்', 'அம்பேத்கார் படிப்பகம்', 'அம்பேத்கார் படத்திறப்பு' என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி உவகை கொள்வதுண்டு நாம். எங்கோ பிறந்து, படித்து, பட்டம் பெற்று, எவ்வளவோ பதவிகளையும் பாராளும் பொறுப்பினையும் ஏற்றிருந்த பொழுதும் கூட, அவர், தான் பிறந்தகுடி மீது நீங்காப் பற்றுக் கொண்டு, கேடு கெட்ட நிலையிலிருந்து மீண்டும் புது உருப்பெற வேண்டுமென்னும் ஆசை கொண்டு, அரும்பெரும் பணிகளைச் செய்தார் என்பதால்தான் - உறுதியோடு இந்நாட்டு மக்களுக்கு நீதி தேடிடும் சீயமாக அவர் இருந்ததால்தான் - அதே கொள்கைக்காகப் போராடிய நீதிக் கட்சியின் வழிவந்த நமக்கும் அம்பேத்கார் என்ற திருநாமம் தித்திக்கிறது.



# மாநிலத்துக்கு ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டும்!

## -முதல்வர் கலைஞர்

"அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய அழியாப் பெயரை இந்த மாவட்டத்திற்குச் சூட்டியதன் மூலம் நாங்களெல்லாம் பெருமை பெறுகிறோம். இது அம்பேத்காருக்கு வழங்கப்படுகின்ற பெருமை என்று நான் என்னை ஏமாற்றிக் கொள்ளமாட்டேன். அவருடைய பெயரைச் சூட்டுவதால் நமக்குக் கிடைப்பது பெருமை. அந்தப் பெருமையைப் பெறுகின்ற சுயநலத்தோடு தான் டாக்டர் அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய திருநாமத்தை வட ஆர்க்காடு மாவட்டத்தினுடைய் ஒரு பகுதிக்குச் சூட்டி நாமெல்லாம் மகிழ்கின்றோம்.

அம்பேத்கார் அவர்கள்–அடக்கப்பட்ட- ஒடுக்கப்பட்ட-தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக-கலங்கரை விளக்கமாக, அவர்களைக் கைதூக்கி விடுகின்ற காவலராகத் தோன்றியவர்.

அத்தகைய மாமேதை-ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்காக உழைத்துக் கொண்டே இருந்தவர்-இன்றைக்கு இந்தியத் தரணியிலே நடமாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் சாசனத்தைத் தயாரித்துத் தந்த மூலகர்த்தா. அவருடைய பெயரால் அவர் பிறந்த மாநிலத்தில் ஒரு நினைவுச் சின்னம் கூட இல்லை என்பதை அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள் ஆழ்ந்த வேதனையோடு இங்கே குறிப்பிட்டார். சி.டி. தண்டபாணியும் தழுதழுத்த குரலிலே அந்த நிகழ்ச்சியை இங்கே சுட்டிக்காட்டினார்.

அம்பேத்கார் நூற்றாண்டு விழா வருகிறது. ஜீவரத்தினம் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இந்த ஆண்டு நேரு நூற்றாண்டு விழா. அதை நாம் கொண்டாடி மகிழ்கிறோம். ஜன





நாயகக் காவலர் நேரு, அந்த விழாவைக் கொண்டாடி வருகின்ற இந்த நேரத்தில் ஜீவரத்தினம் அவர்களே இங்கே குறிப்பிட்டார். நேருவினால் மாமனிதர் என்று போற்றப்பட்டவர் அம்பேத்கார் என்று! இன்னொன்றும் சொன்னார். 'யார் யார் சுதந்திரம் வேண்டாமென்று சொன்னார்களோ அந்த அம்பேத்காரை, அந்த ஆர்.கே. சண்முகம் செட்டியை தன்னுடைய அமைச்சரவையிலே இணைத்துக் கொண்டவர் நேரு' என்று ஜீவரத்தினம் இங்கே எடுத்துச் சொன்னார்.

சுதந்திரத்தை யாரும் தேவையில்லை என்று கூறியது கிடையாது. வருகின்ற சுதந்திரம் பெயரளவிலே இருத்தல் ஆகாது. சுதந்திரத்தின் பெயரால் மற்றொரு அடிமைத்தனம் மக்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அன்றைக்கு அம்பேத்கார் போன்றவர்கள், பெரியார் போன்றவர்கள், நீதிக் கட்சியை நடத்தியவர்கள், திராவிட இயக்கத்தை நடத்தியவர்கள், குரல் கொடுத்தார்களேயல்லாமல், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டுமென்ற நிலையிலிருந்து பிறழாத காரணத்தினாலேதான் சுதந்திரம் பெற்ற திரு நாளை இன்ப நாளாகக் கொண்டாட வேண்டுமென்று எங்களையெல்லாம் தயாரித்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

எனவே, சுதந்திரம் கிடைக்க வேண்டும். அது யாருக்குக் கிடைக்க வேண்டும். விரல் விட்டு எண்ணக்கூடிய சில சீமான்கள், கோமான்கள், மிட்டாமிராசுகள், குட்டிக் குபேரர்கள் அவர்களுக் கல்ல சுதந்திரம். அவர்கள் மேனாமினுக்கிகளாக வாழ அல்ல, சுதந்திரம்.

இந்த நாட்டிலே நாயோடு போரிடுகிறார்களே சோற்றுக்கு, அவர்களுக்குத் தேவை சுதந்திரம். நடை பாதையிலே படுத்து உறங்குகிறானே- அங்கேயே தன்னுடைய காதல் களியாட்டங்களைக் கூட நடத்துகின்ற நிலைமைக்கு ஆளாகின்றானே- அங்கேயே அவனுடைய மனைவிக்குப் பிரசவம் பார்க்கிறானே, அந்த ஏழை மனிதனுக்குத் தேவை சுதந்திரம். இன்னமும் தொட்டால் தீட்டு, அருகில் வராதே, ஆலயத்தில் நுழையாதே, அர்ச்சகராக இருக்க உனக்கு என்ன தகுதி என்று கேட்கப்படுகின்றதே கேள்வி, அந்தக் கேள்வி இருக்கிற வரையில் இந்தியா சுதந்திரம் பெற்று விட்டதாக என்னால் நம்ப இயலாது.

எனவேதான் சுதந்திரம் என்றால் முழுமையானதாக, பரிபூர்ணத்துவம் வாய்ந்ததாக இருந்திட வேண்டுமென்று விரும்பியவர்களிலே ஒருவர் தான் இன்றைக்கு இந்த மாவட்டத்தினுடைய பெயராக மிளிர்கின்ற- புரட்சித் தலைவன் அம்பேத்கார்.

சோவியத் நாட்டிலே ஒரு புரட்சித் தலைவன் தோன்றினான் - மாவீரன் லெனின்! அதைப் போல் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக் காகத் தோன்றிய புரட்சித் தலைவர்தான் அம்பேத்கார். இன்றைக்கு இந்திய பூபாகத்தில்

**அடுத்த இதழ்**

**பாவேந்தர் பாரதிதாசன்**
**நூற்றாண்டுச் சிறப்பிதழாக**
**மலர்கிறது.**



அம்பேத்கார் பெயர் தமிழகத்திலே உச்சரிக்கப் படுவதைப்போல வடபுலத்திலே உச்சரிக்கப்படு வதில்லை. இந்த நேரத்திலே நான் வேலூர் கோட்டை வெளி மைதானத்திலே இருந்து— தமிழகத்தின் முதல் அமைச்சர் என்கின்ற முறையிலே அல்ல- நானும் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற முறையில், நான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சம்பந்தி என்ற முறையில்- அந்த வகையிலே நானும் அம்பேத்காரும் உறவினர்கள் என்ற நிலையில், அந்த அறிஞனுக்கு அவன் பிறந்த மாநிலத்திலே மாத்திரமல்லாமல் இன்றைக்கு எப்படி தமிழகத்திலே ஒரு மாவட்டம் அந்தப் புனிதன் பெயரால் தொடங்கப்படுகிறதோ- அதைப் போல் 1991-ம் ஆண்டு அம்பேத்கார் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடுகிற நேரத்தில் இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டுமென்ற விருப்பத்தைக் கோட்டை வெளி மைதானத்திலேயிருந்து நான் தெரிவிக்கின்றேன்.

அதற்கான குரலை இந்தியா முழுமையுமுள்ள - தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக் காகப் பரிவு கொண்டிருக்கிற மக்கள்-பிற்படுத் தப்பட்ட மக்கள்- மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இந்தியாவிலே அம்பேத்காருடைய நூற்றாண்டு விழா கொண்டாடுகிற நேரத்தில், எப்படி தமிழகத்தில் ஒரு அம்பேத்கார் மாவட்டம் உதயமானதோ அதைப்போல் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு அம்பேத்கார் மாவட்டம் இருந்தாக வேண்டும் என்று குரல் கொடுக்க வேண்டும். இதை நான் எச்சரிக்கையாகச் சொல்லவில்லை. அன்பு வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

அது அவருடைய கொள்கைகளுக்கு நாம் தருகின்ற ஆக்கம்! அவருடைய இலட்சியங்களுக்கு நாம் வழங்குகின்ற வரவேற்பு! அவருடைய எண்ணங்களுக்கு நாம் தருகின்ற மரியாதை! அவைகள் ஈடேறுவதற்கு- நாம் உண்மையான இதயம் படைத்தவர்கள் என்று காட்டிக் கொள்ள அதைவிட வேறு சான்று இருக்க முடியாதென்று நான் கருதுகின்றேன்.

*(வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தை 30.9.89 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து)*

## அம்பேத்கார் நினைவு போற்ற தமிழக அரசு செய்துள்ள அரும்பணிகள்

- அம்பேத்கார் பெயரால் வடசென்னையில் அரசினர் கலைக் கல்லூரி 1974-இல் நிறுவப்பட்டது.
- திருவல்லிக்கேணியில் உள்ள ஹாமில்டன் பிரிட்ஜ் - அம்பேத்கார் பாலம் என மாற்றப்பட்டது.
- அம்பேத்கார் சிலை சென்னையில் பல இடங்களில் நிறுவப்பட்டது.
- அம்பேத்கார் திருஉருவப்படம் (1980 ஆகஸ்ட்) சட்டமன்றப் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது.
- வட ஆர்க்காடு மாவட்டம் இரு பகுதி களாகப் பிரிக்கப்பட்ட போது - (1989 - செப்டம்பர்) ஒரு பகுதிக்கு வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அம்பேத்கார் பெயரில் மாவட்டம் அமைக்கப்படவில்லை.









## மைய அரசு செய்துள்ள அரும்பணிகள்

- அம்பேத்காரை நினைவுகூரும் வகையில் அவரது திருவுருவம் பொறித்த அஞ்சல் தலைகளை இருமுறை வெளியிட்டுள்ளது.
- அம்பேத்காரின் நூற்றாண்டைச் சிறப்பிக் கும் வகையில் அவரது பிறந்த நாளை (14.4.90) அரசு விடுமுறையாக அறிவித் துள்ளது.
- நாடாளுமன்றத்தில் அம்பேத்காரின் திரு உருவப்படத்தை 12-4-90 அன்று திறந்து வைத்துள்ளது.

# தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும்

டாக்டர் சா. பெருமாள்

தந்தை பெரியார் அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கும் மிகுந்த பொருத்தம் இருந்தது.

தந்தை பெரியார் இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றபோதிலும், அந்தச் சமயத்தில் நிலவி வந்த மூட நம்பிக்கைகளைச் சாடி வந்தார்; பகுத்தறிவுத் தத்துவத்தைப் பரப்பிவந்தார். சீர்திருத்தக் கொள்கைகளை முழங்கி வந்தார்.

இந்தியத் திருநாட்டின் வடபகுதியைச் சேர்ந்த மராட்டிய மாநிலத்தில் தோன்றிய அண்ணல் அம்பேத்கார், இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றாலும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், சாதி இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டவர். அவர்களால் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டவர், உரிமைகள் மறுக்கப்பட்டவர்.

பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெற்றும்கூட அவர் சனாதன இந்துக்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டார். அதனால் இயல்பாகவே இந்து சமயத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

தீண்டாமைப் பேயை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று அரும்பாடு பட்டார். தாழ்த்தப்பூட்ட மக்களின் உரிமைக்காகப் போராடினார். நாட்டு மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உண்மை விளங்க வேண்டும் என்பதற்காக மேடைகளில் முழங்கினார்; நூல்கள் பல படைத்தார்.

அம்பேத்கார் - தந்தை பெரியார் இருவரின் கொள்கைகளிலும் போராட்டங்களிலும் ஒப்பியல்பு அமைந்திருந்தது போன்றே, ஒருவரை ஒருவர் உணர்ந்து போற்றிக் கொண்ட செயலிலும் ஓர் ஒப்புமை இருந்தது.

தந்தை பெரியார் - வைக்கத்திலே தீண்டாமை ஒழிப்புப் போரை 1924-ஆம் ஆண்டில் தொடங்கினார். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் தந்தை பெரியார் . பிறக்கவில்லை என்றாலும், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டார். பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் அண்ணல் அம்பேத்காரைக் கவர்ந்தது.

''1924-இல் பெரியார் வைக்கத்தில் நடத்திய தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் என்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது'' என்று 1927-ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கார் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

அம்பேத்காரின் அரும்பணி குறித்துத் தந்தை பெரியார் 1952-இல் போற்றி எழுதியிருக்கிறார். அது வருமாறு:

''1925-ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுய மரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல, மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்து வந்திருக்கிறது என்பதால் ; ஆனால் வட நாட்டில் அப்படி அல்ல. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியம். ஆனால் அங்கேயே 1927, 1928-லேயே அம்பேத்கார் சுய மரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார்.''

1940-இல், தமது கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காகத் தந்தை பெரியார் அவர்கள் பம்பாய்க்குச் சென்று அண்ணல் அம்பேத்கார் அவர்களையும், ஜனாப் ஜின்னா அவர்களையும் சந்தித்தார். அப்போது அவரை ஆதரித்துக் கருத்துகளைப் பரிமாறி, தந்தை பெரியாருக்கும் அவரது குழுவினருக்கும் விருந்து தந்து மகிழ்ந்தார் அம்பேத்கார்.

பர்மாவில் 1954-இல் நடைபெற்ற புத்தமத 3-வது மாநாட்டில் அம்பேத்காருடன் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

சாதிக் கொடுமைகளைத் தீர்ப்பதற்காக, தாமும் தமது சமூக மக்களும் மதம் மாறிவிடப் போவதாக 1930-ஆம் ஆண்டிலேயே அம்பேத்கார் அறிவித்தார். தந்தை பெரியார் அம்பேத்காரைப் பாராட்டினார்; அவரது கருத்தை ஆதரித்தார். அவருக்கு ஊக்கமளித்தார்.

''நீங்கள் வேறு மதத்திற்குத் தனியாகப் போகக் கூடாது. குறைந்தது ஒரு இலட்சம் மக்களுடன் மதம் மாற வேண்டும். அப்போதுதான் நீங்கள் போகிற மதத்தவனும் மதிப்பான். தனியாக அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்க மாட்டான். ஆகையால் ஒரு இலட்சம் பேரோடு தாங்கள் மதம் மாறும் போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்'' என்று தந்தி அடித்தார்.

பகுத்தறிவுக்கு ஏற்புடைய-மானிடப் பண்புக்கு உகந்ததான-சமதர்மக் கோட்பாட்டுக்கு உரியதான பௌத்த சமயத்திற்கு மாறப் போவதாக அண்ணல் அம்பேத்கார் 1952-இல் அறிவித்தபோது அவரை வாழ்த்தினார் தந்தை பெரியார்.

''டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இப்போது கொஞ்ச நாட்களாக பௌத்தக் கொள்கையில் சேரப் போவதாகச் சொல்லி வருகிறார். உண்மையில் பௌத்தம் ஓர் உயர்ந்த மதமாகும்'' - தந்தை பெரியார் தெரிவித்த கருத்து இது.

தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கார் இந்த இரு தலைவர்களும் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் நலன் காப்பதற்கு இயற்கை அளித்த கொடை என்று கூறினால் அது மிகையாகாது.



தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும் சிரித்து மகிழ்ந்து உரையாடுகிறார்கள் (சென்னை — 1944)

தந்தை பெரியார் பம்பாய் சென்று, அண்ணல் அம்பேத்கார் அவர்களையும், ஜின்னா அவர்களையும் சந்தித்த நிகழ்ச்சி (1940)





பர்மாவில் நடந்த மூன்றாவது உலக பௌத்த மாநாட்டில், தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும் (3.12.1954)

# சமுதாயச் சிற்பி

# அண்ணல் அம்பேத்கார்



சிந்திக்க வைப்பதற்கே பிறந்த போதன்
சீர்திருத்த அலையெழுப்பும் அறிவு வாரி
சந்திக்கும் பெரும்கிளர்ச்சி! அம்பேத் காரைச்
சந்தித்தோர் அனைவருமே மனிதர் ஆனார்!

கோத்திரங்கள் சாத்திரங்கள் குலதர் மத்தின்
குளறுபடி, குறுக்கீடு எல்லாம் சேர்ந்து
பூத்திருந்த அன்புதனைக் கருக்கிப் போட்டுப்
பூசலுக்குத் தூபமிட்டால் - அம்பேத் காரைக்

காத்திருந்து அழைக்காதா காலம்! அந்தக்
காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட
சாத்திரங்கள் பட்டபாடு கொஞ்ச மல்ல
சமுதாயச் சிற்பியவர்! மேதை அண்ணல்!

இன்றைக்கும் இருக்கிறதே சாதி! தெய்வம்
இதைத்தானா வேலையற்றுப் படைக்க வேண்டும்!
என்றைக்கு விஞ்ஞான புத்தி யோடு
எல்லோரும் சமமென்று நினைக்கின் றோமோ,

அன்றைக்கே புதுமனிதன் பிறப்பெ டுப்பான்
அரசியலும் மக்களுக்கு உதவும்! இல்லை
என்றால்இந் நாடென்றும் உருப்ப டாது
இதற்கேனும் அம்பேத்கார் வாழ வேண்டும்!

பாறைபோலே மதமிருந்தால் முன்னேற் றத்தின்
பாதையிலே தடைக்கற்கள் இருக்கும் அன்றோ!
யாரைப்போய் நோவதுநாம்? மக்கள் நெஞ்சில்
இருக்கின்ற அழுக்குக்குக் கார ணங்கள்

வேரெடுத்து இருக்குமானால் அதனைத் தூக்கி
வீசவேண்டும்! இல்லையெனில் அம்பேத் காரைச்
சீரெடுத்துப் பாடியென்ன பயன்தான் இங்கே!
சிந்திக்கத் துணிவதுதான் மூளை வேலை!

— தத்துவக்கவிஞர் குடியரசு

# ஆதிதிராவிடர் நலம் காண அளவற்ற நற்பணிகள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

## டாக்டர் எ.இராமகிருஷ்ணன்



கடந்த ஆண்டிலே 40 ஆயிரம் மனைப் பட்டாக்கள் கிட்டத்தட்ட 2.35 கோடி ரூபாய் செலவிலே வழங்கப்பட்டு, அந்த மனைப் பட்டாக்களிலே 45 ஆயிரம் தொகுப்பு வீடுகளை — கான்கிரிட் வீடுகளைக் கட்டிக் கொடுத்த பெருமை நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த நிதியாண்டிலே கூட கிட்டத்தட்ட 40 ஆயிரம் மனைப்பட்டாக்கள் 2.5 கோடி ரூபாய் செலவிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. ரூ.56 கோடி செலவிலே 47 ஆயிரம் தொகுப்பு வீடுகளை — கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு அரசாகத்தான் தமிழக அரசு இந்த நேரத்திலே பீடு நடை போட்டுக்கொண்டு இருக்கிறது.

வீட்டுமனையைப் பொறுத்தவரையில்-தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர், தமிழக முதல்வராக இருந்த நேரத்தில் - அதாவது 1974 - ஆம் ஆண்டில் 'தாட்கோ' நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி, அந்த நிறுவனத்தின் மூலமாக அந்த 2 ஆண்டிலே கிட்டத்தட்ட 35 ஆயிரம் தொகுப்பு வீடுகளை — கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்.

கடந்த ஆண்டிலே 42,000 தொகுப்பு வீடுகளை-கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்து, இந்த ஆண்டிலே ரூ.56 கோடி செலவிலே 47,000 கான்கிரீட் வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்த அரசு இருக்கிறது. கடந்த ஆண்டு உள்ளாட்சித் துறை மூலமாக அந்தத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வருகின்ற நிதியாண்டிலே அந்தத் தொகுப்பு வீடுகள், பல்வேறு உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, 'தாட்கோ' மூலமாகக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பை நான் நம்முடைய தானைத் தலைவர், தமிழகத்தின் முதல்வர் அவர்களிடம் வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்ள இருக்கிறேன் என்ற உண்மையினைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நிதியாண்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 16.26 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக மட்டும் கிட்டத்தட்ட ரூ.50,02,44,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கல்வித்துறையினால் துவக்கப்பட இருக்கின்ற 50 புதிய துவக்கப் பள்ளிகளையெல்லாம் ஆதிதிராவிடர் வசிக்கும் இடங்களிலே துவக்க அரசு முடிவு செய்துள்ளது.

ரூ.45.33 இலட்சம் செலவில் 40 புதிய விடுதிகள் திறக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. ரூபாய் 9.6 இலட்சம் செலவில் 100 புதிய இடைநிலை ஆசிரியர்களைப் பணியமர்த்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூபாய் 22 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் கட்டுவதற்காக ரூபாய் 26.9 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 10 இலட்சம் மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக ரூபாய் 1.73 கோடி இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சுகாதார மற்ற தொழில்கள் செய்பவர்களுடைய குழந்தைகள் சுமார் 1,223 பேர் படிக்க ரூபாய் 6.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசப் பட்டப் படிப்பு படிப்பதற்காக ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குக் கல்விக் கடன் உதவித் தொகை வழங்க ரூபாய் 86 இலட்சமும், கிறிஸ்துவ மதம் மாறிய மாணவர்களுக்கு

ரூபாய் 3.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் புத்தகம் வாங்குவதற்காக ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

20 கல்லூரி விடுதிகளுக்கு நூலக வசதி ஏற்படுத்த ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

31 விடுதிகளுக்கு ரூ.13.9 இலட்சம் செலவில் இண்டேன்எரி வாயு வழங்கப்பட உள்ளது.

50 விடுதிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட உள்ளது.

கல்லூரி விடுதிகளுக்கு ரூ.1.5 இலட்சம் செலவில் வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி வழங்கத் திட்டமிட்டிருக்கிறது.

விடுதிகளில் 2,500 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்க ரூபாய் 24.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1990-91-ஆம் ஆண்டின் விடுதி மற்றும் பள்ளிகள் கட்ட மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 30 இலட்சமும், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 20.84 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

3,400 ஆதிதிராவிட விவசாயிகள் கடன் பெற ரூபாய் 46.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

600 சிறிய வாணிபத் தொழில் செய்பவர்கள் கடன் வசதி பெற ரூபாய் 6.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

24,000 ஆதிதிராவிடர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் மூலம் பயன் பெற ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

வரும் நிதியாண்டில் சிறப்பு மைய உதவித் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ஆதிதிராவிடர் பயன் பெற ரூ.25 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறது.

1991-இல் ரூ.56 கோடி செலவில் 47,000 கான்கிரீட் வீடுகள் கட்ட தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.



## சமூகநீதி ஆண்டு

"டாக்டர் அம்பேத்காரின் நூற்றாண்டு விழா 1990 ஏப்ரல் 14 முதல், 1991 ஏப்ரல் 14 வரை நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது. இந்த ஆண்டு சமூக நீதி ஆண்டாகக் கொண்டாடப்படும்", என மாண்புமிகு மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு ராம் விலாஸ் பஸ்வான் 3.4.90 அன்று செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

40,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க ரூ.2.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறது.

3,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்ய ரூபாய் 14.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இணைப்புச் சாலைகள் அமைக்க ரூபாய் 9 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

ரூபாய் 50 இலட்சம் செலவில் 250 குடியிருப்புகளுக்கு மின்சாரத் தெரு விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

ரூபாய் 5 இலட்சம் செலவில் சமூகக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ரூ.19.5 இலட்சம் செலவில் 600 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்புக்கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1,256 ஆட்டோ ரிக்ஷாக்கள் ரூ.9.55 கோடி செலவில் 628 நகரப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

37,546 கிராமப்புற, நகர்ப்புற ஆதிதிராவிடர்களுக்கு உதவிட சிறப்பு மையத் திட்டத்தின் கீழ் ரூபாய் 55 கோடி வழங்கிட அரசு திட்டமிட்டிருக்கிறது.

சிறுதொழில் துவங்கி சுயவேலை வாய்ப்புப் பெற 10,000 பேர் பயன்பெறும் வகையில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

2,200 ஆதிதிராவிடர் பயன் பெற ரூ.6.64 கோடி செலவில் விசைத்தறிகள் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரூ.5.16 கோடி செலவில் 24,211 நபர்களுக்குக் கறவை மாடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

உதகையில் பழங்குடியினர் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம் ரூ.2 கோடி செலவில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் 1990-91-ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ஆதிதிராவிடர் குடும்பங்களும், 900 பழங்குடியினர் குடும்பங்களும் பயன்பெற தமிழக அரசு வழிவகை செய்திருக்கிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பிறந்த நாள் விழாவைத் தமிழகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தியத் திருநாட்டில் முதலாவதாக ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் என்று பெயர் சூட்டிய பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்

களையே சாரும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவை ஒட்டி தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ரூ.10 இலட்சம் செலவில் சமூகக் கலையரங்கம் கட்ட தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்தியத் திருநாட்டில் தமிழ்நாட்டில்தான் ஆதிதிராவிட, பழங்குடியின மக்களைச் சிறுதொழில் அதிபர்களாக்கும் புதுமாதிரியான திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் ரூ.6 இலட்சம் வரையில் உள்ள கட்டுமானப் பணிகளை, படித்து வேலையில்லாமல் இருக்கிற ஆதிதிராவிடப் பழங்குடியின மக்களுக்கு நியமன அடிப்படையில் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இந்நாட்டிலேயே முதலாவதாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் முதலில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து இரண்டு நீதிபதிகளைச் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நியமித்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

காவல்துறையின் முதன்மைப் பதவியைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவருக்குக் கொடுத்த பெருமையும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். இவ்வாறாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதுகெலும்பாக இருந்து, அவர்களுடைய கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இத்துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள்,
29.3.90 அன்று
சட்டமன்றப் பேரவையில்
ஆற்றிய உரையிலிருந்து



# அம்பேத்காருக்கு பாரத ரத்னா விருது



அம்பேத்காருக்கு அவரது மறைவுக்குப் பிறகு பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது. அதுவும் அநேக வருடங்கள் கழித்து வழங்கப்படுகிறது. காலங்கடந்து அவருக்கு இந்த மரியாதை செய்யப்பட்டாலும், அதற்கு முற்றிலும் தகுதியானவர்தான் அவர்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்
திரு. ஆர். வெங்கட்ராமன்



தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்டவரும் இந்திய அரசியல் சட்டத்தை வகுத்த சிற்பிகளில் ஒருவருமான மறைந்த டாக்டர் அம்பேத்காருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது.

அம்பேத்காரைக் கௌரவிப்பது நம்மை நாமே கௌரவிப்பது ஆகும். அவரது பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் தேதி டெல்லியில் உள்ள அம்பேத்கார் விளையாட்டுத் திடலில் பேரணி நடைபெறும்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அம்பேத்காரின் உருவப்படம் ஏப்ரல் 12-ல் திறக்கப்படும்.

அரசியல் சட்டத்தை எழுதிய அம்பேத்கார் படம் இதுவரை நாடாளுமன்றத்தில் இடம் பெறாதது விசித்திரமானது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. வி.பி. சிங்.
(நாடாளுமன்றத்தில்-31.3.90)



தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமின்றி இந்திய மக்கள் அனைவரும் மகிழக் கூடிய வகையில், மறைந்த மாமேதையும், இந்திய அரசியல் சட்டத்தை வடித்துத் தந்தவருமான அம்பேத்காருக்கு மிக உயர்ந்த விருதான - பாரத ரத்னாவை வழங்கும் பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு அனைத்துத் தரப்பினர் சார்பில் வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர்
(சட்டமன்றப் பேரவையில் - 31.3.90)

# டாக்டர் அம்பேத்கார்



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அடிமைப்பட்டுக்கிடந்த இந்திய நாட்டின் விடுதலைக்கும் மேம்பாட்டிற்கும் அருந்தொண்டாற்றிய பெருமைமிகு பெருமக்கள் பலராவர். அவர்களில், சமுதாய எழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டு, என்றும் வரலாற்றில் இடம் பெறத்தக்க அரும்பணிகளை ஆற்றி, உலகத்தார் உள்ளங்களில் நிலைத்திட்ட அறிஞர் டாக்டர் அம்பேத்கார் ஆவார்.

அவரது நூற்றாண்டு விழாவினை இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் கொண்டாடி, மக்களுக்கு அவரின் அருந்தொண்டினைப் பரப்பிடத் திட்டமிட்டுள்ளன. முன்னோடியாகத் தமிழ்நாடு அரசு, டாக்டர் அம்பேத்கார் பெயரில் மாவட்டம் ஒன்றினை அமைத்துச் சிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சட்டப் பேரவையில் டாக்டர் அம்பேத்காரின் உருவப் படம் முன்னரே அழகுறத் திகழ்கிறது. தமிழ்நாட்டில், டாக்டர் அம்பேத்காரின் புகழைப் பன்னெடுங்காலமாகப் போற்றிடும் மனப்பாங்கு நின்று நிலவி வருவது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் அவர்களின்பால் பேரன்புகொண்டு அவரைப் பாராட்டிப் பேசி வந்துள்ளதுடன், ஜின்னா அவர்களைச் சந்திக்கப் பம்பாய் சென்றபோது டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் கண்டு உரையாடி வந்துள்ளார்.

இந்திய அரசு, அவரது நூற்றாண்டை 'சமூகநீதி' ஆண்டாகக் கடைப்பிடிக்க முனைந்திருப்பது டாக்டர் அம்பேத்கார் சமுதாய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினைச் சிறப்பிப்பதாக அமைகிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டையொட்டி, அன்னாரின் அளப்பரிய தொண்டினைச் சிறப்பிக்கும் வகையில் 'பாரத் ரத்னா' என்ற உயரிய விருதினை வழங்கிட உள்ளது, இந்திய வரலாற்றில் பீடுமிக்க நிகழ்ச்சியாகும்.

ஆ. முத்துசாமி
உதவி இயக்குநர்,
'தமிழரசு'

டாக்டர் அம்பேத்கார், தீண்டாமையை ஒழித்திடப் போராடி அவர்களுக்குச் சமுதாயத்தில் சம உரிமை அளிக்கப்பட வழிவகை செய்த சமுதாயச் சிற்பி.

முதன் முதலாகத் தன்னிச்சையான தொழிலாளர் கட்சியையும் பின்னர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பையும் உருவாக்கிய மாமனிதர்.

அரசியல் சுதந்திரம் கிட்டிய பின்னர், வயதுவந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியவர் அம்பேத்கார். சமய எழுச்சியும் சமுதாயச் சீர்திருத்தமும் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அருந்தொண்டாற்றிய பல்கலைத் திறன்கொண்ட பேரறிஞராகத் திகழ்ந்தவர் அவர்.

அறிவைத் தேடி ஆக்கம் பெறுவதிலும், புத்தகங்களை எப்போதும் படித்துப் பயன்பெறுவதிலும், சிந்தனை செய்து அறிவுத் தெளிவடைவதிலும், நிகரற்ற கல்விமானாகத் திகழ்ந்தார். வரலாறு, பொருளாதாரம், அரசியல், சட்டம், அரசியலமைப்பு ஆகிய துறைகளில் கற்றுத் துறைபோகிய வித்தகர் டாக்டர் அம்பேத்கார். வாழ்நாள் முழுவதும் நூல்களைப் பயில்வதில் காலம் கழித்ததுடன் பல்வேறு மொழிகளை அறிந்த பல்கலை வல்லுநராக வாழ்ந்தவர். சிறந்த நூல்நிலையத்தை நிர்வகித்ததுடன் அங்கேயே உண்டு உறங்கியும் நாட்களைக் கழித்தார். ''என்னைப் போன்ற சமுதாயத்தில் நிராகரிக்கப்பட்டவருக்கு, இப்புத்தகங்களே சீரிய நண்பர்கள்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1953-ஆம் ஆண்டு உஸ்மானியா பல்கலைக் கழகம் அவருக்கு

எல்.எல்.டி. பட்டம் வழங்கியபோது அவரைச் சிறப்பித்துக் கூறுகையில்,

''பேரறிவாளர்; சமுதாயத் தொண்டர்; சட்டவல்லுநர்களில் தலை சிறந்தவர்; புகழ்பெற்ற சட்டப் பேரவை உறுப்பினர்; இந்தியாவின் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களின் நலன் காக்கும் ஒப்புயர்வற்ற சீராளர்'' என்று குறிப்பிட்டுள்ளது.

அம்பேத்காரின் பாட்டனார் மலோஜி சக்பால், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ரத்னகிரி மாவட்டத்தின் மஹார் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். இவரது மகன் ராம்ஜியும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவராவார். இவருக்குப் பதினான்கு குழந்தைகள். இறுதியாகப் பிறந்த குழந்தைதான் டாக்டர் அம்பேத்கார். 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் பிறந்தார்.

இராணுவத்தில் சுபேதார் மேஜராகப் பணியாற்றி, இராணுவப் பள்ளியில் சுமார் 14 ஆண்டுகள் தலைமை ஆசிரியப் பொறுப்பில் இருந்தவர் இவரது தந்தையார் ராம்ஜி. அவர் 1891-ஆம் ஆண்டில் ஓய்வு பெற்று, மாதம் ரூ.50 ஓய்வூதியம் பெற்றுவந்தார். பின்னர் ரத்னகிரி மாவட்டம் டபோலியில் குடும்பத்தினருடன் வாழ்ந்தார். 1894-ஆம் ஆண்டில் ரத்னகிரி பொதுப்பணித் துறையில் கிடங்குக் காப்பாளராக மீண்டும் பணியில் சேர்ந்தார்; பின்னர் சதாரா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டார்.



ஆருயிர் மனைவி இராமாபாய் அவர்களுடன் டாக்டர் அம்பேத்கார்

அவரது பதினான்காவது மகனாகப் பிறந்த பீம்ராவ், 1900-ஆம் ஆண்டில் சதாராவில் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தார். பள்ளியில் இவரது பெயர், பீவராம்ஜி அம்பாவாடிகார். சதாரா உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போது அம்பேத்கார் என்னும் பெயருடைய ஆசிரியர் ஒருவர் பீம்ராவ் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்த காரணத்தால், இந்த ஆசிரியருக்கு மரியாதையும் மதிப்பும் செலுத்தும் வகையில் பீம்ராவ், தனது பெயரையும் அம்பேத்கார் என்று மாற்றிக் கொண்டார்.

அம்பேத்கார் பள்ளிப் பருவத்திலேயே தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டார். பள்ளியில் தீண்டத்தகாதவர் வரிசையில் அமர்த்தப்பட்டார். பிற சாதி மாணவர்களுடன் கலந்து விளையாடவும் உண்ணவும் அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் சமஸ்கிருதம் கற்கத் தடை செய்யப்பட்டனர்; எனவே, பர்ஷியன் மொழியை இரண்டாவது மொழியாக அம்பேத்கரர் பயின்றார்.

1904-ல் சதாராவில் ராம்ஜி மேற்கொண்ட பணி முடிவுற்றமையால் பம்பாய் நகருக்குக் குடி வந்தார். பம்பாயில் எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் அம்பேத்கார் சேர்ந்து பயின்றார். 1907-ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். இவர் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது அதாவது 14-ஆம் வயது எய்தியபோது ராமாபாய் என்னும் ஒன்பது வயதுச் சிறுமியை மணந்தார்.

பரோடா மகாராஜா சயாஜிராவ் முற்போக்கு எண்ணமுடையவர்; தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்த மாணவருக்கு மேற்படிப்புக்கு உதவிட முன் வந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அம்பேத்கார் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார். மாதம் ஒன்றுக்கு ரூ.25 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்பட்டார்.

1912-ஆம் ஆண்டில் பி.ஏ., பட்டமும் பெற்றுத் தேர்ச்சி பெற்றார். படிப்பை முடித்ததும் பரோடா

அரசுப் பணியில் சிறிதுகாலம் பணியாற்றினார். அங்கு நிலவிய சூழ்நிலை மனநிறைவளிக்காமையால் அப்பணியிலிருந்து நீங்கினார். 1913-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ஆம் நாள் அம்பேத்காரின் தந்தையார் மறைவு எய்தியது, இவருக்குப்பெரும் அதிர்ச்சியாக அமைந்தது.

பரோடா மகாராஜா அம்பேத்காரை அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் உயர்படிப்பிற்கு அனுப்ப முடிவு செய்தார். 1913-ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் வாரம் அம்பேத்கார் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். புகழ்பெற்ற பொருளாதாரப் பேராசிரியர் செலிக்கேன் இவரது ஆசிரியராக இருந்தார். ''பண்டைய இந்திய வர்த்தகம்'' என்ற தலைப்பிட்ட ஆய்வுநூலுக்காக 1915-ஆம் ஆண்டு எம்.ஏ., பட்டம் பெற்றார். அம்பேத்கார் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் இருந்த சமயம், அப்போது அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த லாலாலஜ்பத்ராய் அடிக்கடி கல்லூரி நூலகத்திற்கு வருவார். அம்பேத்காரும் அவரும் இந்திய சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகள் குறித்துப் பேசுவர்.

1916-ஆம் ஆண்டில் அம்பேத்கார், கொலம்பியா பல்கலைக் கழகத்தை விட்டு லண்டனிலுள்ள பொருளாதார, அரசியல் பள்ளியில் சேர்ந்தார். படிப்பு முற்றுப் பெறாத நிலையில் அம்பேத்கார் இந்தியா வந்தார். 1917-ஆம் ஆண்டில் பம்பாய் வந்து குடியேறினார். 1918-ஆம் ஆண்டில் பம்பாய், சிதென்காம் கல்லூரியில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1920-ஆம் ஆண்டில் இப்பதவியை விட்டு விலகி, லண்டனில் மீண்டும் சட்டம், பொருளாதாரம் படிக்கச் சென்றார்.

1920, ஜனவரி 31-ஆம் நாள் அம்பேத்கார், 'மூக்நாயக்' என்னும் வார இதழைத். தொடங்கி, இந்திய தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை, அவர்களுக்கு சமூகத்தில் இழைக்கப்படும் அநீதிகளைச் சாடினார். ''அதிகாரமும் கல்வி மேம்பாடும் இல்லாமல் பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் எந்த முன்னேற்றமும் அடைய



புத்தமதத்தைத் தழுவிய டாக்டர் அம்பேத்காரின் தோற்றம்

முடியாது'' என்று தெளிவுபடுத்தினார்.

1920, செப்டம்பர் மாதம் லண்டன், பொருளாதார அரசியல் பள்ளியில் மீண்டும் சேர்ந்ததுடன் பாரிஸ்டராகப் பயின்று தேர்ச்சி பெறத் தொடங்கினார். 1922-23-ல் ஜெர்மெனியிலுள்ள போன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் படிக்கச் சில காலம் தங்கியிருந்தார்.

டாக்டர் அம்பேத்கார், தனது வாழ்நாளில் மூன்று பெருமக்களை வழிகாட்டியாகக் கொண்டிருந்தார். கபீர், ஜோதிபாபோலி, புத்தர் ஆகியோரின் வழிநடந்து தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்க்க உறுதி பூண்டார். கபீர், அவரைப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தக் காரணமாயிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனிற்குப் பாடுபடும் உணர்வை, எழுச்சியை ஊட்டியவர் ஜோதிபா போலி; புத்த பெருமானின் அறிவுரைகள் அவரைப் பெரிதும் கவர்ந்ததுடன் பிற்காலத்தில் அவர் பௌத்த சமயத்தைத் தழுவுவதற்கும் வழி வகுத்தன.

அம்பேத்கார் மேற்கொண்ட சமூகநலப் போராட்டங்கள், தீண்டத்தகாதவர்களுக்கு, சமயம், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சமத்துவம், சமஉரிமை வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவை. தாழ்த்தப்பட்ட மக்கள் அம்பேத்காரின் தலைமையில் ஒரணியாகத் திரண்டு போராடத் தயாராயினர்; தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் இந்துக்களிலும் வேறு பட்ட தனித்த சமூகத்தினராகக் கருதப்பட வேண்டுமென்று விரும்பினார். சட்டப் பேரவைகளிலும் பிற வகைகளிலும் அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

1930-ஆம் ஆண்டில், இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனில் வட்டமேஜை மாநாட்டைக் கூட்டியது. மொத்தம் 89 உறுப்பினர்களில் 53 பேர் இந்தியாவிலிருந்து சென்ற உறுப்பினர்கள்; அம்பேத்கார், ராவ்பகதூர் ஸ்ரீநிவாசன் ஆகிய இருவரும் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாகச் சென்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் போராடிய அம்பேத்கார், அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து அண்ணல் காந்தி அடிகளுடன் சில சமயம் கருத்து வேறுபாடு கொள்ள நேர்ந்தது. காந்தியடிகளை எரவாடா சிறையில் அம்பேத்கார் சந்தித்துத் தனது கருத்துக்களை வலியுறுத்தினார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பிரதிநிதித்துவம் குறித்து 1932, செப்டம்பர் 24-ஆம் நாள் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதற்கு வரலாற்றுப் புகழ்மிக்க புனா ஒப்பந்தம் என்று பெயராகியது. தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக அம்பேத்கார் இதில் கையெழுத்திட்டார்.



பறிபோன உரிமைகளைப் பிச்சையாகப் பெற இயலாது. தீர்மானங்கள் மூலமாகவோ, மன்றாடுவதன் மூலமாகவோ, நியாயம் பிறக்காது. ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய, சிங்கங்களை அல்ல; ஆடுகளாக. இருக்க வேண்டாம். சிங்கங்களைப் போன்று வீறு கொண்டெழுமின்!

இந்த ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் அரசும் ஒப்புக் கொண்டது.

புனா ஒப்பந்தத்திற்குப் பின்னர், 1932-ல் அனைத்து இந்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினார். பின்னர், இதன் பெயர், ஹரிஜன் சேவக்சங்கமாக மாற்றப்பட்டது. 'ஹரிஜன்' என்ற வார இதழை காந்தியடிகள் தொடங்கினார்.

தாம் பிறந்த சமுதாயம் புறக் கணிக்கப்படுவதையும், ஒதுக்கி வைக் கப்படுவதையும் உணர்ந்த அம்பேத்கார் வீறு கொண்டெழுந்தார். சாதி ஒழிய வேண்டும் என்று அரும் பாடுபட்டார்.

சாதி ஒழிய வேண்டுமென்றால் கலப்புமணம் ஒன்றினால்தான் அது முடியும் என்று முதன் முதலாக மொழிந்தவர் அம்பேத்கார். அதற்கு எடுத்துக்காட்டாகவும் அவர் திகழ்ந் தார்.

1928-ஆம் ஆண்டு பம்பாயில் அரசினர் சட்டக் கல்லூரியின் முதல் வரானார்.

1942-ல் கிரிப்ஸ் கமிஷன் இந்தியாவிற்கு வந்தபோது அம்பேத்கார், சர் ஸ்டேபோர்டு கிரிப்ஸ் அவர்களைச் சந்தித்துப் பேசினார். அம்பேத்கார், ராஜா ஆகியோர் 'கிரிப்ஸ் திட்டங்களி னால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தீங்கு விளையும்' என்று எச்சரித்தனர்.

1942, ஜூலை 2-ஆம் நாள் அம்பேத்காரின் பெயர், வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் சேர்க்கப்பட்டு இந்தியர்களின் பிரதிநிதித்துவம் 14ஆக உயர்ந்தது. இந்திய அரசின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராகத் தீண்டத்தகாத இந்து ஒருவர் நிய மிக்கப்பட்டது இந்திய வரலாற்றில் இதுவே முதலாவதாகும். 1942, ஜூலை 20-ஆம் நாள், தொழி லாளர் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1946, மே மாத இறுதி வாரத்தில் வைஸ்ராயின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியை விட்டு விலகினார்.

இந்தியா விடுதலை பெற்று முதன் முதலாக மத்திய அமைச்சரவை அமைக்கப்பட்டபோது அம்பேத்கார் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற் றார். அரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றது சிறப்பு அம்சமாகக் கருதப்பட்ட காலம். விடுதலைக்குப் பின்னர், அம்பேத்கார் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான எண்ணத்தையும் காந்தியடிகளுக்கு எதிரான கருத்துக் களையும் மறந்து ஒத்துழைப்புத் தந்தார்.

வங்காளத்திலிருந்து அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். ஆனால் பிரி வினைக்குப் பின்னர் இந்த இடத்தை இழந்தார். பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கட்சியால் இப்பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அம்பேத்கார் பண்டித நேருவின் அமைச்சரவையிலிருந்து 1951 செப்டம்பர் மாதம் விலகினார். 1952, ஜனவரியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அம்பேத்கார் தோல்வியடைந்தார். மார்ச் மாதத் தில் மாநிலங்கள் அவைக்கு அம்பேத்கார் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமைச்சரவையிலிருந்து விலகிய பின்னர், அவர் எதிர்க்கட்சித் தலை வராகவே பணியாற்றினார்.

சமயம், 'மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது' என்றே கருதி னார் அம்பேத்கார். "மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை. அவனுக்கு மனம் உண்டு. மனத் தினால் சிந்தித்து உண்மை அறி கின்றான்; ஆகவே, சமய வாழ்க்கை யும் மனித வாழ்விற்கு அடிப்படை யானதே" என்ற கருத்தை வலியுறுத் தினார். 1950-ஆம் ஆண்டில் டில்லி யில் நடைபெற்ற முதலாவது பௌத் தர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண் டார். 1954 டிசம்பரில் பௌத்தர் களின் மூன்றாவது உலக மாநாட் டில் கலந்து கொண்டார். இங்கு தான் அவர், பௌத்த சமயத்தைத் தழுவும் எண்ணத்தை மேற்கொண் டார். 1956, மே, 24-ஆம் நாள் புத்தர் பிறந்த நன்னாளில், தான் (1956 அக்டோபரில்) பௌத்த சமயத்தில் சேரப் போவதாக பம்பா யில் அறிவித்தார்.

1956 அக்டோபர் 15-ஆம் நாள், நாகபுரி நகராட்சி மன்றம் அம்பேத்காருக்கு வரவேற்பு அளித்த போது, "சமூக சீர்திருத்தவாதி, தத்துவஞானி, சிறந்த அரசியல் அமைப்பு நிபுணர்" என்று பாராட்டுரை தெரிவித்துச் சிறப் பளித்தது. காட்மாண்டுவில் நடை பெற்ற உலக பௌத்தர்கள் மாநாட் டில் கலந்து கொண்டு, 'பௌத்தம் சாதாரண சமயம் மட்டுமன்றி, சமுதாய வாழ்க்கை முறைகளை வகுக்கும் சீரிய நெறியாகும்' என்று அறிவித்தார். பின்னர் டில்லிக்குத் திரும்பி வந்து, தலைலாமாவிற்குச் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

டாக்டர் அம்பேத்கார், தனது பணிகளை மூன்று நிறுவனங்கள் மூலம் வகைப்படுத்திக் கொண்டார். 1945-ல் தொடங்கப்பட்ட மக்கள் கல்விச் சங்கம், அதன் கல்லூரிகள் மூலமும், 1953-ல் தொடங்கப்பட்ட இந்திய பௌத்த சங்கத்தின் மூலமும், இந்தியக் குடியரசுக் கட்சி மூலமும் தொண்டுகளை விரிவுபடுத்திக் கொண்டார்.

1956, டிசம்பர், 6-ஆம் நாள் திருமதி அம்பேத்கார் வழக்கம் போல் எழுந்து பார்த்தபோது டாக்டர் அம்பேத்கார் மீளாத்துயிலில் இருந்தார். உறங்கும் போதே இயற்கை எய்திவிட்டார்.

டாக்டர் அம்பேத்கார் சிறந்த அரசியல் மேதையாகவும் அறிஞராக வும் திகழ்ந்தவர். இந்தியாவிற்குச் சட்ட அமைப்பு வழங்கியதுடன் மக்களுக்கு உரிமைகளின் அடித் தளத்தை வகுத்துக் கொடுத்தார். இந்திய அரசியல் எழுச்சியின் வர லாற்றில் அவரது அரசியல் பணியும் எழுத்துப் பணியும் இரண்டறக் கலந்து விட்டன.

# பட்டுக்கோட்டையும் பாடல்களும்

ப. ஜீவானந்தம்

புத்தக அறிவு புட்டிப்பால்; அனுபவ அறிவு தாய்ப்பால். பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் விவ சாயத் தொழிலாளி, ஏழை விவ சாயி, பாட்டாளி ஆகியவர்களில் ஒருவராக வாழ்ந்து அடிபட்டு அனு பவ அறிவு பெற்றவர். அடிப்படைப் பெருமக்களின் அனுபவப் பெருஞ் செல்வனான மார்க்சிம் கார்க்கியைச் சோவியத் யூனியன் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே 'மக்கள் கலைஞன்' என்று உச்சியில் தூக்கி வைத்து மெச்சுகிறது. அதுபோல, பட்டுக் கோட்டை ''மக்கள் கவிஞன்'' என்று தமிழகம் வாயாரப் புகழத் தொடங்கியதில் ஆச்சரியப்பட ஒன்று மில்லை.

இத்தகைய கவிஞர் தமது 'பாட்டுத் திறத்தாலே' இரண்டொரு ஆண்டு களுக்குள் தமிழ்ப் பெருமக்களை ஆட்டிப் படைத்துவிட்டார் என்பது நம் எல்லோருக்கும் நன்கு தெரியும். மக்கள் கோணத்திலிருந்து பார்த் தால் ''இன்ப உருவெடுப்பது கவிதை'' என்ற கவிமணியின் வாக் குக்குப் பட்டுக்கோட்டையின் பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டு களாக விளங்குகின்றன. பாட்டின் இன்பத்தைப் பற்றிப் பட்டுக்கோட்டை யின் மதிப்பென்ன தெரியுமா?

''எத்தனையோ இன்பம் இந்த
நாட்டிலே உண்டு
அத்தனைக்கும் பெரிய இன்பம்
பாட்டிலே உண்டு''

என்கிறார். இந்த இரண்டு வரி களிலும் உணர்ச்சி பொங்கி வழிய அவர் வெளியிட்டுள்ள உண்மை, பாட்டால் அவர் அனுபவித்த இன் பத்தையும் பாட்டால் மற்றவர் அனு பவிக்க அவர் விரும்பிய இன்பத்தை யும் படம்பிடித்துக் காட்டுகிறது.

பொது மக்கள் வாழ்வில் அவ ருக்குக் கிடைத்த தெள்ளிய அனுப வமும், பாட்டின்பத்தில் அவருக் கிருந்த அழுத்தமான ஈடுபாடும் அவர் பாடல்களில் எல்லாம் உள்ளீ டாக விளங்குவதைக் காணமுடியும்.



**கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பிறந்த நாளையொட்டி (13.4.30) இக்கட்டுரை வெளியிடப் படுகிறது.**

அவர் பாடல்களில் நான் மிகச் சிறந்த இரண்டு கூறுகளைக் காண் கிறேன். ஒன்று நாடோடிப் பரம் பரை (Folk Tradition); அதாவது வழி வழி மரபு. மற்றொன்று நவீன முறையில் வெளியிடுதல் (Modern Expression); வழி வழி மரபையும் நவீன உணர்வையும் இணைத்துப் பாட்டுத் திறம் காட்டுவது இன்று மிக மிக முக்கியம்; மிக மிகத் தேவை. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்திலிருந்து விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மலிந்த தற்கால நாகரிகத்திற்கு முன்னேறிச் செல்லும் மக்களுக்கு இந்த வழி அதி முக்கியமானது. நமது நாடும் - பாரதமும் தமிழகமும்- பிற்போக்கைத் தேய்த்து முன்னேற் றத்தில் வளரத் துடிக்கும் நாடுதான். இந்த வளர்ச்சி நமது இலக்கியத் திலும் முதலிடம் பெற வேண்டும் எனச் சொல்லத் தேவையில்லை.

சராசரி மனிதனின் சாதாரண விருப்பு வெறுப்புக்களையும் மன அசைவுகள் உணர்ச்சிப் பெருக்கு களையும் எளிமையாக நேர்பாங்காக உயிர்த்துடிப்பாகச் சொல்லும் மரபே நாடோடி மரபு. இதில் சிக்கலான கருத்துக்களுக்கும், உருவங்களுக்கும் இடமில்லை. எளிய விவசாய நாகரி கத்தின் அடிப்படையான உணர்வு களை வெளியிட்டு வந்திருப்பதையே இந்த மரபில் பார்க்கிறோம்.

சிக்கல் நிறைந்த நிகழ்கால வாழ்க்கைத் தோற்றத்தை மிகச் சாதாரண கண்ணோட்டத்தில் வைத்துக் கூறுவதும், கேட்பவரின் நெஞ்சை உடனடியாகக் கவரும் விதத்தில் நேரான வழி வழியான ஆற்றலோடு வெளியிடுவதும் நாடோடி மரபின் இரட்டைக் கூறுகள்.

சிந்து, காவடிச்சிந்து, கும்மி, குறவஞ்சி, பள்ளு, ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு, கண்ணிகள் முதலிய பாடல் உருவகங்களின் தோற்றங் களும், சித்தர்கள், தாயுமானவர், இராமலிங்கனார், பாரதி, கவிமணி, பாரதிதாசன் போன்றோர் தத்துவ, சமய, லௌகிக, அரசியல், சமுதாயக் கருத்தோட்டங்களை வெளியிட மேற்படி உருவகங்களையெல்லாம் வளர்த்துப் பயன்படுத்திய முயற்சி யும் நாம் கவனத்தில் கொள்ளத் தக்கவை.

மூவருலாவையும், நைடதத்தை யும் படியுங்கள்! அதை அடுத்து பாரதியையும் பாரதிதாசனையும் படியுங்கள். சிக்கல் சிக்கலான கருத் தோட்டங்களுக்கும் உருவாக்கங் களுக்கும் காலத்தால் வளர்ந்த நாடோடி மரபுகளுக்கும் உள்ள வேற்றுமையைக் காணலாம்.

பட்டுக்கோட்டை காலக்குரலின் இந்த நாடோடி மரபுக்குத் தனி முத்திரை வைத்து ஒளிவிடுகிறார்.

*(மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் என்னும் நூலிலிருந்து)*



நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

# சென்னைத் தொலைக்காட்சி நிலைய விழா

சென்னைத் தொலைக்காட்சியின் கூடுதல் நேர மண்டல ஒளிபரப்புத்தொடக்க விழா, தொலைக்காட்சி நிலைய அரங்கில் 25-3-90 அன்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்பு-நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் திரு. உபேந்திரா அவர்கள் கூடுதல் நேர மண்டல ஒளிபரப்பைத் துவக்கி வைத்துப் பேசினார்.

விழாவில் நாட்டிய நிகழ்ச்சியும், கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவிற்குத் திருவாளர்கள்- வை.கோபால்சாமி, எம்.பி., டி.ஆர். பாலு, எம்.பி., ஆர்.கணேசன், எம்.பி., பரிதி இளம்வழுதி, எம்.எல்.ஏ., மதிவாணன், எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள், எழுத்தாளர்கள் என ஏராளமானோர் வருகை தந்தனர்.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் முழுநேர மண்டல ஒளிபரப்புத் துவக்க விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

''அன்பார்ந்த மத்தியப்பேரரசின் செய்தித்துறை அமைச்சரும், என்னுடைய அன்புச் சகோதரருமான மாண்புமிகு உபேந்திரா அவர்களே, தொலைக்காட்சி நிலையத்தின் நண்பர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டும், கண்டு கொண்டுமிருக்கின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கள் அனைவருக்கும் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி தெரிவிப்பது முதலில் யாருக்கு என்றால் தமிழுக்கு அதிக நேரத்தைத் தொலைக்காட்சியிலே இப்போது வழங்கியுள்ள மத்திய அரசுக்கும், நம்முடைய மத்திய அமைச்சர் உபேந்திராவிற்கும் ஆகும்.

தொலைக்காட்சி நிலையத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நான் அறிந்தும் - உணர்ந்தும் - கண்டும் - கேட்டும் பெருமையடைகிறேன்.

எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது-முதன் முதலாகத் தமிழ்நாட்டுத்தொலைக்காட்சி நிலையத்தில் இப்படியொரு நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்வது இதுதான். முதல் தடவை. 1973 முதல் 1975 வரையில், தொலைக்காட்சி நிலையத்தை இங்கே அமைக்க வேண்டுமென்று இடம் பார்த்துக் கொடுத்து, அதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் மாநில அரசின் சார்பாகச் செய்து, 1975-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தத் தொலைக்காட்சி நிலையம் தொடங்கி வைக்கப்பட்ட போது, அன்றைய முதலமைச்சராக இருந்த எனக்கு அழைப்பு இல்லை என்பதை நினைவு கூர்கிறேன். அந்த நாளையும், இந்த நாளையும் நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

இந்தியாவிலே, அரசியல் பண்பாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு பெரிய வளர்ச்சியை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். அந்த அரசியல் பண்பாட்டிற்குக் காரணம், இன்றைக்கு இந்தியத் திருநாட்டினுடைய தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு வி.பி.சிங் அவர்களும், நண்பர் உபேந்திரா போன்றவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது. உபேந்திரா அவர்கள் இங்கே நல்ல தமிழில் உரையாற்றினார். நானே வியக்கின்ற அளவிற்கு அருந்தமிழில் இங்கே உரையாற்றினார். நம்மையெல்லாம் அவருடைய தமிழால் திகைக்க வைத்தார். நான் அவருக்கு என்னுடைய மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைக்காட்சி நிலையத்திற்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்பு

கிறேன் உபேந்திரா அவர்கள் வாயிலாக! இந்த ஆண்டு பாவேந்தர் பாரதிதாசனுடைய நூற்றாண்டு தொடங்குகின்ற ஆண்டு. டாக்டர் அம்பேத்காருடைய நூற்றாண்டு விழா தொடங்குகின்ற ஆண்டு. ஏப்ரல் திங்கள் முதல் அந்த இரண்டு மாமனிதர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற நேரத்தில், ''புதியதோர் உலகு செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'' - என்ற எழுச்சிப் பண் பாடிய பாவேந்தருடைய கொள்கைகள் பசும் உள்ளங்களிலே கூட பதியத்தக்க வகையில் பாவேந்தரைப் பற்றிய நிகழ்ச்சிகள் அமைய வேண்டுமென்று விரும்புகிறேன்.

வகுப்புக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள், ஆண்டவன் சன்னிதானத்தின் முன்னால் அனைவரும் சமம் என்ற கருத்துக்கு மாறுபாடான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற இந்த நேரத்தில்-அம்பேத்கார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் போது மக்களுக்குச் சமத்துவ நோக்கம், சமதர்ம நோக்கம், இதயத்திலே பதியத்தக்க வகையில் நிகழ்ச்சிகளை வகுத்து, இந்த நூற்றாண்டு விழாவை இந்தத் தொலைக்காட்சி நிலையம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்; பயன்படுத்தும் என்று நம்புகின்றேன்; பயன்படுத்துவோம் என்று உறுதி கூறுகின்றேன்.''

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

—இந்த விழாவின் தொடக்கத்தில், தொலைக்காட்சி நிலையப் பொது இயக்குநர் பொறுப்பு வகிக்கும் திரு. எஸ்.கே. கபூர் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் - தலைமைப் பொறியாளர் திரு. ஓ.பி. குஷ்ரு நன்றி கூறினார்.




நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதிலும், வளர்ச்சிப் பணிகளிலும் தொலைக்காட்சி முக்கியப் பங்காற்ற முடியும். சென்னைத் தொலைக் காட்சியில் முழுநேர மண்டல ஒளிபரப்பு செய்வதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள மக்களுக்குக் கல்வியறிவைப் பெருக்குவதற்கும், அன்றாடச் செய்திகளை அளிப்பதற்கும் மேலும் வாய்ப்பேற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இந்த மின்னணுத் தகவல் தொடர்புச் சாதனங்கள் குறுகிய நோக்கில் தவறாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, அவற்றின் நம்பகத்தன்மை அழிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில், கடந்த காலத்தில் செய்யப்பட்ட தவறுகள் மீண்டும் நடைபெற அனுமதிக்கமாட்டோம். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், நாடாளுமன்றத்தில் 'பிரச்சார் பாரதி மசோதா' அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம், மின்னணுத்தகவல் தொடர்புச் சாதனங்கள் அரசுக் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுபட்டு, சுதந்திரமாகச் செயல்படும்.

—திரு. உபேந்திரா
மாண்புமிகு செய்தி-ஒலிபரப்புத்துறை அமைச்சர்,

(25.3.90 அன்று சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் ஆற்றிய உரையிலிருந்து)



ஓர் உத்தமமான சமூக அமைப்பில் எல்லாருக்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் தொடர்பு ஏற்பட பலதிறப்பட்ட மார்க்கங்களும், சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும். அதாவது, சமூகத்தில் அங்கம் பெற்ற உறுப்பினர்கள் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்கு சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம்.

— டாக்டர் அம்பேத்கார்

## இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :



# சுற்றுலாப் பொருட்காட்சி

# நிறைவு விழா

சென்னை தீவுத் திடலில் நடைபெற்று வந்த 16வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா, 31.3.1990 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் - மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இரா.அன்பரசு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திரு. ரகுமான்கான், திரு. அப்துல் லத்தீப், திரு. மதிவாணன், ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசியதாவது:

''இங்குள்ள குடிநீர் வழங்கு துறை அரங்கத்தை நான் பார்த்தேன். சென்னைக்கு, தெலுங்கு கங்கைத் திட்டத்தின் கீழ் குடிநீர் இன்னும் மூன்றாண்டுகளில் வர இருக்கிறது. இப்போது உள்ள குழாய்கள் எல்லாம் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முந்தையது. அவற்றை மாற்ற வேண்டும். 1992-இல் அந்தப் பணியைச் செய்தால், மக்கட் தொகைப் பெருக்கம் காரணமாக யாரும் நடமாட முடியாது. எனவே இந்த ஆண்டே அதற்கான பணிகளுக்குத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இதற்காக அதிகாரிகள் வாஷிங்டன் சென்று உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து வந்துள்ளனர்.

இந்தப் பொருட்காட்சியின் மூலம் ரூ.26 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது. 75 இலட்சம் பேர் கண்டு களித்துள்ளனர்.

மகாபலிபுரம், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் ஆகியவற்றுக்கு இணையான இடம் உலகில் எங்கும் கிடையாது. அங்கு செல்வதற்கான சாலைகளைத் தேசிய அளவுக்குத் தரம் வாய்ந்ததாக ஏற்படுத்த வேண்டும்.

நமது மூலதனம் திராவிட கலாச்சாரம்தான். தஞ்சாவூரிலிருந்து கும்ப

கோணம் வரை நிறைய கோவில்கள் உள்ளன. எனவே ''திராவிட கலாச் சார சுற்றுலா'' தொடங்க வேண்டும்.

சென்னை நகரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என அன்பரசு எம்.பி. கேட்டுக் கொண்டார். முன்பு பிரதமர் ராஜீவ் காந்தி கல்கத்தாவுக்கும், பம்பாய் நகருக்கும் கோடிக் கணக்கில் பணத்தை வாரிக் கொடுத்தார். சென்னை நகரைப் புறக்கணித்து விட்டார். இப்போது நமக்கு உரியதைப் பெற நாம் போராட வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை, எங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை தமிழ்நாட்டுக்காக, தமிழ் மண்ணுக்காகத்தான் இருப்போம். இதுவரையில் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சியை மைய அரசு புறக் கணித்தே வந்திருக்கிறது. இனிமேல் தமிழகத்திற்குச் சேரவேண்டிய உரி மைகளைப் பெற்றுத்தர முயற்சி செய்வேன்.

இங்கே நிரந்தரப் பொருட்காட்சி வேண்டும் என்றார்கள். நல்ல கொள்கை; அதே சமயம்-தோல் தொழில், கைத்தறித் தொழில் ஆகிய வற்றில் நாம் சிறந்து விளங்குகிறோம். எனவே, தொழில் பொருட்காட்சி யையும் இணைத்து நிரந்தரமாக்க வேண்டும்.''

மாண்புமிகு அறநிலையம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் தமது தலைமை உரையில் குறிப் பிட்டதாவது:

''கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் தேதியன்று முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பொருட்காட்சி யைத் தொடங்கி வைத்தார். நூறு நாட்களாக இந்தப் பொருட்காட்சி சிறப்பாக நடந்திருக்கிறது. அற நிலையத்துறை அரங்கு மட்டும் ரூ.6 இலட்சம் செய்து அமைக்கப்பட்டது. அதை இனி பிரிக்க வேண்டும். இதுபோன்ற நிலைமைகளை மாற்றவே நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கத் திட்டமிடுகிறோம்.

''முதல்வர் கலைஞரும் கொள்கை அளவில் அதை ஏற்றுள்ளார். ஒவ்வொரு துறைக்கும் 10 ஆண்டு செய்யும் செலவுகளை வழங்கினால் போதும்; நிரந்தரக் கட்டடம் அமைத்து விடலாம்.

## அம்பேத்கார் பொன்மொழி

● சமூக சீர்திருத்தத்திற்கு உள்ள வழி இந்தியாவைப் பொறுத்தவரையில் - சுவர்க்கத் திற்கு உள்ள வழிபோலக் கரடுமுரடானது; சங்கடமானது; ஆபத்துகள் நிறைந்தது.

● இந்தியாவில், சமூக சீர்திருத்தத்திற்கு நண்பர்கள் சிலரே; எதிரிகளோ அதிகம்! எதிரிகள் இருவகை; ஒரு கூட்டத்தார் அரசியல் சீர்திருத்தக்காரர்; மற்றவர்கள் அபேதவாதிகள்.

● இந்திய சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டுமானால், அரசியல் சீர்திருத்தத்திற்குமுன் - சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்னும் எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது.

இதை இன்னும் சிறப்பான முறையில் எப்படி அமைக்கலாம், ''அம்யூஸ்மெண்ட் பார்க்'' எந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பது பற்றி எல்லாம் முடிவு செய்ய டெல்லியிலிருந்து ஒரு ''ஆர்க்கி டெக்ட்'' வந்து பார்த்துச் சென்றார்.

அவர் ''டெல்லியில் பிரஹதி மைதானத்தில் இப்படி ஒரு பொருட் காட்சி இருப்பதாகவும், தமிழக அரசு சார்பிலும், அங்கு ஒரு கட்டடம் உள்ளது'' என்றும் கூறினார்.

டெல்லியில் 100 ஏக்கர் நிலத் தில் உள்ள அந்த அமைப்பை விட இங்கு 22 ஏக்கர் நிலத்தில் 2 மடங்கு வசதியுடன் அமைத்துத் தருவதாக அவர் சொல்லி இருக்கிறார்.

அதற்கான பிளான் விரைவில் வந்து சேரும். இந்த ஆண்டு ஒரு பகுதியிலாவது நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டும் என்று இருக்கிறோம்.

இன்னும் நான்கைந்து ஆண்டு களில் தமிழகத்தை, சுற்றுலாத் துறை யில் இந்தியாவில் உள்ள வேறு மாநி லங்களுக்கு இணையாக-அல்லது அதற்கு ஒருபடி மேலாகச் செய்யப் பல்வேறு பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

இந்தப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த அரசுத் துறை அரங்கங்களிலேயே சிறந்த அரங்க மாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தீய ணைப்புத் துறை அரங்கத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. இப் பொருட்காட்சியைச் சிறப்பாகக் கண் காணித்துக் காவல் பணிபுரிந்தமைக் கான சிறப்புப் பரிசும் தீயணைப்புத் துறைக்கு வழங்கப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறை - கிராமப் புற வளர்ச்சித்துறை ஆகியவற்றுக்கு இரண்டாவது பரிசுகளும், பட்டு வளர்ச்சித்துறை அரங்கிற்கு மூன்றா வது பரிசும் வழங்கப்பட்டது.

அரசு சார்பு நிறுவனங்களில் - வீட்டு வாரிய அரங்கு, சென்னைக் குடிநீர் அரங்கு, தமிழ்நாடு குடிநீர் வாரிய அரங்கு ஆகியவை பரிசுகள் பெற்றன.

சிறந்த அலங்காரத்திற்கான பரிசுகள் அறநிலையத்துறை, சுற்றுலாத் துறை, இந்திய மருத்துவம், ஆகிய அரங்குகளுக்கும், தனியார் அரங்கு களில் சிறந்தவற்றுக்கான பரிசுகள் அரியானா கைத்தறி, யூனியன் ஃபோம், பூபதி ஆகியவற்றுக்கும் - சிறந்த அலங்காரத்திற்கான பரிசுகள் நியூ பாம்பே சூப்பர் பஜார், ஸ்ரீராம் எக்ஸ்போர்ட் கார்மென்ட்ஸ், வசந்த் அண்ட் கோ அரங்குகளுக்கும் வழங்கப்பட்டன.

துப்புரவுப் பணிக்காகவும், நுழை வாயில் அலங்காரத்திற்காகவும் சென்னை மாநகராட்சிக்குச் சிறப்புப் பரிசு அளிக்கப்பட்டது.

விழாத் தொடக்கத்தில், செய்தி-சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை யாற்றினார்; விழா முடிவில், தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சுந்தர்ராஜ் நன்றி கூறினார்.

—பி.எல்.ஆர்.

# தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

## திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இந்த வருடாந்திரக் கூட்டத்தில், வேளாண்மை ஆராய்ச்சி பற்றியும், வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு பற்றியும் சில கருத்துக் களைத் தங்கள் மேலான கவனத் திற்குக் கொண்டு வந்து இந்தக் கருத்தை மாண்புமிகு துணைப் பிரதமர் சீர்தூக்கிப் பார்த்து நடை முறைப் படுத்த வேண்டுகிறேன்.

**வேளாண்மைக் கல்வி**

தமிழகத்தில் வேளாண்மை உற் பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற குறிக்கோளில், புதிதாக இரண்டு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கிள்ளிகுளத்திலும், குமுளூரிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்லூரிகளுக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திடமிருந்து எந்த நிதி உதவியும் கிடைக்கவில்லை. இக்கல்லூரிகளில் கல்விமுறையை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேம்படுத்த எண்ணியுள் ளோம். இதற்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நிதி உதவி கோரப் பட்டும் கிடைக்கவில்லை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்தில் படிக்க, மத்திய அரசு பரிந்துரை செய்யும் 10 சத விகித மாணவர்களையும் நாங்கள் சேர்த்துக் கொள்கிறோம். இந்த நிலையில் எங்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் தின் நிதி உதவி கிடைக்காமல் இருப்பது வருந்தத் தக்கதாக உள்ளது. வேளாண்மை உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட, பாடுபட்டு வரும் நமது துணைப் பிரதமர் அவர்கள் எங்கள் கோரிக்கையினை ஏற்று, வேளாண்மைக் கல்லூரிகள் இரண்டுக்கும் இந்திய



வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் தின் நிதி உதவி வழங்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மையும் அதைச் சார்ந்த துறைகளான தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மீன் அறிவியல், வனவியல் மற்றும் கால்நடைப் பட்ட தாரிகளுக்கு வயல்வெளியில் ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிக்கப்பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எனவே இளம் வேளாண் அறிவியல் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்குக் கடைசி இரண்டு ஆண்டுகளில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப பாடங்களில் பயிற்சி அளிக்க ஆராய்ச்சிக் கூடங்கள் நவீனப் படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்வதால், மாணவர்களுக்கு நம் பிக்கை ஏற்பட்டு, வேளாண்மை சார்ந்த சுய தொழில்களைச் செய்ய ஏதுவாக இருக்கும்.

ஆகையால், வேளாண்மைக் கல்லூரிகளிலும் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையங்களில் பயிற்சிக் கான கட்டமைப்புகளை உருவாக்கு வதற்கும் முன்னோடிக் களங்கள் அமைப்பதற்கும் மற்றும் ஆய்வுக் கூடங்களை நவீனப்படுத்துவதற்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நிதியுதவி செய்ய வேண்டும். இக்கட்டமைப்புகளைக் கொண்டு வேளாண் தொழில் முனைபவர்க்கு விதை உற்பத்தி, நாற்று மேலாண்மை, உயிர் உரங்கள் தயாரித்தல், காளான் உற்பத்தி, கறிக் கோழி உற்பத்தி, மீன் பண்ணை அமைத்தல், பயிர் திசு வளர்ப்பு மூலம் பயிர்களை உருவாக்குதல், பட்டு வளர்ப்பு மற்றும் ஒட்டுண்ணிகள் மூலம் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத் துதல் போன்ற துறைகளில் பயிற்சி கொடுக்கலாம்.

வளர்ச்சி அடைந்த பல மேலை நாடுகளில் கம்ப்யூட்டர் வேளாண்மைக் கல்வியில் முக்கிய இடம்பெற்று விட்டது. இளம் அறிவியல் மற்றும் முதறிவியல் வேளாண்மைப் பட்ட தாரிகளுக்கு கம்ப்யூட்டரைப் பண்ணைத் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி வேளாண்மை ஆகியவற்றிற்குப் பயன்படுத்த பயிற்சி அளிக்கப் படுகின்றது. இதே போன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழக மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க எண்ணியுள்ளோம். இதற்கும் போதிய அளவில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவி தேவைப்படுகிறது.

நமது வேளாண் பட்டதாரி களுக்கு வயல்களில் ஏற்படும் பிரச்னை களை மிகத் துல்லியமாக ஆராய்ந்து, விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கும் பொருட்டு மாணவர்களுக்கு நவீன கருவிகளைக் கொண்டு தொழில் கூடங்களை நிறுவி, பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருவி

களை வாங்கவும், ஆராய்ச்சிக் கூடங்களை மேம்படுத்தவும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி கொடுக்க வேண்டும்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், வேளாண்மைப் பட்டதாரிகள் மண் நலம், பயிர் நலம் மற்றும் கால்நடை நலன்களில் பயிற்சி பெற்று அதனால் மண், பயிர், கால்நடை நலப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். உயர்தொழில் நுட்பமுடைய வேளாண்மை விஞ்ஞானிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு ஒளி, ஒலி பயிற்சி சாதனங்களைக் கொண்டு பாடம் கற்பிக்கப்பட்டால், கல்வி முறையை இன்னும் மேம்படுத்தலாம். இது போன்ற பயிற்சிகளைத் தகுந்த இடைவெளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளித்தால் சிறப்பாக இருக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.



### ஆராய்ச்சி

நடைமுறையில், அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித்திட்டங்கள் இயங்கும் அனைத்து ஆராய்ச்சி மையங்களுக்கும் 75 சதவீத நிதி உதவியை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகம் செய்து வருகின்றது. கிடைக்கக் கூடிய பொருட்களும் மற்றும் ஆராய்ச்சி தகவல்களும் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள அனைத்து மையங்களுக்கு இடையே பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

ஆகையால், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் 100 சதவீத நிதி உதவி செய்ய வேண்டும்.

நமது நாட்டில் பயறு வகைகள் உற்பத்தி போதிய அளவு அதிகரிக்கப்படவில்லை. எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு ஏற்படுத்தியது போன்று, ஒரு தொழில் நுட்ப முனைப்புத் திட்டத்தைப் பயறு வகைப் பயிர்களுக்கும் விரிவுபடுத்தலாம். எனவே, பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேளாண் விஞ்ஞான நுட்ப அமைப்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறவை சாகுபடியில் அதிக அளவு ரசாயனப் பொருட்களான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை நாட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசுபடுத்துகின்றன. நிலம் பயன்படுத்தும் முறையைத் துரிதப்படுத்த, அதிக அளவிற்கு நீர் மற்றும் நில ஆதாரங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு நிலம் பயன்படுத்தும் முறையில் சுற்றுப்புறச் சூழ்நிலையை முக்கியமாகக் கொண்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தற்போது மூல விதை உற்பத்திக்கு-குறிப்பாகப் பயறு வகைப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் காய்கறி விதை உற்பத்திக்கு மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றது. இத்திட்டம் அனைத்துப் பயிர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டால் விவசாயிகள் புதிய ரகங்களின் விதைகளையும் ஒட்டு ரகங்களின் விதைகளையும் வெகு விரைவில் பெற முடியும்.

தமிழ்நாட்டில் வாழை பல்வேறு சூழ்நிலைகளில் சமவெளி மற்றும் மலைப்பகுதிகளில் தோட்டக் காலிலும், மானாவாரியாகவும் சாகுபடி செய்யப்படுகிறது. வர்த்தக ரீதியான வாழைப்பழ வகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு, பல மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் குழு ஒன்று தமிழ்நாட்டில் பல இடங்களைப் பார்வையிட்டு, வாழை திருச்சி மாவட்டத்தில் சிறப்பாகவும் பெருவாரியாகவும் சாகுபடி செய்யப்படுவதைக் கண்டறிந்தது. அதனால், உத்தேசிக்கப்பட்ட தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தை திருச்சி மாவட்டத்தில் அமைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மாநில அளவில் பூச்சி நோய் கண்காணிப்புத் திட்டம் 1983-84 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு உள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் தோட்டக்கலைத் துறையும் இணைந்து இத்திட்டத்தைச் செயலாற்றுகின்றன. ஒவ்வொரு வாரமும் 7,200 மையங்களில் பூச்சி நோய்க் கண்காணிப்பு நடைபெற்று விவரங்கள் சேகரிக்கப்பட்டு, பூச்சி நோய்களைக் குறித்து முன்னறிவிப்புச் செய்யும் ஒருமுறை

செயல்பெற்று வருகிறது. இதை மேலும் திறம்பட நடத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் தலைமையிடத்திலும் வானிலை மையங்கள் ஒரு வேளாண் அலுவலர் தலைமையில் நிறுவப்பட வேண்டும். வானிலை மையத் தகவல்கொண்டு பூச்சி நோய்கள் வருவதை முன்னறிவிப்பு செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதனால், தேவையற்ற அளவில் பூச்சி மருந்துகளை உபயோகிப்பது தவிர்ப்பதோடு, சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.

கரிசல் மண்ணில் மானாவாரி சாகுபடிக்கு அனைத்து வேளாண்மை விஞ்ஞான நுட்பங்களை விவசாயிகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் அளித்துள்ளன. ஆனால், செம்மண் மானாவாரி சாகுபடிக்கு எந்தவிதமான விஞ்ஞான நுட்பங்களும் இதுவரை இல்லை. தமிழ்நாட்டில் சுமார் 60 சதவிகிதத்திற்கு மேல் செம்மண் நிலங்களே உள்ளன. அதனால், செம்மண் மானாவாரி சாகுபடிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையத்தைத் தமிழ்நாட்டில், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கலாம். சேலம் மாவட்டத்தில் 75 சதவிகிதத்திற்கு மேல் செம்மண் நிலங்களே உள்ளன.

**விரிவாக்கம்**

'கே.வி.கே' எனப்படும் 'கிருஷி விஞ்ஞான் கேந்திரா' - அதாவது வேளாண்மை அறிவியல் நிலையம் உழவர் பெருமக்களுக்குத் தேவையான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பின் தகவல்களையும், பயிற்சிகளையும் அளித்து சிறந்த சேவை செய்கின்றது. இதனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கே.வி.கே. நிறுவப்பட வேண்டும். இந்த 'கே.வி.கே' வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் நடத்த ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

ஏனென்றால், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்தான் பல புலங்களின் ஆராய்ச்சியும் விஞ்ஞானிகளின் சேவையும் மிகுந்து இருக்கின்றன. வேளாண்மை தொழில் நுட்பங்கள் உழவர்களுக்கு விரைவாகச் சென்றடைய தகவல் தொடர்பு வழிமுறைகளை மேம்படுத்த வேண்டும். தொலைக்காட்சி வாயிலாக ஒலி, ஒளிபரப்பு, வீடியோ நாடாக்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நிதி உதவி அளிக்க வேண்டும். முன்னேற்றப் பண்ணைத் தொழில் நுட்பங்களை வழங்கவும் உழவர்களுக்குத் தொழில் திறனை பயிற்றுவிக்கவும் ஒவ்வொரு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள கல்லூரிகளில் தகவல் தொடர்பு மையங்கள் அமைக்க நிதி உதவி செய்திட வேண்டும்.

தமிழ்நாட்டு விவசாயிகள் மட்டுமல்ல; இந்திய விவசாயிகள், இந்தியப் பிரதமர் மாண்புமிகு வி.பி.சிங் அவர்களையும், துணைப் பிரதமராகிய தங்களையும் இன்றைய விவசாயிகள் நம்பிக்கை நட்சத்திரமாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து நான் எடுத்து வைத்துள்ள கருத்துக்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*—14.3.1990 அன்று, புதுடில்லியில் மாண்புமிகு துணைப்பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்திய வேளாண்மை வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரை.*


தொலைபேசி: 7036
7037
7038
தந்தி: ''டேன்மாக்''
டெலக்ஸ்: 450-223

TANMAG

**தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

5/53, ஓமலூர் மெயின் ரோடு
ஜாகீர் அம்மாபாளையம்,
சேலம் - 636 302

கச்சா மேக்னசைட்,
சூடேற்றிச் சுத்தம் செய்யப்பட்ட

டெட்பர்ண்ட் மேக்னசைட்
மிதமாகச் சூடேற்றப்பட்ட

காலசியண்டு மேக்னசைட்
போன்றவைகளின் தேவைக்கு
எங்களை அணுகவும்

DIPR/526/MS/90/MCS



# படமும் செய்தியும்

▲ மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மாண்புமிகு மத்திய உணவு அமைச்சர் திரு. நாதுராம் மிர்தா அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் உடன் உள்ளார் (30.3.90)

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற துணைப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் பி.எச்.டி. பட்டங்களை வழங்கினார். (30.3.90) ▼







சென்னை மைலாப்பூர் சார்பதிவக வளாகத்தில் நடைபெற்ற தமிழக அரசு பதிவுத் துறையின் 125-வது ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். கணபதி, வருவாய்த் துறைச் செயலர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் திரு. நா. ஆதிமூலம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (25.3.90) ▲

செங்கை-அண்ணா மாவட்டம், அச்சிறுப்பாக்கத்தில் நடைபெற்ற நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 94-வது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் நலிந்தோருக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் உடன் உள்ளார். (24.3.90) ▼



TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தேர்வாணையத்தால் 1990-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ஆம் நாள், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தமிழ்நாடு ஆவணகாப்பகத்தில் உதவிப் பதிப்பாசிரியர் பதவிக்கு நேரடி நியமனத்திற்காக நடத்தப்பட்ட சுருக்கப் பட்டியல் தேர்வு முடிவின் அடிப்படையில், தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்ப தாரர்களின் பதிவு எண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு, சென்னை-600 002, அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **35** | **36** | **38** | **57** | **67** | **68** | **74** |
| **79** | **81** | **92** | **94** | **111** | **112** | |

**செயலாளர்**

DIPR/651/MS/90/IAC

## தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் டிபிடி 82 கிருட்டிணகிரி - 635002

"ஆரோக்கியமான வாழ்விற்கு

# ஆவின் பால்

பால் உப பொருட்களை வாங்கி உபயோகியுங்கள்"

தருமபுரி மாவட்டத்தில் மேன்மேலும் தொழில் வளம் பெருகி நலிவுற்ற மக்கள் மேம்பட எங்களது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

கிராமப்புறத் தொழில் வளம் பெருக்கப்பாடுபடும்

தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கிருட்டிணகிரி-2

**டாக்டர் ஆர். சாலமோன், பி.வி.எஸ்.சி.,**
நிர்வாக இயக்குநர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**கே. அலாவுதீன் I.A.S.**
மாவட்ட ஆட்சித் தலைவர்/ஒன்றியத் தலைவர்



# வைகை நுண்புனல் மின் நிலையம்

மதுரை மாவட்டத்தில் ஆண்டி பட்டி வட்டத்தில்- மதுரையில் இருந்து சுமார் 70 கிலோமீட்டர் தொலைவில்- வைகை நுண்புனல் மின்திட்டம் அமைந்துள்ளது.

1958-ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் வேளாண் மைக்காக வைகை ஆற்றின் குறுக்கே வைகை அணை கட்டப்பட்டது. மின் உற்பத்தி செய்வதற்காக 3.05 மீட்டர் விட்டமுள்ள இரண்டு நீர் அழுத்தக் குழாய்கள் அணை கட்டும்பொழுதே பதிக்கப்பட்டன. வைகை அணை யில் நீரின் உயர்மட்ட அளவு 27.54 மீட்டராகும். இதுகாறும் இவ்வணை யிலிருந்து வெளியேறும் நீரைக் கொண்டு வேளாண்மை மட்டுமே செய்யப்பட்டது. மின்சாரம் உற்பத்தி செய்யப்படவில்லை. இப்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ள நுண் புனல் மின் நிலையம், அணையி லிருந்து வெளியே செல்லும் நீரில் 1,400 கன அடியை மின்உற்பத்தி செய்யப் பயன்படுத்தும்.

இவ்வணையின் அடிவாரத் திலேயே அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையத்தில் மூன்று மெகாவாட் திறன் கொண்ட இரண்டு நுண் மின்உற்பத்திக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. மின்உற்பத்தி செய்த பிறகு வெளியேறும் நீர் மறுபடியும் வைகை ஆற்றிலேயே விடப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுகிறது. மூன்று மெகாவாட்திறன் கொண்ட இவ் விரண்டு உற்பத்திக் கலன்கள் மூலம் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 223 இலட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் எனத் திட்ட மிடப்பட்டுள்ளது. ஜப்பானிய ''யென்'' நாணயம் மூலம் ''ஓவர்சீஸ் எகா னாமிக் கோவாப்பரேசன் ஃபண்ட்'' என்றழைக்கப்படும் (OECF) நிறுவனம் அளித்துள்ள கடன் வசதியினால் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்மின் நிலையத்திற்கான மின் உற்பத்திக் கலன்களை வழங்கி அதனை நிறுவுவதற்கான மேற்பார்வை உதவியையும் ஈந்தவர்கள் ஜப்பான் நாட்டின் டோயோ மென்கா கெஷா லிமிடெட் நிறுவனத்தினர் ஆவர். இந்தியாவில் இவர்களது பிரதி நிதிகள் சென்னையிலும், புதுடெல்லி யிலும் உள்ள விர்கோ மார்க் கெட்டிங் பிரைவேட் லிமிடெட் நிறு வனத்தினர் ஆவர்.

இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 1987-ஆம் ஆண்டு ஜூன் மாதம் துவக்கப்பட்டு 1990-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் முடிக்கப் பட்டன. சோதனை ஓட்டம் மற்றும் ஆய்வுகளுக்குப் பிறகு இம்மின் நிலையம் 4.3.1990 அன்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச் சரால் துவக்கி வைக்கப்பட்டது.

இம்மின்நிலையத்தின் உற்பத்தித் திறனாகிய ஆறுமெகாவாட் என்பது, சுமார் 8,000 குதிரைவேக சக்தி வாய்ந்த மோட்டார்களை இயக்கப் போதுமான சக்தியாகும். இந்த மின் கலங்கள் நீர் சக்தியைக் கொண்டு இயக்கப்பட்டு, மின்சாரம் 3,300 வோல்ட் மின் அழுத்தத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, பிறகு மின்மாற்றிகள் மூலம் 22,000 வோல்ட் உயர் மின் அழுத்தமாக அதிகரிக்கப்பட்டு ஆண்டிபட்டி உபமின்நிலையத் திற்குக் கம்பிகள் மூலம் அனுப்பப் படுகிறது.

பொதுவாக மின்உற்பத்தி செய் யும் புனல் மின் நிலையங்கள் உயர்ந்த மலைத்தொடர்களின் மத்தி யிலோ அல்லது மலை அடிவாரங் களிலோ இருப்பதால், அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் நீண்ட தொலைவில் உள்ள நகர்களுக்கும், நகர்ப்புறக் கிராமங்களுக்கும் மற்றும் மின்பழு அதிகம் உள்ள தொழில் நகரங்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட உபமின்நிலையங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுவதால் அதிக பொருட் செலவும், மின் அழுத்தக்குறைவும் (Voltage Drop) ஏற்படுகிறது. இது சாதாரணமாக புனல் மின்திட்டங் களில் தவிர்க்க முடியாததொன்று.

ஆனால், இந்த நுண்புனல் மின்நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் மின்நிலையத்திலிருந்து 22 கி.வோ. (22,000 வோல்ட்) விநியோகக் கம்பிகளின் மூலம் நேரடியாக சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆண்டி பட்டி உபமின்நிலையத்திற்கு அனுப் பப்பட உள்ளதால் அதிலிருந்து அதன் சுற்றுப்புறங்களில் உள்ள வருசநாடு, சிலுக்குவார்பட்டி, குள் ளப்புரம், ஜெயமங்கலம், வடுகப் பட்டி, துலுக்கப்பட்டி, ஏ.புதுப்பட்டி, தேவதானப்பட்டி முதலான முப்ப துக்கும் மேற்பட்ட கிராமங்களும் ஊர்களும் அடங்கிய ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி வட்டங்களுக்கும் மின்அழுத்தக் குறைவற்ற மின்சாரம் விநியோகிக்கப்பட இயலும். மின்சார



மோட்டார் சாதனங்கள் நன்றாக இயங்குவதுடன் அவற்றுடன் இணைக்கப்பட்ட பம்புகளும் நீர் தடையின்றி செயல்பட உதவும். மின்விளக்குகள் மின்அழுத்தக் குறைவின்றி எரியும். தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் சீராக இயங்கவும் உதவும். மேலும் இந்த மின் நிலையத்திலிருந்து கிடைக்கப் பெறும் கூடுதல் மின்சாரத்தினால் சிறுதொழில்கள் மற்றும் புதிய ஆக்கப்பணிகள், இப் பகுதியில் தங்கு தடையின்றிப்பெருக வழிவகை ஏற்படும்.

*தகவல்: ரெ. இராவணன்,*
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*மதுரை மாவட்டம்.*

---

# மதுரை மாவட்ட ஆவணக் காப்பகம்

மதுரை மாவட்ட ஆவணக்காப்பகம் 25-3-1982 முதல் இயங்கி வருகிறது. இக்காப்பகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில் தற்போது இயங்கி வருகிறது.

இக்காப்பகத்தில் ஆவணங்கள் சேகரிக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இதுவரை 186 அலுவலகங்கள் ஆவண சேகரிப்புப் பணிகளுக்காகத் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை நிலையான முடிவு ஆவணங்கள் 63,731 எண்ணிக்கையும், புத்தகங்கள் 3,653 எண்ணிக்கையும் பெறப்பட்டுள்ளன. இந்த ஆவணங்களுக்கு இதுவரை 37,828 அட்டவணைத் துண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மிகப் பழைய ஆவணமாகக் கருதப்படும் ஒரு ஆவணம் 1893 ஆம் ஆண்டைச்சேர்ந்தது. ஆவணங்கள் செப்பனிடும் பணிகளும் புத்தகம் கட்டும் பணிகளும் தொடரப்பட்டுள்ளன.

சிறப்பாக இக்காப்பகத்தில் மோடி ஆவணங்கள் (கையெழுத்துப் படிகள்) 82 கட்டுகள் முன்னாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமாகப் பெறப்பட்டுப்பாதுகாக்கப்படுகின்றன. இவை இம்மாவட்டம் பற்றிய ஆராய்ச்சிக்குப் பயன்படலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மூலம் அந்நாளைய ஜமீன்தார்கள் மற்றும் பலதரப்பட்ட குடிமக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள், பொருளாதார நிலை முதலியவற்றை அறிய வாய்ப்புள்ளது.

இதுவரை 4 ஆண்டுகளில் (84 முதல் 87 வரை) 23 ஆராய்ச்சியாளர்கள் இக்காப்பகத்திலிருந்து தாங்கள் மேற்கொண்ட பொருள் குறித்த ஆராய்ச்சிக்கு இக்காப்பக ஆவணங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

—மு.சீதாராமன்,
கண்காணிப்பாளர்
மதுரை மாவட்ட ஆவணக் காப்பகம்.

பயன் அடைந்தோர் பகர்வன:

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்

# பெரியார் மாவட்டத்தில்...

தமிழ்நாடு அரசின் ஏழைகளை வாழ வைக்கும் சமுதாய நலத் திட்டமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்டத்தில் இதுவரை 411 பேர்களுக்கு ரூ.20.55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 125 பேர்களுக்கு ரூ.6.25 இலட்சம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தம் மகளுக்குத் திருமணம் செய்துவைக்க வழியில்லையே என்று புலம்பித் தவித்த பெற்றோர்க்கு, அவர் தம் எண்ணம் ஈடேற தமிழ்நாடு அரசு உருவாக்கிய சமுதாய நலத் திட்டம் தான் இத்திருமண நிதியுதவித் திட்டம்.

இந்நிதியுதவி பெற்றுத் திருமணம் புரிந்து கொண்டவர், பெரியார் மாவட்டம் தாளவாடி மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்த திருமதி காளம்மாள். இவர் தாளவாடி மலைக் கருகிலுள்ள முதியனூர் கிராமத்தைச் சார்ந்தவர். 21 வயது நிரம்பிய இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ளார். இவரது தந்தை திரு ராமையாவும், தாய் திருமதி செல்வியும், விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். இதில் மூத்த மகள் தான் காளம்மாள். மணமகன் திரு மாதையா, கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த சாத்தையன்புரம் என்ற கிராமத்தைச் சார்ந்தவர். இவரும் ஒரு விவசாயக் கூலி ஆவார்.

தனது திருமணம் நிகழ்வுற்றது குறித்து திருமதி காளம்மாள் கூறும்போது, ''சொற்ப வருமானத்தில் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தோம். எனது திருமணம் குறித்து எண்ணிப் பார்க்கவே முடியாத நிலை இருந்து வந்தது. இந்த நிலையில், அரசு அறிவித்துள்ள இந்த அருமையான திட்டம் குறித்து, தாளவாடி கிராமசேவக் மூலம் அறிந்து விண்ணப்பித்தோம். அரசின் கருணைத் தொகையான ரூ.5,000 எனது திருமணக் கனவை நனவாக்கியது. இன்று நானும் சமுதாயத்தில் மன நிறைவோடு தலை நிமிர்ந்து வாழ்ந்திட எனது வாழ்க்கைக்கு வழிகாட்டிய தமிழ்நாடு அரசுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் என்றும் நன்றியுணர்வோடு இருப்பேன்'', என்றார்.

பெரியார் மாவட்டம் மூலனூர் ஊராட்சி ஒன்றியம் சம்மங்கரை கிராமத்தைச் சார்ந்தவர் திருமதி எஸ். சௌந்திராள். இவருக்கு வயது 19. இவர் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். இவரது தந்தை திரு சுந்தரராஜ். தாயார் திருமதி பழனியம்மாள். தந்தையும் தாயும் விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும், ஓர் ஆண் குழந்தையும் உண்டு. அந்தப் பெண் தான் சௌந்திராள். மணமகன் திரு ராஜு; இவரும் விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றார்.

திருமதி சௌந்திராள் தனது திருமணம் நடைபெற்றது குறித்துக் குறிப்பிடும்போது, ''விவசாயக் கூலி வேலை செய்து சாப்பாட்டுக்கே கஷ்டமான நிலையில் இருந்தோம், ஏதோ ஓரளவு எனக்குப் படிப்பு கிடைத்தது. எனது தம்பியைப் படிக்க வைத்து வருகின்றோம்.



திருமதி சௌந்திராள்

இந்த நிலையில் எனக்குத் திருமணம் என்பது நினைக்க முடியாத ஒன்றாக இருந்தது. அரசு அறிவித்துள்ள இந்தத் திருமண நிதியுதவித் திட்டம் குறித்து ஊராட்சி ஒன்றியம் மூலமாக அறிந்து கொண்டேன். இதற்கு விண்ணப்பித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 5,000 ரூபாய் பெற்று எனது திருமணம் நடைபெற்றது. என்னைப் போன்று வசதியற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத நிலையில், திருமணத்திற்கு என்று 5,000 ரூபாய் வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி கூறுகிறேன்'' என்றார்.

இவரது தந்தை திரு சுந்தரராஜ் இத்திட்டம் பற்றிக் கூறுகிறார்: ''இத்திருமண நிதியுதவி கிடைக்க வில்லையென்றால் இவ்வளவு

திருமதி காளம்மாள் கணவர் மாதையாவுடன்.



சீக்கிரம் என் மகளுக்குத் திருமணம் செய்திருக்க முடியாது. கஷ்டப்பட்டு அதிக வட்டிக்குக் கடன் வாங்கித் தான் கல்யாணம் செய்திருக்க வேண்டும். ஏழைக் கூலி விவசாயி ஆகிய நான் கடன்காரன் ஆகாமல் என் ஒரே மகளுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளேன். என்னை இன்று சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நடக்கச் செய்திருக்கும் தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார் மகிழ்ச்சியுடன்.

**தகவல்: எஸ். நாகராசன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**

# சேலம் மாவட்டத்தில்...

சேலம் மாவட்டம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பூம்மணியூர் கிராமத்தில் வசிக்கும் விசாலாட்சி கூலிவேலை செய்து வருகிறார். இவர் வேலை செய்யும் இடத்தில் காந்தி என்ற வாலிபர் டிராக்டர் டிரைவராகப் பணிபுரிகிறார். காந்திக்கும், விசாலாட்சிக்கும் திருமணம் செய்ய ஏற்பாடாகியது. ஆனால் வறுமை காரணமாக, திருமணம் தள்ளிக் கொண்டே போனது. இந்த நிலையில், அரசின் திருமண உதவித்தொகை பெற ஊராட்சி ஒன்றிய ஆணையரையும், மாவட்ட சமூக நல அலுவலரையும் அணுகி ரூ.5,000 பெறுகின்றனர். திருமணம் இனிதே நடக்கிறது.

திருமணம் செய்து கொண்ட திருமதி விசாலாட்சி கூறும்போது, ''இந்தத் திருமண உதவித் தொகை கிடைக்காவிடில் நிச்சயமாக எங்கள் திருமணம் நடந்தே இருக்காது. எங்களைப்போன்ற ஏழைச் சமுதாயத்தில் திருமணத்திற்குத் தடையாக உள்ள பணச் சிக்கலை முதல்வரின் அருட்கொடைதான் நீக்கியுள்ளது. எங்களுக்கு வாழ்வு தந்த அரசுக்கு நாங்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்'' என்றார்.

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் நாட்டாமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் பிருந்தாவனம். இவரது தகப்பனார் ஒரு லாரி டிரைவர். பொருளாதாரத்தில் நசிந்துள்ள குடும்பம். பணம் இல்லாததால் பெண்ணின் திருமணம் தள்ளிக் கொண்டே போனது. இந்த நிலையில் தங்கராஜ் என்ற வாலிபருக்கும், பிருந்தாவனத்திற்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. உடன் கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி பிருந்தாவனத்தின் தகப்பனார் திருமண உதவித்தொகை பெற முயற்சிக்கிறார். விண்ணப்பம் கொடுத்த 15 நாளில் ரூ.5,000 கிடைக்கிறது. திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது.

இதுபற்றி திருமதி பிருந்தாவனமும், அவரது தகப்பனாரும் கூறும்போது, 'தமிழக அரசின் திருமண உதவித்தொகையான 5,000 ரூபாய் கிடைப்பதால், எங்களைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் தற்போது திருமணம் என்பது ஓர் பிரச்சினையாகவே தெரியவில்லை. அதுவும் திருமணத்திற்கு முன்பே இந்தத் தொகை கிடைப்பதால், கடன் வாங்கத் தேவையுமில்லை' என்று கூறினார்கள்.

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் செக்கானூர் கிராமத்தைச் சார்ந்த பெண்மணி பஞ்சவர்ணம். வயது 25. தந்தை இல்லாதவர். தாயார் மட்டும்தான் இருக்கிறார். ஏழைக் குடும்பம். கூலிவேலை செய்துதான் வாழ்க்கை நடக்கிறது. இந்த நிலையில் நவப்பட்டி கிராமத்தைச் சார்ந்த இருசாகவுண்டர், பஞ்சவர்ணத்தைத் திருமணம் செய்துகொள்ள முன் வருகிறார்.

பஞ்சவர்ணம் தனது தாயாருடன் ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி ரூ.5,000 உதவித்தொகை பெறுகிறார். உதவித் தொகை திருமணத்திற்கு முன்பே கிடைக்கிறது. இத்திருமணமும் இனிதாக நடைபெறுகிறது. ஏழைப் பெண் பிருந்தாவனம் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறார். அவரது இதயம் தமிழக அரசுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது.

**தகவல்: வை. புண்ணியமூர்த்தி**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**சேலம் மாவட்டம்**

புது மணத் தம்பதிகள்





திருமதி ப.ராஜலட்சுமி தன் கணவருடன்.

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்..

## கலப்புத் திருமணத் தம்பதியருக்கு உதவி

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் கலப்புத் திருமணத் தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ.12,000 மிகையாகாமல் இருந்தால் (சென்ற ஆண்டு இது ரூ.6,000 ஆக இருந்தது) திருமணச் செலவுக்கென ரூ.1,000 ரொக்கமும், ரூ.4,000க்கு தேசிய சேமிப்புப் பத்திரமும் வழங்கப்படுகிறது. கலப்பு மணத் தம்பதியரின் குழந்தைகளுக்கு கல்வியில் ஒருசில சலுகைகள் வழங்கப்படுகின்றன. மருத்துவக் கல்லூரியில் 12 இடங்களும், இந்திய மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும், இந்திய மருத்துவப் பட்டயப் படிப்பில் 1 இடமும், பொறியியற் கல்லூரியில் 5 இடங்களும் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்தவும், படிக்கின்ற ஆர்வத்தை ஊக்குவிக்கவும் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.5,000 நிதியுதவி அளிக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 528 பேர்களுக்கு ரூ.26.4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மாவட்டத்தில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 528 பேர்களும் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர் ப. ராஜலெட்சுமி. தந்தை பரமேஸ்வரன், (56) தாயார் முத்துலெட்சுமி (52), இவர்களுடன் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். இவருடைய தந்தை சமையல் தொழில் புரிந்து வருகிறார். இவருடைய கணவர், ஸ்ரீவைகுண்டத்தில் சுக்குக் காபிக் கடை வைத்துள்ளார்''. இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி எங்களுடைய மகளின் வாழ்க்கை அமைய, பண உதவி செய்த முதல்வர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டனர் ராஜலட்சுமியின் பெற்றோர்கள்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற கே.கோமதியின் தந்தை புகையிலை வியாபாரம் செய்து வந்தவர் தற்போது உடல்நிலை சரியில்லாதவர். இவருடைய அண்ணன் கொல்லத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் உதவியாளராகப் பணிபுரிகிறார். இவரது மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்டுதான் குடும்பம் நடத்தப்படுகிறது.

இவரது தாயார், இந்தத் திருமணம் நடைபெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்பாக விண்ணப்பித்து, குறித்த காலத்தில் பணம் கிடைக்கப் பெற்றுத் திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்.

''இத்திட்டமானது, சாதியை வைத்துப் பார்க்காமல், வருமானத்தை வைத்துப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதால்தான், எங்களைப் போன்ற ஏழ்மையான குடும்பங்கள் பயன்பெறுகின்றன'' என்று மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் குறிப்பிட்டுள்ளார் இவர்.



திருமதி கே.கோமதி தன் கணவருடன்.

தகவல்: எஸ்.எம். பஷீர்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி மாவட்டம்



# சேம்ப்பியன்

## புதிது

# லைப்பாய்

சோப்புகளிலே சேம்ப்பியன், இப்போது முன்னைவிட சிறப்பேற்று வந்துள்ளது — புதிய லைப்பாய் — மிக நவீன தோற்றத்தோடும் நயமாகவும்! பெற்றிடுங்கள் சுத்தமான ஆரோக்கியமான லைப்பாய் உணர்வை — அளிப்பது சேம்ப்பியன் லைப்பாய் — அழுக்குடனே கிருமிகளைக் கழுவிக் களைவது.




**லைப்பாய் இருக்குமிடம்.**
**அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!**

**இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு**

LINTAS LB P 1 203 TM

சேலம் மாவட்டத்தில் ....



# வளர்ச்சிப் பணிகள்

திட்டங்களைத் தீட்டுவதைக் காட்டிலும் செயல்படுத்தும் அரசு தான் மக்களுக்குச்சேவை செய்வதில் சிறந்த அரசாகக் கருதப்படும். அந்த வகையில் சேலம் மாவட்டத்தில் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுச் செயல் வடிவம் பெறாமல் இருந்தன. இத்திட்டங்களை இந்த அரசு பொறுப்பேற்றவுடன் உடனடியாக நிறைவேற்ற, தக்க ஆணைகள் வழங்கியதுடன் நிதியும் வழங்கியுள்ளது. திட்டமிடப்பட்ட திட்டங்கள் உடன் மக்களுக்குப் பயன்படும் வகையில் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது. அந்தத் திட்டங்கள் வருமாறு:

**புதிய மேம்பாலம்**

சேலம் தலைமை மருத்துவமனை அருகில் இருப்புப்பாதை சந்திக்கடவு அமைந்துள்ளது. இந்த வழியாக நாள்தோறும் 1,18,784 ஊர்திகள் கடக்கும் நிலையில் உள்ளது. இந்த இருப்புப்பாதை வழியாக இரயில்கள் செல்லும்போது லெவல் கிராஸ் கதவு மூடப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்தான் சேலம் நகர மக்களுக்குப் பெரிய இடையூறாக அமைந்திருந்தது. இந்த இடையூறைப் போக்க, பொது மருத்துவமனை அருகே ஒரு மேம்பாலம் கட்ட அரசு 1987-லேயே திட்டம் தீட்டியது. திட்ட மதிப்பீடு ரூ.220 இலட்சமாகும். திட்டம் நீண்ட நாட்களாகச் செயல்வடிவம் பெறாமல் இருந்து வந்தது. இம்மேம்பாலம் உருவாக்கும் பணி விரைவில் முடிக்கப்பட வேண்டுமென்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்த முயற்சியின் பயனால் தற்போது பாலம் அமைக்கும் பணி மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது. 690 மீட்டர் நீளம் உள்ள 23 கண்மாய்களைக் கொண்ட அந்த மேம்பாலம் நெடுஞ்சாலைத்துறை மூலம் கட்டி முடிக்கப்படும். இப்பாலம் முடிவுற்றவுடன் சேலம் நகரின் மிகப்பெரிய போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட்டு, சீராக அமையும் என்பது உறுதி.

**புறவழிச் சாலை**

சேலம் வழியாக வரும் வாகனங்கள், சேலம் நகரினுள் நுழையாமல் நகரின் புற வழியாகச் செல்லப் புதிய புறவழிச்சாலை ரூ.1.72 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வழியில் இருப்புப்பாதை சந்திக்கடவு அமைந்துள்ளதால் பாலம் அமைக்கும் பணியும் துரிதமாக நிறைவேற்ற வேண்டியுள்ளது. 31.8.90-இல் இப்பணி முடிவுறும்.

**உள்விளையாட்டு அரங்கம்**

சேலம் மாவட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் நீண்ட நாள் கோரிக்கையான உள்விளை

வை. புண்ணியமூர்த்தி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்

யாட்டு அரங்கம் அமைக்க 1984-இல் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டமும் இப்போதுதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ரூ.45 இலட்சம் இதன் மதிப்பீடு. ஒரே நேரத்தில் 7,000 பேர்கள் அமர்ந்து விளையாட்டைப் பார்க்க ஏதுவாக இந்த உள் விளையாட்டு அரங்கம் காந்தி விளையாட்டுத் திடலிலேயே அமைக்கப்படுகிறது. இந்த விளையாட்டு அரங்கிலேயே விளையாட்டு வீரர்கள் தங்கும் அறைகளும் கட்டப்படுகின்றன.

**புதிய விமான நிலையம்**

சேலம் மாவட்டத்தில் வாணிபம் சிறந்து விளங்குவதோடு, கைத்தறித் துணிகள் ஏற்றுமதியும் பெருமளவில் நடப்பதாலும், குச்சிக்கிழங்கு மாவு தயாரித்தல், நிலக்கடலை உற்பத்தி ஆகியவற்றில் முன் நிற்பதாலும், சேலம் இரும்பாலை போன்ற பெரிய நிறுவனங்கள் அமைந்துள்ளதாலும் இம்மாவட்டத்திற்கு விமான நிலையம் அவசியம் என அரசு முடிவு எடுத்து, அதற்கான அனுமதி 12.5.88லேயே வழங்கப்பட்டது. இந்த விமான நிலையம் அமைக்கும் பணியும் தற்போதுதான் செயல்படுத்தப்படுகிறது.

விமான நிலையம், சேலம் நகரிலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் ஓமலூர் அருகில், காமலாபுரம் என்ற இடத்தில் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது. தேவையான 49.28 எக்டேர் நிலம் தேசிய விமான தள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**புதிய மருத்துவக் கல்லூரி**

சேலம் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, கல்லூரியை உருவாக்க அரசு 23.4.86இல் அனுமதி அளித்து உள்ளது. சேலம் இரும்பாலை அருகில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் உருவாக்கரூ.981.59இலட்சத்திற்குத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. அரசு முதற்கட்டமாக ரூ.352.45 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

1985-86 முதல், ஆண்டு ஒன்றுக்கு 75 மாணவர்கள் இக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளத் தேர்வு செய்யப்பட்டனர். கட்டடங்கள் முடியும் வரை சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கை மருத்துவக் கல்லூரிகளில் கல்லூரிக்கு தலா 25 மாணவர்கள் வீதம், பயின்று வருகின்றனர். கல்லூரிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கை 100 ஆக உயர்த்தப்படும்.

**புதிய குடிநீர் வழங்கும் திட்டம்**

மேட்டூரிலிருந்து ஆத்தூருக்கும் மற்றும் இதர 11 பேரூராட்சிகள் மற்றும் 264 வழியோரக் கிராமங்களுக்கும், சேலம் நகருக்கும், உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் வழங்க மாபெரும் திட்டம் ரூ.37.68 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சேலம், சூரங்கலம், ஆத்தூர் நகராட்சிகள், மேச்சேரி, ஓமலூர், கருப்பூர், கன்னங்குறிச்சி, அயோத்தியா பட்டினம், வாழப்பாடி, ஏத்தாப்பூர், பெத்த நாயக்கன் பாளையம், நரசிங்கபுரம் ஆகிய 9 பேரூராட்சிகள் உட்பட, மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 264 வழியோரக் கிராம மக்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுகிறார்கள். இத்திட்டத்தினால் பயன்பெறுவோர் எண்ணிக்கை 12,93,667. திட்ட மதிப்பீட்டின்படி ஒருவருக்கு ஆகும் செலவு ரூ.291.27. மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை 20 நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டம் 30.9.'91இல் முடிவடையும். தற்போது குழாய்கள் அமைக்கும் பணி மிக முனைப்பாக நடைபெற்று வருகிறது.

ரூ.45 இலட்சம் செலவில் சேலம் நகரில் அமைக்கப் பட்டுவரும் உள் விளையாட்டு அரங்கம்.



**பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில்**

# மின் சாதனங்களைப் பழுதுபார்க்கும் பெண்டிர் திலகங்கள்!



சமுதாய, பொருளாதார நிலைகளில் பெண்கள் சம உரிமைகளோடு கல்வித்திறனும் தன்னம்பிக்கையும் பெற்று, நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்கேற்கும் ஏற்றமுடையவர்களாய் உயரவேண்டும் என்கிற அடிப்படை நோக்கோடும், சமுதாயப் பொருளாதாரத் தடைகளால் மேலும் பள்ளிப்படிப்பைத் தொடர இயலாது இடையில் நிறுத்திவிட்டுப் பயனற்று முடங்கித்தவிக்கும் இளைஞர்களில் – குறிப்பாக – பெண்களின் அவல நிலையைப் போக்கும் எண்ணத்தோடும் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுயதொழில் ஒன்றைக் கற்றுத் தேறுதல், சுய சம்பாத்தியம், தன்னம்பிக்கை-இவையே பெண்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் வழிமுறைகளாகும் என்பது தெளிவான உண்மை.

கிராமப்புற இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் பயன்படுத்தி நடப்பு நிதியாண்டில் 385 இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியுடன் தன்னம்பிக்கையும் பெற்றுள்ளனர். இதில் 285 இளம் பெண்கள் புது வாழ்வு பெற்றுள்ளனர்.

வறுமைக் கோட்டிற்கும் கீழ் நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இப்பயிற்சி வகுப்புகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். 13.1.89 முதல் 6 மாதகாலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறையின் வாயிலாக, காரைக்குடிக்கு அருகேயுள்ள சாக்கோட்டை கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வறுமைக் கோட்டிற்கும் கீழ் நிலையில் வாழும், வறுமையின் காரணத்தால் பள்ளிப்படிப்பை இடையிலேயே நிறுத்திவிட்ட பெண்களில் 30 பேர்களைத் தேர்ந்தெடுத்து 15 பெண்களுக்குத்திரை அச்சுப் பயிற்சியும் (Screen Printing), 15 பெண்களுக்கு வீட்டு மின் சாதனங்களைப் பழுது பார்த்தல் மற்றும் பராமரிக்கும் பயிற்சியும் வழங்கப்பட்டன. இந்த இரண்டு பயிற்சிகளிலும் ஈடுபட்ட ஒவ்வொரு மாணவிக்கும் ரூ.250/- மானியத்தொகையாக மாதந்தோறும் வழங்கப்பட்டது. (ஒவ்வொரு மாணவியும் இந்தத்தொகையில் மாதந்தோறும் ரூ.100/-ஐ வங்கிச் சேமிப்பில் சேமித்துள்ளது குறிப்பிடத்தக்கது).

திரை அச்சுப் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவியரில் சிலர் 6வது வகுப்புகூட படிக்காதவர்கள்.

மின்சாரப் பயிற்சியில் சேர்ந்த பெண்கள் சிலரின் வீடுகள் மின் வசதியில்லாதவை. மேலும் மின்சாரம் என்றாலே பயந்து நடுங்கும் சமுதாயத்தில், பெண்கள் துணிச்சலுடன் இன்று மின் விசிறி, மின் விளக்கு, மாவரைக்கும் எந்திரம், தண்ணீர் இறைக்கும் எந்திரம் போன்ற மின் சாதனங்களை மட்டுமின்றி, விளக்குக் கம்பத்தில் ஏறிப்பழுது பார்க்கும்

அளவிற்குத் திறனும் பெற்றுள்ளனர் என்றால் அதற்குக் காரணம் முறையாக நடத்தப்பட்ட 'டிரைசெம்' பயிற்சி வகுப்புகளேயாகும்.

மேலும் பல்வேறுதுறை வல்லுநர்கள் வாயிலாகக் கலந்துரையாடல், வங்கிகளுக்குச் சென்று பணம் போடுதல், பணம் எடுத்தல், விலை நிர்ணயம், வெளிச்சந்தையில் தர நிர்ணயம் செய்தல், ஆய்வு செய்தல் போன்ற பயிற்சிகளும்; அருகிலுள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தல் ஆகிய பணிகளும் செயல்படுத்தப் பட்டுள்ளன. முதலுதவி வகுப்புகளும் ஒருவாரகாலம் நடத்தப்பெற்றன.

திரை அச்சுத்தொழில் பயிற்சி பெற்றுள்ள 15 பெண்களும் அரசின் மானியத்துடன் (தலா ரூ.2,000/-) வங்கிக் கடனுதவியும் பெற்று ''சுப மங்கலா திரை அச்சுத்தொழில் நிறுவனம்'' என்ற நிறுவனத்தைக் காரைக்குடியில் தொடங்கிட முடிவு செய்து செயல்படுத்தி வருகின்றனர். ''ரூ.500/- முதலீட்டில் ரூ.50 ஆயிரம் வரை திரை அச்சுகளை உருவாக்குவோம்'' என்று நம்பிக்கையுடன் கூறுகின்றனர்.

வீட்டு மின்சாதனங்களைப் பழுது பார்க்கும் பயிற்சி பெற்ற பெண்கள் அருகிலுள்ள கோட்டையூர், கானாடுகாத்தான், புதுவயல் போன்ற பேரூராட்சிகளிலும், அரியக்குடி போன்ற கிராமங்களிலும் அரசு மானியத்துடன் வங்கிக் கடனுதவி பெற்று, தொழில்களைத் தொடங்க முன்வந்துள்ளனர்.

ஜனவரித் திங்கள் 16-ஆம் நாள் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக அரங்கில் நடைபெற்ற, டிரைசெம் பயிற்சிபெற்ற மாணவியருக்குச் சான்றிதழ்களும், தொழில் உபகரணங்களும் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ.இளங்கோவன் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, ''285 பெண்கள் உட்பட 385 இளைஞர்களுக்குக் கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் இதற்கென ரூ.9.35 இலட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது.



''மேலும் வரும் நிதி ஆண்டில் சுமார் ரூ.22.30 இலட்சம் செலவில் கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் அளிக்க அரசின் அனுமதியை வேண்டியுள்ளோம். அதில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறையின் வாயிலாக 60 பெண்களுக்குப் பயிற்சி அளிக்க அனுமதி வழங்கப்படும். மேலும் ஒரே நேரத்தில் 200 பேர், பயிற்சிபெறும் வகையில் திருக்கோட்டியூரில் சிறிய பயிற்சி மையம் ஒன்று ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கிட அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பெண்களின் மேம்பாட்டிற்கெனப் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது. அனைவரும் இத்திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருமதி இராதாதியாகராசன் பேசும் போது ''தமிழகத்துப் பெண்களைப் பொறுத்தவரை இந்நாட்கள் ஓர் மாபெரும் திருப்புமுனை. பெண்களின் மேம்பாட்டிற்கெனத் திட்டங்களை அடுக்கடுக்காய்க் கொணரும் தமிழக அரசுக்கு மனமார்ந்த நன்றிகள் பல.'' என்று தெரிவித்தார்.

முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சை.வே.சிட்டிபாபு, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு எஸ்.தியாகராசன் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ள மாணவியர் 30 பேர்களுக்குப் பயிற்சிச் சான்றிதழ்களும், ரூ.500/- மதிப்புள்ள தொழில் உபகரணங்களும் அரசின் சார்பில் வழங்கப்பட்டன.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களில் ஒன்றான கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயனடைந்த 30 பெண்களின் வாழ்க்கை சமுதாயத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

*தொகுப்பு:*
**துரை.தாமரைச்செல்வம்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.



# குழந்தைகளுக்கான ஒரு குட்டிக் காடு

அது ஒரு பயங்கரமான காடு அல்ல; அழகான காடு; அமைதியான காடு!

அதோ, ஒரு சிறுவன் சிங்கத்தின் வாயினுள் கையை விட்டுக் கொண்டு தைரியமாக நிற்கிறான்.

ஒரு சிறுமி, வரிக்குதிரையின் வாலைத் தொட்டுப் பார்க்கிறாள்.

சிங்கமோ, வரிக்குதிரையோ அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவற்றுக்கு உயிர் இருந்தால்தானே, அவை ஏதாவது செய்யும்? அவை தான் பொம்மைகளாயிற்றே!

குழந்தைகளைக் கவரும் இந்தக் குட்டிக்காடு எங்கே இருக்கிறது?

சென்னைக்கு அருகில் உள்ள, வி.ஜி.பி. தங்கக் கடற்கரையில் தான்!

அதோ, பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று பசும்புல் தரை, வருவோரை வரவேற்பது போல, வண்ணமலர்கள் காற்றில் அசைந்தாடுகின்றன. அந்த இடத்தில் நடுப் பகுதியில் காட்சியளிக்கிறது, பண்டித ஜவகர்லால் நேருவின் திருவுருவச் சிலை. அதுதான், நேரு பூங்கா.

இந்தப் பூங்காவை அடுத்து, மலைக் குகையினுள் நுழைந்து உள்ளே போய் வெளியே பார்க்கிறோம். நம் கண்முன் காட்சியளிக்கிறது, அமைதி மலை (Peace Mountain).

அங்கே சிறிய மலை ஒன்று தெரிகிறது. அதையொட்டி சிற்றாறு ஓடுகிறது. அந்த ஆற்றில் குதிரைகளுடன் உள்ள வீரன் ஒருவன் காட்சியளிப்பது போன்ற சிற்பம் கண்ணைக் கவர்கிறது. பெயருக்கேற்றாற் போலவே அது ஒரு அமைதி மலையாகவே காட்சியளிக்கிறது.

இன்னிசை, காற்றில் மிதந்து வரும் திசைநோக்கிப் போகிறோம். மிருகங்கள் சில ஒன்று சேர்ந்து இசைக் கருவிகளை மீட்டுகின்றன.

அந்த இசையில் மெய்ம்மறந்து நின்றுவிட்டனவோ வரிக்குதிரைகள்? ஆம். அழகிய வரிக்குதிரைகள் சுவருக்குப்பக்கத்தில் நின்று கொண்டிருந்தன.

யானை இல்லாமல் ஒரு காடா? அங்கே யானையும் இருந்தது. அருகே புலியும், சிங்கமும் இருந்தன. இவை



யெல்லாம் யாரையும் ஒன்றும் செய்ய வில்லை. எல்லாம் பொம்மைகளே! அவ்வளவு தத்ரூபமாக வடிவமைக் கப்பட்டுள்ளன.

இந்தக் குட்டிக் காட்டுக்கு வருப வர்கள் ஓர் அபூர்வக் காட்சியையும், ஒரு அரிய காட்சியையும் காணத் தவறமாட்டார்கள்.

அவைதாம், ஒன்று மீனும் தவளை யும் முத்தமிடும் காட்சி, மற்றொன்று தாய்த்திருநாட்டின் காட்சி அமைப்பு.

அதோ, இரயில் வருகிறது, சற்று விலகி நில்லுங்கள்! ஆம். குட்டி யானை வடிவில் அமைக்கப்பட்ட, குழந்தைகள் உல்லாசமாகப் பயணம் செய்யும் குட்டி இரயில்தான் அது! அதில் குழந்தைகள் பயணம் செய்யும் போது, அவர்கள் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

அண்ணல் காந்தியடிகளுக்கு ஒருவர் மூன்று குரங்குகள் உள்ள பொம்மையை அன்பளிப்பாகக் கொடுத்தாராம். தீயனவற்றைப் பேசாதே - தீயனவற்றைப் பார்க் காதே - தீயனவற்றைக் கேட்காதே என்கிற தத்துவத்தை உணர்த்து வதாகும் அது.

அதே மாதிரியான மூன்று குரங்குகள் பொம்மை, பெரிய அளவில், சற்று உயரமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. பொம்மை யின் கீழே வாசகங்களும் பொறிக்கப் பட்டிருக்கின்றன. மேற்கண்ட வாசகத்தைச் சற்று மாற்றி, ‘நல்ல தையே பேசுங்கள் - நல்லதையே பாருங்கள் - நல்லதையே கேளுங்கள்’ என்று எழுதப்பட்டிருக்கிறது. இது குழந்தைகளை மட்டும் அல்ல, பெரிய வர்களையும் கவரும் என்பதில் ஐய மில்லை.

பொய்க்கால் குதிரை ஆட்டம் பார்க்கலாமா? இந்தக் காட்டில் இதையும் பார்க்கலாம்.

ஒற்றைப் பனைமரம் ஒன்று ஓங்கி வளர்ந்திருக்கிறது. அதைச் சுற்றி உலக நாட்டுக் குழந்தைகள் வட்ட வடிவமாக நின்று கொண்டி ருக்கிறார்கள். அண்ணாந்து பார்க் கிறோம். இயற்கையாக வளர்ந்துள்ள பனைமரம் போலவே இருக்கிறது. உலகக் குழந்தைகள் ஒன்று சேர்ந்து நிற்பது, ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக உள்ளது.

சிவப்பிந்தியர் ஒருவர் கையில் ஈட்டியுடன் நிற்பதைக் கண்டு யாரும் பயப்பட வேண்டாம். அவரைத் தாண்டி அப்பால் செல்கிறோம்.



ஒரு கரடி வலைகளுக்கு உள்ளே இருந்து, இப்படியும் அப்படியுமாகப் பார்க்கிறது. ''ஆனந்த் ... ஆனந்த் ...'' என்று ஒருவர் கூப்பிடுகிறார். உடனே ஓடிவந்து அவருக்குக் கை கொடுக்கிறது, கரடி.

ஆம். இப்போது நாம் வந்திருப்பது ஒரு 'மினி' உயிர்க்காட்சிச் சாலைக்கு!

இங்கே, காட்டுக்கோழி, காட்டு ஆடு, முயல், குரங்கு, மான், வெள்ளெலி, கிளி ஆகியவை உள்ளன.

'தாய்த் திருநாட்டை'க் காண் போமா?

முகப்பில் அசோகச் சக்கரம் காணப்படுகிறது.

தரையில் இந்திய வரைபடம் ஒன்று பெரிய அளவில் அமைக்கப் பட்டிருக்கிறது. அதில் இந்தியாவிலுள்ள மாநிலங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. அதைப் பார்க்கும் போது, ''இவ்வளவு பெரிய நாட்டிலா நாம் வாழ்கிறோம்?'' என்கிற பிரமிப்பு ஏற்படுகிறது.

பச்சைப் பசேலென்ற புல் தரையின் மத்தியில் ஒரு அழகிய மண்டபம். அந்த மண்டபத்தில் ஒருமைப் பாட்டை உணர்த்தும் வாசகங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

பைபிள், திருக்குறள், பகவத் கீதை ஆகியவற்றின் வாசகங்களும், அண்ணல் காந்தியடிகள், மகாகவி பாரதியார் ஆகியோரின் பொன் மொழிகளும் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

அதோ, ஒரு பீரங்கி காட்சியளிக்கிறது. அந்தப் பீரங்கியில் ஒரு பக்கம் குருவி கூடு கட்டியிருக்கிறது. மறு பக்கம் சிலந்தி கூடு கட்டியிருக்கிறது; நெருப்புப் பிழம்பு பீரங்கி வாயிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தால், இந்தக் குருவியும், சிலந்தியும் அங்கே கூடு கட்டியிருக்குமா? ''உலகில் அமைதி தவழ வேண்டும்; போரையே விரும்பாத உலகம் வேண்டும்'' என்பதைச் சொல்லாமல் சொல்கிறதல்லவா இந்தக் காட்சி?

சற்றுக் காலார நடந்து செல்கிறோம். அங்கே காட்சியளிக்கிறது தேவாலயம். பக்கத்தில் சிவன் கோயில். அதற்குப் பக்கத்தில் பள்ளிவாசல். நடு நாயகமாக இந்திய வரைபடத்தில் இந்தியத் தாய் காட்சியளிக்கிறாள். ''இந்திய மக்கள் யாவரும் ஒன்றே'' என்பதை உணர்த்தும் ஒப்பற்ற காட்சி அமைப்புகளாக விளங்குகின்றன இவை.

**''சனநாயகம், எங்கு வேண்டுமாயினும் வளரும் செடியன்று. சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளே சனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான சனநாயகம் ஆகும்.''**

**— டாக்டர் அம்பேத்கார்**

தஞ்சாவூரில் வீடுகள் எப்படி இருக்கும் என்பதைக் காட்டும் வண்ணம், ஒரு பழமையான வீட்டு அமைப்பையே உருவாக்கியிருக்கிறார்கள். வீட்டுக்குப் பின்னே கிணறு இருக்கிறது. அது வெறும் காட்சிக்குத்தானா என்று எட்டிப் பார்க்கிறோம். கிணற்றில் தண்ணீர் இருக்கிறது.

குழந்தைகளைக் குதூகலப்படுத்த, திருவள்ளுவர் அருவி, மினி இரயில், இராட்டினம், சிறுவர் பூங்கா, மந்திர ஜாலக் காட்சி. கழைக் கூத்தாடிகள் ஆடும் வீர சாகசக் காட்சிகள், கரக ஆட்டம், நடன நாடக நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டு இங்கே.

இந்தக் குட்டிக் காட்டில் இன்னும் என்னென்ன வரப்போகின்றன?

வி.ஜி.பி. நிறுவனங்களின் தலைவர் திரு. வி.ஜி. சந்தோஷம் அவர்கள் இது பற்றிக் கூறினார் -

''சுற்றுலாத் தலங்கள் வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமில்லாமல், குழந்தைகளுக்குக் கல்வி-படிப்பினை தருவதாகவும் இருக்க வேண்டும்.

''தமிழ்நாடு அரசு, சுற்றுலாத் தலங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, ஊக்கம் தந்து வருவதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

''குழந்தைகள், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதோ, அந்தக் குட்டி இரயிலில்வரும் குழந்தைகளின் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி பார்த்தீர்களா? இந்திய நாடு பெரிய நாடு என்பதை உணர்த்தவும், ஏழ்மையான நாடு என்கிற எண்ணத்தை மாற்றவும், குழந்தைகள் மத்தியிலே தன்னம்பிக்கை வளரவும் இந்தக் கானகம் உதவும் என்பது எங்கள் நம்பிக்கை.



''குழந்தைகளுக்கான இந்தக் கானகத்தில், இழுவை இரயில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அழகிய குளத்தில் டால்பின்கள் புரியும் சாகசங்களும் குழந்தைகளை மகிழ்விக்கப் போகின்றன. அது மட்டுமல்ல, இந்த வளாகத்தில் 108 கால் மண்டபமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. மதுரையில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் போல இந்த மண்டபமும் அமையும். அங்கிருப்பது போல, இங்கும் ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு வகையான இசை ஒலிக்கும்.

''ஆசியாவிலேயே பெரியது இந்தத் தங்கக் கடற்கரை. 60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த வளாகத்தில் 700 பேர் பணிபுரிகிறார்கள்.''

''பொதுவாக ஒரு நாளைக்கு 5,000க்கும் மேற்பட்டோர் இங்கே வருகை தருகிறார்கள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் வருவது குறிப்பிடத்தக்கது.

''சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையிலே, கலை வல்லுநர்களைக் கொண்டு அழகிய வடிவமைப்புகள் கொண்ட காட்சிகளை உருவாக்கிக் கொண்டு வருகிறோம். உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வசதி மிக்க குடில்களும் இங்கே உள்ளன. பிரத்தியேகமாக, கடற்கரையோரத்திலேயே அமைக்கப்பட்ட 'கப்பற் குடில்' சுற்றுலாப் பயணிகளுக்காகவே வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்டது.''

அலைகடலோரத்தில், கலையெழில் மிக்க இந்தக் கடற்கரையில் தன்னிகரற்று விளங்குகிறது, இந்தப் புதுமைக் கானகம்; மனத்துக்குப் புத்துணர்ச்சியையும், பூரிப்பையும் தரும் இந்த அழகிய கானகத்தைக் கண்டு களிப்போமா?

—பி.வி.கிரி

எங்களின் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

## ப்ரோவிமி ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பெங்களூர்

**தொழிற்சாலை & அலுவலகம்:**
3-எப், மில் ரோடு,
கோபிசெட்டிபாளையம் 638 476
தமிழ்நாடு

தொலைபேசி: 2593, 2493
2707 & 2059

**தந்தி: ப்ரோவிமி
டெலக்ஸ்: 08501-203
PROV IN

1. ப்ரோவிமி மினரல் மிக்சர்-கேட்டல்
2. ப்ரோவிமி மினரல் மிக்சர்-பவுல்ட்ரி
3. ப்ரோவிமி சால்ட்லிக்ஸ்
4. ஃபெர்ட்டிடோன்
5. பூஸ்ஃபோர்ட்
6. மில்க் பூஸ்டர் AD3
7. டாக்கிட்ஸ்
8. டாப்-அப்
9. மீன் குச்சித் தீவனம்
10. ஆட்டுக் குச்சித் தீவனம்
11. முயல் குச்சித் தீவனம்
12. இறால் குச்சித் தீவனம்
13. ப்ரோமேக்ஸ்-ஏ
14. ப்ரோவி-பி-ப்ளெண்ட்
15. ஸ்ட்ரெஸ்ஃப்ரீ 'சி' ஃபோர்ட் (வைட்டமின் 'சி')
16. ஹெர்போலின் - சிறந்த ஈரல் டானிக்
17. கே-ப்ரோ
18. விட்டாலைட்-M
19. B-ஃபிட் காம்ப்ளக்ஸ்

Estd. 1916 Phone : 6286

### THE COONOOR CO-OPERATIVE URBAN BANK LIMITED,
### COONOOR-2

Post Box No.15, Mount Road, Coonoor-643 102

(Awarded Shields for the years 1978-79, 1980-81, 1983-84 and 1988-89 for the best working Co-operative Urban Bank in Tamil Nadu).

APPROVED as bankers to the Coonoor Municipality and Panchayat Boards in Nilgiris and also permitted to collect pay bills and pension bills under an amendment to the Madras Treasury Code.

| | |
|---|---|
| Paid-up Share Capital and Reserves | : Rs. 94.51 lakhs |
| Deposits Exceed | : Rs.510.26 lakhs |
| Amount of loans issued during the last Co-operative year | : Rs.583.58 |
| No. of Savings bank accounts exceed | : 22,629 |

The bank offers 1 percent more than the interest offered by other banks for deposits of various types.

Dividend on Share Capital paid at 14 per cent as per the Co-operative Act.

**Thiru. D. SIVARAJ,** B.Sc., Special Officer.
**Thiru. M.B. RAMAN,** B.Com., Secretary.

## தமிழரசு

தமிழ் - மாதம் இருமுறை

### சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 24.00
6 மாதச் சந்தா ரூ. 12.00

### 'தமிழரசு' — ஆங்கிலம்

ஆண்டுச் சந்தா ரூ. 12.00

6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

**உதவி இயக்குநர்**
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# புத்தம் புதிய சைக்கிள்

அருணாசலம், தன் மகன் அரவிந்தனை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். அவன் எது கேட்டாலும் வாங்கித் தருவார். அப்படி வாங்கித் தரவில்லை என்றால் அவன் அன்று முழுக்க சாப்பிடமாட்டான். ஒரே அடம் பிடிப்பான்!

ஒரு நாள்.

காலை நேரம்.

வழக்கம் போல பள்ளிக்கூடம் போனான். அங்கே அவன் வகுப்பு மாணவன் தியாகு, அன்று புதிய சைக்கிளில் வந்திருந்தான். பத்தாம் வகுப்பு மாணவர்கள் எல்லாரும் ஒன்று கூடி அந்தச் சைக்கிளைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தியாகு, பெருமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

''தியாகு! இந்தச் சைக்கிள் என்ன விலை?''

''ஆயிரத்து அறுநூறு ரூபாய்!''

''எங்கே வாங்னே...?''

''பிராட்வேயில்!''

''டேய்! ஏண்டா இந்தக் கலர்லே வாங்கின? சிவப்புக் கலரில் வாங்க வேண்டியதானே!''

''நானும் அந்தக் கலரிலே வாங்கத்தான் ஆசைப்பட்டேன். அப்பொழுது எந்தக் கடையிலும் சிவப்புக் கலரில் வண்டிகள் இல்லை!'' இப்படி எல்லாரும் கேள்வி பதில்களாக மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

அரவிந்தனுக்கு ஒரே எரிச்சல்! ''எந்தப் பொருளும் முதன் முதலாக நாம்தான் வாங்கி வந்து, பள்ளிக் கூடத்தில், எல்லாருக்கும் காண்... போம்! இன்றோ, நம்மிடம் இல்... சைக்கிளை வாங்கி வந்து எல்லாரிடம் காட்டிப் பெருமையடித்துக் கொள்கிறானே! இதற்கு ஒரே வழி, இன்று மாலையே அப்பாவிடம் சொல்லி, ஒரு சிவப்புக் கலர் புத்தம் புதிய சைக்கிளை வாங்கிட வேண்டும்.'' என்று முடிவு செய்து கொண்டான்.

அன்று முழுவதும் அரவிந்தன் பாடங்களைக் கவனிக்கவேயில்லை. கவனம் எல்லாம் புத்தம் புதிய சைக்கிள் மீதே இருந்தது.

பள்ளிக் கூட நேரம் முடிந்தது. மற்ற மாணவர்கள் எல்லாம் விளையாடத் திடலுக்குப் போனார்கள். ஆனால் அரவிந்தன் மட்டும் வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாகப் போனான்.

''அம்மா, எனக்குப்புதுசா ஒரு சைக்கிள் வேணும்'' என்று புத்தகப் பையைக் கீழே வைத்தான்.

''என்ன? சைக்கிளா? அதுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேலே ஆகுமே!'' தாய் சொன்னாள்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு சைக்கிள் தான் வேண்டும்! அதுவும் இப்பவே வேண்டும். சிவப்புக் கலர் சைக்கிள்! என்று அடம் பிடித்தான். ஆனால் அவர் தாயோ அவனைக் கண்டித்தாள்.

''அப்பாவிடம் சைக்கிள் கேட்டால், அம்மா அடிப்பாங்க! சைக்கிள் இல்லாம எப்படிப் பள்ளிக் கூடத்துக்குப் போவது? தியாகுவை மட்டம் தட்ட வேண்டும். புதிய சைக்கிளைக் காட்டிப் பெருமையடித்துக் கொள்ள வேண்டும்'' என்று எண்ணினான் அரவிந்தன்.


மா.தா. ஸ்ரீதர்

பத்தாம் வகுப்பு 'சி' பிரிவு,
இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி (தெற்கு),
சென்னை-600 017.


மறுபடியும் அம்மாவிடம் போய், ''அம்மா, அம்மா! இந்த ஒரு தடவை மட்டும் அப்பாவிடம் சொல்லி எனக்கு ஒரு சிவப்புக் கலர் சைக்கிளை வாங்கித் தரச் சொல்லுங்க அம்மா!'' என்றான். அதற்கு அவன் அம்மா சம்மதம் தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம் குடும்ப நிலைமை அப்படி இருந்தது.



# தரமான விதை,
# பூச்சி மருந்து,
# இரசாயன உரங்கள்

## கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

**ஆர். சென்னகிருட்டிணன்,**
**கீதா ஸ்டோர்ஸ்,**
உரம் & பூச்சி மருந்து வியாபாரம்
ஊத்தங்கரை - 635 207
தருமபுரி மாவட்டம்.

**ஜி. ஆசைத்தம்பி,**
**தம்பி அக்ரோ சர்வீஸ்,**
விதை, உரம், பூச்சி மருந்து விற்பனை நிலையம்,
தருமபுரி மெயின் ரோடு,
மத்தூர்,
தருமபுரி மாவட்டம்.

**ஆர். இரமேஷ்குமார்,**
**விதை, உரம், பூச்சி மருந்து வியாபாரம்,**
ஊத்தங்கரை - 635 207
தருமபுரி மாவட்டம்

**ஏ.ஆர். இரவி,**
**அண்ணாமலை டிரேடர்ஸ்,**
உரம், பூச்சி மருந்து வியாபாரம்,
மாரண்டஹள்ளி,
தருமபுரி மாவட்டம்

அன்று மாலை அப்பாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான், அரவிந்தன். அப்போது அவன் அப்பா வந்து கொண்டிருந்தார். கையோடு சைக்கிளையும் கொண்டு வந்திருந்தார்! அரவிந்தனுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. ''புது சைக்கிள்! வாங்கினீங்களா?'' என்று ஓடி வந்து கேட்டான்.

''ஊஹூம். இது உன் நண்பன் தியாகுவினுடையது!'' வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது என் ஸ்கூட்டர் ரிப்பேர் ஆகிவிட்டது. அதை ரிப்பேர் செய்யச் சொல்லி கடையில் கொடுத்து விட்டு நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது உன் நண்பன் தியாகு தன் வீட்டிலிருந்து இந்தக் சைக்கிளைக் கொடுத்து, ''சார்! உங்க வீடு பக்கத்திலே இருந்தாலும் இந்தச் சைக்கிளில் போங்கள்! நாளைக்கு அரவிந்தன் மூலம் கொடுத்து அனுப்புங்கள்! பள்ளியில் வாங்கிக் கொள்கிறேன்'' என்றான்.

அரவிந்தன் மௌனமாக சைக்கிளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''தியாகு எல்லாவற்றையும் சொன்னான்! இன்று முழுவதும் அவனிடம் நீ பேசவேயில்லையாமே, ஏன்?''

''அப்பா! அவன் இந்த சைக்கிளை வைத்துக் கொண்டு எல்லாரிடம் பெருமை பேசிக் கொண்டிருந்தான். அதைப் போலவே நானும் ஒரு சைக்கிளை வாங்கி, பெருமையடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். அது வரைக்கும் அவனோடு பேசுவதில்லை என்றும் முடிவு செய்தேன். எனக்கு ஒரு புது சைக்கிள் வாங்கித் தாங்கப்பா? என்று கேட்டான் கொஞ்சலாக.

''அரவிந்து! இதெல்லாம் மிகவும் கெட்ட பழக்கம்! தியாகுவுக்கு இந்த சைக்கிளை அவன் அப்பா வாங்கித் தரவில்லை, தியாகு ஓய்வு நேரத்தில் ''பைண்டிங்'' வேலை செய்து சம்பாதித்த அந்தப் பணத்தில் வாங்கியதுதான் இந்தச் சைக்கிள்.''

''அப்படியா?''

''அது மட்டுமல்ல, அவன் என்னிடம் என்ன சொன்னான், தெரியுமா? 'சார்! அரவிந்தன் நல்ல பையன்! அவன் கேட்கும் பொருள்களை எல்லாம், அவசரம், அவசியமில்லை, என்று யோசிக்காமல் உடனே வாங்கிக் கொடுத்து விடுகிறீர்கள். அதனால் அவனுக்கு கர்வமும் பிடிவாதமும் தான் வளர்கிறதே தவிர, உண்மையான மகிழ்ச்சியோ, உழைப்பின் அருமையோ தெரியில்லை'! என்று சொன்னான். ஆகவே, இனிமேலாவது இந்த அநாவசியமான ஆசைகளை விட்டொழிப்பது நல்லது.'' என்றார்.

அதைக் கேட்ட அரவிந்தன் தன் அப்பாவைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு, ''இனிமேல், இப்படி அநாவசியமாகத் தொந்தரவு செய்ய மாட்டேன், போதுமா?'' என்றான்.

# நாட்டுக்குப் பயன்பட வேண்டும்!



புலவர் க. அண்ணாமலை

கடலைப் போல அமைதி கொண்டு
அடங்கி நடக்கணும்- அங்குக்
கிடைக்கும் பொருள்கள் போல நாளும்
பயன்பட வேணும் - நாட்டுக்குப்
பயன்பட வேணும்!

மலையைப் போல உலகில் என்றும்
உயர்ந்து நிற்கணும் - அதில்
உள்ள பொருள்கள் போல நீயும்
உதவிட வேணும் - மக்களுக்கு
உதவிட வேணும்!

மரத்தைப் போல நிழலைத் தந்து
வாழ்ந்திட வேணும் - நெஞ்சில்
இரக்கம் கொண்டு அனைவர் உடனும்
நடந்திட வேணும் - எந்நாளும்
நடந்திட வேணும்!

எதையும் தாங்கும் இதயம் கொண்டு
சிறந்திட வேணும் - நாட்டில்
இணையில் லாத தலைவன் ஆக
விளங்கிட வேணும்!



# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
# விஜய்
உரங்கள்






VIJAY

மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

தேசிய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343




### நுரைகளும் அலைகளும்

**ஆசிரியர்: ய. மணிகண்டன்,**
**வெளியீடு:** பூவரசு பதிப்பகம்,
19 அப்பா தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை-33

விலை: ரூ.3.00 பக்கம்: 24

நட்சத்திரங்கள், முகில்கள் என இயற்கைப் படைப்புகள் குறித்துத் தீட்டப்பட்ட வசன கவிதை மலர்களை ஏந்திவரும் மலர்க்கூடை இந் நூல்;மரபுக் கவிதையின் ஆழம் இந்த வசன கவிதைகளிலும் காணப் படுகிறது. ஆசிரியரின் கற்பனை வளம் - நம்மை வியப்பில் ஆழ்த்தி மகிழ்விக்கிறது. பலமுறை படிக்கத் தூண்டுகிறது. ஆசிரியரின் சொல் லாட்சி சொக்க வைக்கிறது. மேலும் பல கட்டுரைகள் தீட்டி நூலை இன்னும் பெரிய அளவில் படைத் திருந்தால் நூலின் சிறப்பு அதிகரித் திருக்கும்.

### காதல் தமிழ்

ஆசிரியர் : கருவூர் கன்னல்
வெளியீடு: 76, தெற்கு நரசிம்மபுரம்
கரூர் - 639 001.

விலை: ரூ.12/- பக்கம்:111

மரபுக் கவிதைகள் 54 கொண்ட கவிதைத் தொகுப்பு இந்நூல்.

ஒவ்வொரு கவிதையிலும், கவிஞரின் தமிழ்க் காதல் வெளிப் படுத்தப்படுகிறது.

பகுத்தறிவுக் கவிஞர் பாவேந்தர் தமிழைக் காதலியாகவே பாவித்துப் பாராட்டியிருக்கிறார். அந்த மரபில், இந்நூலாசிரியரும் வந்துள்ளார் என்பதைக் கவிதை நூல் தெரிவிக் கின்றது. காதலியிடம் பேசும் போதும் கூட, தமிழையே நினைக் கிறார்.

பத்திரிகை விளம்பரங்களில் மங்கையர்கள் மிகவும் மலிவாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதைச் சாடி யிருப்பது பாராட்டுக்குரியது.

ஒவ்வொரு கவிதையிலும் உயி ரோட்டம் உள்ளது. கவிதைகளில் காணப்படும் இனிமை, நயம், சொல் லாட்சி ஆகியவை நம்மைச் சொக்க வைக்கின்றன.

—தமிழ்ப்பித்தன்

### என் பேராசிரியர் பெருந்தகை மு.வ.

ஆசிரியர்:
பேராசிரியர் சு.ந.சொக்கலிங்கம்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41, பி.சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ.12/- பக்கம்: 120

டாக்டர். மு. வரதராசனார் அவர்களின் சிறப்பம்சங்களைக் குறித்து அவரது மாணவர் படைத் திருக்கும் நூல் இது.

பிறரை ஊக்குவிக்கும் பண்பு மு.வ. அவர்களிடம் குடி கொண்டி ருந்ததைச் சான்றுகளுடன் தெரி வித்துள்ளார் நூலாசிரியர். அவரது அரும் பண்புகளைப் பட்டியலிட்டுக் காண்பித்துள்ளார்.

மு.வ. அவர்களின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் - அவரது நூல்களின் பட்டியலையும் , கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

மு.வ. அவர்களுடன் தொடர்பு கொண்ட நூலாசிரியர் தன்னைப் பற்றிய செய்திகளைக் குறைத்துக் கொண்டு மு.வ. குறித்து மேலும் பல சுவையான செய்திகளைச் சொல்லியிருக்கலாம்.

### உழைப்போம் உயர்வோம்

ஆசிரியர் : கோ. குலோத்துங்கன்
வெளியீடு: குகன் பதிப்பகம்
210, சுந்தரராச பெருமாள் காலனி,
ஜவகர் நகர், சென்னை - 82

விலை: ரூ. 10 பக்கம்: 88

தொழிலாளர்கள் தொடர்பாக அரசு உருவாக்கியுள்ள சட்டங்கள் - அவற்றின் திருத்தங்கள் - அவற்றி னால் ஏற்படும் நன்மைகள் ஆகிய வற்றை நூலாசிரியர் தக்க விதத்தில் எழுதியுள்ளார். இந்தியத் தொழிற் சங்க வரலாறும் இடம் பெற்றுள்ளது.

பணிக்கொடை, இழப்பீட்டுச் சட்டம் ஆகியவை விளக்கப்பட்டுள் ளன. தொழில் - தொழிலாளர் தொடர்பான பல்வேறு அரிய தக வல்களும் இந்நூலில் செறிந்துள்ளன.

'ஊருக்குப் பெருமை' என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில், உழைப்பாளரின் பெருமை சான்று காட்டி விளக்கப்பட்டுள்ளது. நூலில் இடம்பெற்றுள்ள தகவல்கள் ஆசிரி யரின் பேருழைப்பை எடுத்துச் சொல்கின்றன.

—எஸ்.எஸ். சுந்தரம்

### உலகச் சிந்தனையாளர் பிளாட்டோ

**ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்**
**வெளியீடு:** குமரிப் பதிப்பகம்,
8, நீலா தெற்கு வீதி,
நாகப்பட்டினம் - 611 001.

விலை: ரூ.8.00 பக்கம்:90

அட்டையில் - 'உலகச் சிந்தனை யாளர் பிளாட்டோ' என்றும், உள்ளே - 'பிளாட்டோவின் வாழ் வும் சிந்தனைகளும்' என்றும் பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த நூல், அளவில் சிறியதாக இருந்தாலும் நிறைந்த செய்திகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது.

சட்டத் துறை நூல்கள் சில வற்றை எழுதிப்பழகிய இந்த நூலா சிரியர், இந்நூல் மூலம் வரலாற்றுத் துறைக்கு வருவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மொழி பெயர்ப்பு நூல் என்பதை இந்த நூலின் நடையே வெளிச்சம் போடுவதாக இருக்கிறது இருப்பினும் - 'ஏமாற்றம்' (Despair) 'நம்பிக்கை' (Optimism) 'முகமூடி'

(Mask) என்றெல்லாம் ஆங்காங்கே அவசியமில்லாமல் தட்டுப்படும் ஆங்கிலச் சொற்களைத் தவிர்த்திருக்கலாம்.

பல்வேறு நூல் ஆதாரங்களைக் காட்டி, மிக அருமையாக விளக்கியிருக்கிறார் நூலாசிரியர். மாணவருலகம் படித்துப் பயன் பெறத்தக்க மிக நல்ல முயற்சி.

### ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்

ஆசிரியர்: எஸ். அகஸ்தியர்

வெளியிட்டோர்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:64 விலை ரூ. 6.00

தமிழிலக்கியத்தின் தொடக்கம் கனிநிகர் கவிதைகளாக மலர்ந்து, அதன்பின் கரடுமுரடான உரை நடையாக உருப்பெற்றது. நாவல் இலக்கியத்தைப் பொறுத்தவரை தமிழகத்தில் - இன்னும் சொல்லப் போனால் இந்தியாவில், தமிழில் புதின இலக்கியத்தைத் தோற்றுவித்த பெருமை மாயூரம் வித்துவான் ச. வேதநாயகம் பிள்ளையினுடைய தாகும்.

இதேபோல் - ஈழத்தில் தமிழிலக்கியத்தை முதன்முதல் உருவாக்கிய பெருமை ஜனாப் சித்தி லெப்பையினுடையதாகும்.

அப்படி இங்கே உருவான 'பிரதாப முதலியார் சரித்திரம்' —அங்கே உருவான 'அசன்பே சரித்திரம்' ஆகிய இலக்கியங்களின் கர்த்தாக்களை அவர்களுடைய தமிழ்த் தொண்டினை விரிவாக விளக்குவது மட்டுமல்ல; தமிழிலக்கியத்தின் அந்த முதல் வித்துக்களை ஒப்பாய்வு செய்வதே இந்த நூல்.

அரிய முயற்சி.

### வலவனின் வண்ணச் சிறகுகள்

ஆசிரியர்: மு. வலவன்

வெளியிட்டோர்:
முத்தையன் பதிப்பகம்,
65, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

பக்கம்:214 விலை ரூ.20

ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இனிய கவிதைகளின் தொகுப்பு நூல் இது. ஆசிரியர் ஓவியப் புலமையுடன் தமிழ்ப்புலமையும் பெற்றவர். எனவே, அத்தனையும் மரபுக் கவிதைகளாகவும், மனங்கவரும் சந்தக் கவிதைகளாகவும் இருப்பதில் வியப்பில்லை.

தெய்வ பக்திப் பாடல்கள் இதில் பல உண்டு. தமிழறிஞர்கள் புகழ் பாடும் கவிதைகளும் பொதிந்துள்ளன. அதே போல்- காதல் கவிதைகளையும், சிறுவர்க்கான பாடல்களையும், கவியரங்கப் பாடல்களையும் கூட இதில் இணைத்திருக்கிறார் நூலாசிரியர்.

கரும்பு நிகர் கவிதைத் தொகுப்பு.

—'சோழ ராஜா'

---

**புத்தகம் வாங்கும் பழக்கம் வேண்டும்**

நம்மவர் வீடுகளில் சமையலறை இருக்கும். பூஜை அறை இருக்கும். படுக்கை அறை இருக்கும். புத்தகம் வைப்பதற்கென்று ஒரு அறையோ, ஒரு இடமோ இராது. பிள்ளையார் மாடம் இருக்கும். அதற்குப் பக்கத்தில் பஞ்சாங்கம் இருக்கும். விநாயகர் அகவல் இருக்கும். அதற்குப் பக்கத்திலே பால்காரன் கணக்கிருக்கும். ஆங்கிலம், தமிழ் அகராதி, அட்லாஸ், சரித்திரப் புத்தகம் இவை இரா. வாங்குவதற்குப் பணமில்லை என்று குறை சொல்ல முடியாது. மற்றவற்றிற்குச் செலவு செய்வதில் ஒரு பகுதியை ஒதுக்கிப் புத்தகங்கள் வாங்குவதற்கென்று செலவிட வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

---

### இந்திய நாட்டு நாடோடிக் கதைகள்

ஆசிரியர்: சுமதி நாராயணன்

வெளியீடு: முத்துமணி பதிப்பகம்,
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

விலை: ரூ.13.50 பக்கம்: 140

நமது நாட்டில் பழங்காலந் தொட்டுச் சொல்லி வந்த கதைகளில் சிலவற்றைத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

காலங்காலமாகக் கூறப்பட்டு வந்த இந்தக் கதைகள் படிக்கச் சுவையான அன்பு, பண்பு, வீரம், தியாகம் முதலான தன்மைகளை அறிவுறுத்தும் அற்புதக் கதைகள்.

இந்தக் கதைகள் கேட்க, படிக்க இனிக்கும்; குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை படித்து மகிழ வேண்டிய கதைகள். கதைகளுக்கேற்ற படங்களும் இடம் பெற்றுள்ளன இந்நூலில்.

### இஸ்லாமிய நெறி

ஆசிரியர்: தி. தயானந்தன் பிரான்சிஸ்

வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
த.பெ. எண்:501,
பூங்கா நகர், சென்னை-600 003.

விலை: ரூ.14 பக்கம்: 68

மாபெரும் சமயமாகிய இஸ்லாத்தின் அடிப்படை உண்மைகளை இந்நூல் எடுத்தியம்புகிறது.

நபிகள் நாயகம் பற்றியும், இஸ்லாத்தின் அடித்தளம் பற்றியும், இஸ்லாமிய மத ஒழுக்கம் பற்றியும் இச்சிறு நூல் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. இஸ்லாமிய நெறி பற்றி அறிந்து கொள்வார்க்கு இந்நூல் ஒரு கையேடாகும்.

—பி.வி. கிரி

### தொழிற்சாலைகளில் மின்சாரச் செலவைக் குறைப்பது எப்படி?

ஆசிரியர்: வாசன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரூ.10.00 பக்கம்: 104

தொழிற்சாலைகளில் மின்சாரச் செலவினைக் குறைக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். வருமானத்தில் கணிசமான தொகை மின்கட்டணமாகப் போய்விடுவதே இதற்குக் காரணம். பல்வேறு மின் துறை அறிஞர்களின் ஆய்வுகள், அனுபவங்கள், ஆலோசனைகள் இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பொருள் குறித்துத் தமிழில் இந்நூல் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

—குமார்



# அம்பேத்கார் அமுத மொழிகள்

"உத்தமமான ஒரு சமூகம், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம், மற்றப் பகுதிகளிலும் பரவக் கூடியதாய் இருக்க வேண்டும். ஒரு உத்தமமான சமூக அமைப்பில், எல்லோர்க்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் சம்பந்தம் ஏற்படப் பல திறப்பட்ட மார்க்கங்களும் சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும்."

"இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான சாதிகளும், மூடத்தனங்களும் இருந்து கொண்டிருக்கும் நாள்வரைக்கும், நாம் ஏனைய நாடுகளின் முன்பாக, தலை நிமிர்ந்து வாழ இயலாது. வெட்கித் தலை குனிந்து தான் வாழ வேண்டும்".

ஒரு நாடு, மற்றொரு நாட்டை அடிமைப் படுத்தி வைக்க எவ்வித உரிமையும் கிடையாது.

"தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது."

"அறிவானது மனிதனுடைய வாழ்வின் அடித்தளம் ஆகும். ஆதலால், மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் ஆற்றலைக் கொண்டு நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்."

"துளி இரத்தமும் சிந்தாமல், மக்களின் சமூக, பொருளாதார வாழ்வில், புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தும் அரசுமுறையே, நவீன ஜனநாயகம் ஆகும்."

"நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.. இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி."

"அரசு, பெரும்பான்மையினரால் அமைக்கப்பட்டு, சிறுபான்மையினரின் ஒத்துழைப்பையும், சம்மதத்தையும் பெற்று, நடைபெறுவதே சுதந்திரத்தின் அர்த்தம் ஆகும். அத்தகைய சனநாயகத்தை நான் வரவேற்பேன்."

ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாக, தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரனாதல் சாலச் சிறந்ததாகும்.

"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்."

"எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக் கொண்டு, தீயவைகளை நிராகரித்து, முன்னேற முயல்கின்றன."

பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய லட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர் வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப்பற்று இல்லாமல், பற்றின்றி வாழ்வதை விட, சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.



## இந்த வரைபடம் உங்கள் வரிப் படம்...

## குறைந்துவிட்டதே!

## தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ.30,000/- வரை 100% வரி விலக்கு பெறுங்கள்.

## தேசிய சேமிப்புத் திட்டம்

### வரிவிலக்கு

வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின்கீழ் ரூ. 40,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA மற்றும் 80 C பிரிவின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான வரிவிலக்கு பெற

### உங்கள் முதலீடு

தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.10,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.20,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள்.
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/ 15 ஆண்டு PPFல் ரூ.40,000/- முதலீடு செய்யுங்கள்.

**தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-1987-ல்** முதலீடு செய்வதன் மூலம் வரிச்சுமை குறைய வழி வகுக்கலாம்.

சிறந்த பயன்கள். அதிக வரி விலக்கு. நிறைய லாபம். அனைத்தும் உங்களுக்கு!

**தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீட்டில் ரூ.1000/- அதற்கு மேலும்** முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**ஒவ்வொரு முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள்.**

**பரிசுப் பொருட்களின் விவரம்:**

| | | |
|---|---|---|
| 1 | சூப்பர் பம்பர் பரிசு | — காண்டஸா கார் |
| 1 | முதல் பரிசு | — மாருதி கார் |
| 5 | இரண்டாவது பரிசுகள் | — ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள் |
| 10 | மூன்றாவது பரிசுகள் | — கலர் டி.வி. |
| 20 | நான்காவது பரிசுகள் | — 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர் |
| 100 | ஐந்தாவது பரிசுகள் | — குக்கர் |
| 500 | ஆறுதல் பரிசுகள் | — குவார்ட்ஸ் சுவர் கடிகாரம் |

மேலும் விபரங்களுக்கு:

அனைத்து அஞ்சலகங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர்
(அல்லது)
மாவட்ட சேமிப்பு அலுவலர்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பருத்தி / வகைகள்




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

DIPR/1766/MS88/HTA

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.


சென்னை தொலைக்காட்சி நிலையம்
முழுநேர மண்டல ஒளிபரப்பு
25-3-1990





# உரிமையின் குரலும் உண்மையின் ஒளியும்

முதல்வர் கலைஞர்

# உரிமையின் குரலும் உண்மையின் ஒளியும்

முதல்வர் கலைஞர்

# பதிப்புரை

தமிழக சட்டமன்றப் பேரவையில் 1990-91 ஆம் ஆண்டுக்குரிய நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 17.3.90 அன்று அளித்தார்.

சமுதாயத்திற்கு நல்வாழ்வை அளிப்பதற்குரிய வகையில் படைக்கப்பட்ட இணையற்ற அந்த நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் நடத்திய விவாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 28.3.1990 அன்று ஆற்றிய உரையைத் தொகுத்து ''உரிமையின் குரலும்... உண்மையின் ஒளியும்'' என்னும் தலைப்பில் நூலாக்கி தமிழரசு 16.4.90 இதழின் இலவச இணைப்பாக வழங்குகிறோம்.

**இயக்குநர்,**
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

12-4-90

# உரிமையின் குரலும் உண்மையின் ஒளியும்

## முதல்வர் கலைஞர்

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாக ஆற்றியுள்ள உரைகளுக்கும், அதிலே எடுத்துச் சொல்லப்பட்டுள்ள நல்ல கருத்துக்களுக்கும் இந்த மாமன்றத்தில் அரசின் சார்பாக என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். பலரும் பேச வேண்டும், பலருக்கும் பேசுகின்ற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, பொது விவாத நாட்களை மேலும் கூட நீட்டித்துத் தந்து பலருடைய கருத்துக்களையும் இந்த மாமன்றத் திலே அறிந்துகொள்கின்ற வாய்ப்பை இந்த அவையிலே அரசு பெற்றிருக்கின்றது.

இன்றைக்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் சில பல தவறுகளை தனக்கே உரிய உணர்ச்சி வேகத்தோடு குறிப்பிட்டார். என்றாலும்கூட, பல ஆக்கபூர்வமான கருத்துக்களை இங்கே அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

பொதுவாக, இந்த மன்றத்தில் வழங்கப்பட்டுள்ள பல கருத்துக்கள் இந்த அரசு தொடர்ந்து நல்லமுறையிலே பணி யாற்றுவதற்கும், மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பயன்படக்கூடிய வகையிலே அமைந்திருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு எண்ணிப் பார்க்கிறேன். சில நேரங்களிலே விவாதத்திலே வெப்பம் தோன்றினாலும் கூட, அதற்கு மாறாக ஒளி தோன்றவும் தவறவில்லை. அப்படிப்பட்ட ஒளிக்கீற்றுகள் இந்த விவாதத்தின் மூலமாக எனக்கும், என் தலைமையில் இயங்குகின்ற இந்த அரசிற்கும் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணி நான் பெருமையடைகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பல செய்திகளை, இந்த மாமன்றத்திலே நீண்ட நெடுநாட்களாக விவாதிக்கப்பட்டு, அதற்கு விடையளிக்கப்பட்டு முடிந்து போன பல செய்திகளை

எல்லாம்கூட, மீண்டும் அவைகளுக்குப் புத்துயிர் ஊட்டுகின்ற வகையிலே இன்றைக்கு எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நான் அவைகளுக்காக எல்லாம் என்னுடைய நேரத்தைச் செலவிட விரும்பவில்லை. சில ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கு, இந்த அரசை நடத்துவதற்கு இந்த அரசின் சார்பாக மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு மற்றும் பல்வேறு பிரிவு மக்களுக்கு என்னென்ன காரியங்கள் செய்யப்படவேண்டும். எத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும், எத்தகைய சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்பன போன்ற அந்தக் கருத்துக்களை எல்லாம் ஏற்று அவை அவ்வழி நடந்திட இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கருத்துக்கள் எங்களுக்குத் துணையாக நிற்கும் என்று நான் நம்புகின்றேன்.

இந்த விவாதத்தை முதன்முதலாகத் தொடங்கி வைத்த நம்முடைய நண்பர் உகம்சந்த் அவர்கள், இது ஒரு கணக்குப்பிள்ளை எழுதுகிற, கணக்கு வாத்தியார் போடுகிற கணக்கு மாதிரி இருக்கிறது என்று சொன்னார். நல்லவேளை என்னை அவர் கணக்குத் தெரியாத மாணவன் என்று சொல்லாமல், கணக்கு வாத்தியார் என்று சொன்னதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். வாத்தியார் என்று சொன்னால் அவருடைய தலைவரையும் கூட குறிப்பிடும். அந்த வகையில் அவர் என்னை அவருடைய தலைவ்ரையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கணக்கு வாத்தியார் என்று பாராட்டியதற்காக நான் மகிழ்சியடைகிறேன்.

கணக்கு வாத்தியார் கணக்குப் போடுவது போல் தான் இருக்கிறது. இவ்வளவு வருவாய், இவ்வளவு செலவு, இவ்வளவு பற்றாக்குறை என்று சொல்லப்பட்டு இருக்கிறதே அல்லாமல் மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய எந்த நல்ல திட்டமும் இதில் அறிவிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார். அவர், ஏறத்தாழ 70க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட வரவு செலவுத் திட்டப் புத்தகத்தில் முதலில் இரண்டொரு பக்கங்களில் சொல்லப்பட்டு இருக்கிற புள்ளிவிவரங்களையும், இறுதியிலே பற்றாக்குறை நிமித்தமாக, சொல்லப்பட்டு இருக்கிற சில புள்ளி விவரங்களையும் மட்டும் படித்து விட்டு இவ்வளவு வருவாய், இவ்வளவு செலவு என்று மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். எந்த மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பினாமி நில ஒழிப்புக்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலே வர இருக்கிறது. பேருந்துகள் படிப்படியாக தேசீய மயமாக

ஆக்கப்படுவதற்கான திட்டம் அதற்கான சட்டம் இந்தத் தொடரிலே வர இருக்கிறது. கிராமங்களில் 24 ஆயிரம் பேர் மக்கள் நலப் பணியாளர்கள் அன்னியில் 10 ஆயிரம் பேர் நகர்ப்புறத்திலும் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு இந்த அறிக்கையில் செய்யப்பட்டு இருக்கிறது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் நான் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டு இருந்ததைத் தவிர நீராரும் கடல் உடுத்த என்ற தமிழ்த் தாய் வாழ்த்து, அது கடந்த காலத்தில் கழக ஆட்சியில் தான் தமிழ்த் தாய் வாழ்த்தாக எதனைக் கொள்ளலாம் என்று சிந்தித்தபோது மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களுடைய அந்தத் தமிழ்த் தாய் வாழ்த்தினையே ஏற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டு அதிலே வருகின்ற சில வரிகள் வாழ்த்திலே அமங்கலமாக வரக்கூடும் என்ற காரணத்தால் அவைகளை எல்லாம் விலக்கி விட்டு நீராரும் கடல் உடுத்த என்ற தமிழ்த் தாய் வாழ்த்தினை அரசு விழாக்களில் வாழ்த்தாக அமைத்ததும் கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான்.

அதன் தொடர்பாக நெல்லையில் அவருடைய பெயரால் பல்கலைக் கழகம்; வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 21 ஆயிரம் வீடுகள் 117 கோடி ரூபாய் செலவில்; 50 கோடி ரூபாய் செலவில் 12 ஆயிரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள்; நகர்ப்புறத்தில் 1 இலட்சம் வீடுகள் மேம்படுத்தும் திட்டம்; இராயபுரம் பகுதியில் 13 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம்; பெண் குழந்தைகள் பிறந்தவுடன் அதனைக் கொல்லுகின்ற கொடுமையைத் தடுக்க புதிய, கடுமையான ஒரு சட்டம்; சென்னையில் ஹஜ் பயணிகள் தங்குவதற்கு விடுதி; 21 நகரங்களில் முதல் கட்டமாக நவீன கழிப்பறைத் திட்டம்; நடப்புக் கூட்டத் தொடரிலே லோக் ஆயுத் போன்ற ஒரு மசோதா; பெரிய மாவட்டங்களுக்கு 2 மாவட்ட வருவாய் அதிகாரிகளும், 2 ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகளும் நிர்வாக உதவிக்காக நியமிக்கப்படுதல்; அனைத்துப் பொருட்களுக்கும் பல முனை வரி நீக்கம் செய்யப்பட்டு, ஒரு முனை வரி அறிமுகம்; பல்வேறு பொருட்களுக்கு வரி குறைப்பு; வரி நீக்கம் போன்ற சலுகைகள்; 46 கோடி ரூபாய் செலவில் 46 ஆயிரம் மகளிர்களுக்கு சேலம், தென் ஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கடந்த ஆண்டு 20 கோடி ரூபாய் என்று இருந்த ஒதுக்கீடு 30 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், சீர்மரபினருக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம்; புதிய ஆரம்பப் பள்ளிகள் 439 தொடங்கப்படும் திட்டம்; ஆதி திராவிடர்களுக்கு 40 புதிய விடுதிகள்; 40 ஆயிரம் இலவச வீட்டுமனைகள்;

47 ஆயிரம் இலவச கான்கிரிட் வீடுகள்; மீனவர்களுக்கு 6 ஆயிரம் இலவச வீடுகள்; பாவேந்தர் பாரதிதாசன், அண்ணல் அம்பேத்கார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கான தொடக்கம்; கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்குச் சிலை; மேலும் 1,200 இடைநிலை ஆசிரியர்கள் நியமனம்; விவசாயிகளுடைய பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணச் சலுகை 10 குதிரைத் திறன் வரையில் 75லிருந்து 50 ரூபாயாக குறைக்கப்பட்ட செய்தி; புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்காகத் திட்டம்; கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறியுடன் கூடிய 2 ஆயிரம் வீடுகள்; புதிய தொழில் முனைவர்களுக்கு விற்பனை வரிச் சலுகை; பல்வேறு புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள்; சாலைகள் ஏற்படுத்துவதற்கான திட்டம்; இன்னோரன்ன, பல மக்கள் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தும்கூட, எந்தத் திட்டமும் இல்லையென்றுதான் எதிர்க்கட்சியின் சார்பிலே விவாதம் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து பேசிய என்னுடைய நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு கவிதையைக் கூடப் படித்தார்.

**''தமிழ் என்கின்ற தங்கச் சீப்பு எப்போதும்**
**உள்ளது உங்கள் கைகளில்''**

அதை ஒத்துக் கொண்டார்.

**''இருந்தும் பயன் என்ன?**
**நீங்கள்தான் ஒவ்வொரு நாளும்**
**உங்களில் சில தமிழர்களை**
**மொட்டை அடிக்கிற முயற்சியில்**
**உள்ளீர்களே''**

என்று, யாரோ எழுதிய கவிதையோ அல்லது அவரே சொந்தத்தில் எழுதிய கவிதையோ தெரியாது; அதைப் படித்துக் காட்டினார். ஆக, தங்கச் சீப்பு தமிழ்; அது என் கையிலே இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டார். சீப்பு எனக்கு இப்போது பயன்படுவது இல்லை, அதிகமாக; *(சிரிப்பு)* பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்களுக்குப் பயன்படுவதற்காகத்தான் அந்தத் தங்கச் சீப்பு என்னுடைய கையிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். *(கர ஒலி)* பயன்படும் என்று நம்புகின்றேன்.

நம்முடைய நண்பர் செங்கோட்டையன் அவர்கள் ஒரு உவமையின் மூலமாக இந்த வரவு செலவுத் திட்டத்தை வர்ணித்தார்.

''ஆழ்கடலிலே மூழ்கி முத்துக்களை
முதலமைச்சர் எடுத்து வருவார்''

என்று எதிர்பார்த்தேன்! ஆனால்,

''சிப்பிகளை எடுத்து வந்திருக்கிறார்''

என்று சொன்னார்

முத்துகளை, சிப்பிகளை எடுத்த பிறகுதான், உடைத்துப் பார்த்து, அதிலிருந்து எடுக்க வேண்டும். எனவே அவரும், நான் சிப்பிகளை எடுத்து வந்ததை ஒத்துக் கொண்டு இருக்கிறார். *(கர ஒலி)* சிப்பிக்குள்ளேதான் முத்து இருக்கிறது என்று இலக்கியச் செல்வருக்கு நன்றாகத் தெரியும்; மறுக்க மாட்டார் என்று நம்புகிறேன். எனவே சிப்பிக்குள்ளே முத்து இருக்கிறது. முத்து இருப்பதைப் போன்று பல நல்ல செய்திகள், பல நல்ல திட்டங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே அமைந்து இருப்பதை, பொருளாதாரத் துறையிலே மிகப் புகழ் பெற்று விளங்குகின்ற 'எக்கனாமிக் டைம்ஸ்' 22.3.1990-இல் இந்த வரவு செலவுத் திட்டம் வந்தவுடன், அந்தப் பத்திரிகை இவ்வாறு எழுதுகிறது:

> It is no mean achievement that the closing deficit for the current year has been brought down from an estimated Rs.325.07 crores to Rs.160.74 crores despite new expenditure commitments on account of the Government's determination to carry out the D.M.K.'s poll promises and the grant of Central pay scales to State Government employees. By plugging the loopholes in excise administration, the Government has reaped a rich harvest of Rs.134 crores as additional revenue. This single stroke of fiscal adroitness had contributed largely to keeping down the current year's deficit. These are the right setting for a take-off in resources mobilisation. The extension of further concessions of electricity tariff to agricultural pumpsets reflects the rural bias of the Government.

அதற்குத் தமிழாக்கமாக, ''தி.மு.க., தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிட தீர்மானமாக இருந்ததாலும், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பள விகிதத்தைக் கொடுத்ததாலும் ஏற்பட்ட புதிய செலவினங்கள் இருந்தும்கூட, நடப்பு ஆண்டின் இறுதிப் பற்றாக்குறையை 325.07 கோடி ரூபாயிலிருந்து 160.74 கோடி ரூபாயாகக் குறைத்தது சாதாரணமான சாதனை

யல்ல. ஆயத்துறை நிர்வாகத்தில் காணப்பட்ட ஓட்டைகளை யெல்லாம் அடைத்ததால் அரசுக்கு 134 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிட்டியது. ஆயத்துறை நிர்வாகத்தில் மேற்கொண்ட இந்த ஒரே ஒரு நடவடிக்கை, சிறந்த, செம்மையான நிதி நிர்வாக சாதுரியமாகும்; இதுதான் நடப்பு ஆண்டின் நிதிப் பற்றாக் குறையைக் குறைத்திடப் பெரிதும் காரணமாக இருந்தது; நிதி ஆதாரங்களைத் திரட்டி, பெருக்குவதற்கு இது ஒரு சரியான பின்னணியாகும்.

''விவசாய பம்ப் செட்டுகளுக்கு மேலும் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அரசின் ஊரக வளர்ச்சி குறித்த அக்கறையினைத் தெளிவாக எடுத்துக்காட்டும்'' என்று 'எக்னாமிக் டைம்ஸ்' இவ்வளவு அற்புதமான ஒரு விமர்சனத்தை இந்த அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து எழுதி வெளியிட்டு இருக்கின்றது.

மத்திய மாநில அரசு உறவுகளைப் பற்றி, தொடர்ந்து நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில், குறிப்பாக, அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலம் முதல் நாம் சுட்டிக்காட்டி வருகின்றோம். அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி, இடையிலே அ.தி.மு.க. ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி, மீண்டும் இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமாகத் தொடர்ந்து மலர்ந்து இருக்கிற இந்த நேரமாக இருந்தாலும் சரி, மத்திய மாநில உறவுகளில் மேலும் செம்மையான ஒரு நிலை உருவாக வேண்டுமென்றும், எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் கையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழல் மாநில அரசுகளுக்கு இருந்திருக்கக் கூடாது என்றும் நாம் கூறிவந்திருக் கிறோம். இன்றைக்கு இந்தியாவின் பிரதமராக வாய்த்திருக்கின்ற மாண்புமிகு வி.பி. சிங் அவர்கள், அண்மையில் கேரளத்தில் ஆற்றியிருக்கின்ற ஒரு உரை நமக்கெல்லாம் ஆறுதல் அளிக்கின்ற ஒரு உரையாகும். அவர்கள் சொன்னார்கள், 'நமது மாநிலங் களில் இருக்கின்ற அரசுகள், மத்தியிலே இருக்கின்ற அரசைப் பார்த்து யாசகம் கேட்கிற அரசுகளாக இருக்கக்கூடாது. நமக்குக் கிடைக்கிற ஒன்றை மாநில சகோதரர்களோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய அந்த சகோதர உணர்ச்சியை நாம் பெறுவோம். கிடைப்பது ஒரு கேக்காக இருந்தாலும் அதை ஒவ்வொரு மாநில சகோதரர்களுடனும் பகிர்ந்து கொள்வோம்' என்று குறிப்பிட் டிருந்தார்கள். அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்பதை இந்த வரவு செலவுத் திட்டத்திலும் நாமும் வலியுறுத்திக் காட்டியிருக்கிறோம்.

நண்பர் பி.எச். பாண்டியன் அவர்கள் பேசியபோது, காஷ்மீர் கலவரங்களை எடுத்துச் சொல்லி, அதைப் போன்று அரசியல் சட்டத் திருத்தங்கள் நம்முடைய மாநிலங்களுக்கெல் லாம் வந்தாக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். காஷ்மீரை மாத்திரம் இன்றைக்கு உவமைக்கு அழைத்து, மாநில உரிமை களுக்காக வாதாடுவதைவிட நாம் தொடர்ந்து சொல்லிவருகின்ற மாநில சுயாட்சிக் கொள்கை வெற்றிபெற இன்றைக்கு மத்தியில் அமைத்திருக்கின்ற அரசு பேருதவியாக இருக்கும் என்ற நம்பிக் கையோடு, அந்த அரசினுடைய பலத்தை மேலும் பெருக்கி அத்தகைய ஒரு தீர்மானம் அரசியல் சட்டத்திலேயே வடிவு எடுக்கின்ற வகையில், நாம் பணியாற்றிடவேண்டும். காஷ்மீர் நிலவரம் அரசியல் ரீதியாக இங்கே வரவேண்டுமேயல்லாமல், இன்றைக்கிருக்கிற காஷ்மீர் நிலவரம் இந்தியாவிலே எங்கும் வரவேண்டாம், அதைப்போல பஞ்சாப் நிலவரமும் இந்தியாவில் எங்கும் வரவேண்டாம் என்பதுதான் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுடைய பிரார்த்தனையாக இன்றைய தினம் இருந்து வருகிறது என்பதையும் இங்கே ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு ராஜீவ்காந்தி அவர்களைத் தலைமை அமைச் சராகக் கொண்டிருந்த மத்திய அரசு : நிதிநிலை அறிக்கையாக இருப்பதால் அதைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்,— ஒன்பதாவது நிதிக் குழு ஒன்றை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட அந்தக் குழு, சரியாகச் செயல்படவில்லை அதிலே இருக்கவேண்டிய அளவுக்கு உறுப்பினர்கள் எண்ணிக் கையும் இல்லை என்ற கருத்தை, தமிழக அரசின் சார்பாக நானும், கேரளத்தின் சார்பாக முதலமைச்சர் நாயனார் அவர் களும், மேற்கு வங்கத்தின் சார்பாக முதலமைச்சர் ஜோதிபாசு அவர்களும், டில்லியில் நிருபர்களிடத்திலே பேசும்போது அப் போதே குறிப்பிட்டிருக்கிறோம். எனினும் கடந்த கால அரசு நியமித்த ஒன்பதாவது நிதிக்குழுவினுடைய அறிக்கையை, இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசு பெற்று, அதை அவையில் வைக்க இருக்கிறது. எனக்கிருக்கிற அச்ச மெல்லாம், அந்த சிபாரிசுகளை அப்படியே இன்றுள்ள மத்திய அரசு நிறைவேற்ற முற்படுமேயானால், மாநிலங்கள், அதிலும் குறிப்பாக தமிழ்நாடு பெரிதும் ஏமாற்றப்படும் என்பதை நான் தெரிவிக்கவேண்டியவனாக இருக்கிறேன். அந்த ஒன்பதாவது நிதிக்குழு பற்றி நிதிநிலை அறிக்கையிலே கூடக் குறிப்பிட்டு, மாநில அரசினுடைய அதிருப்தியை நான் தெரிவித்திருக்கிறேன். அந்த அறிக்கையை நீங்கள் படித்திருப்பீர்கள் என்றும் நம்பு கிறேன்.

''உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்'' என்பது இந்திராகாந்தி அம்மையார் ஆண்ட காலத்திலும் மாத்திரமல்ல, இன்றைக்கும் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருக்கிற இந்த நேரத்திலும் நாம் தேசிய முன்னணியின் ஒரு அங்கமாக இருந்தாலும், அந்தக் கருத்திலிருந்து இந்த அரசு பின்வாங்குகிற அரசல்ல என்றவகையில் ஏழாவது நிதிக்குழு - அதாவது 1979-84-ஆம் ஆண்டுகளுக்காக அமைந்த அந்த ஏழாவது நிதிக்குழு ஆயத்தீர்வையில் 40 சதவீதம் மாநிலப் பங்காக வழங்கியது. எட்டாவது நிதிக்குழு அதை 45 சதவீதமாக உயர்த்தி அதில் 5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்கியது. எனவே முதலில் இருந்த 40 சதவீதம் என்ற பங்கு மாநிலங்களுக்குக் குறையாமல் அப்படியே இருந்தது. 40-ஐ, 45-ஆக உயர்த்தி பற்றாக்குறை மாநிலங்களுக்கு 5 சதவீதம் ஒதுக்கிய காரணத்தால் முதலிலே 7-வது நிதிக்குழுவிலே வந்த அந்த 40 சதவீதம் அப்படியே இருந்தது. ஆனால் 9-வது நிதிக் குழுவினுடைய முதல் அறிக்கையிலே இதே விகிதாச்சாரம் பின்பற்றப்பட்டது. ஆனால், இறுதி அறிக்கையிலே அந்த விகிதாச்சாரம் நாம் ஏமாறுகிற அளவுக்கு மாற்றப்பட்டுவிட்டது. அதை அறிக்கையிலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். அதாவது மற்ற மாநிலங்களுக்கெல்லாம் 37.575 சதவீதம், பற்றாக்குறை மாநிலங்களுக்கு 7.425 சதவீதம் என்று அது மாற்றப்பட்டு விட்டது. இதனால் மாநிலங்களுக்கு ஏற்கெனவே கிடைத்து வந்த அதாவது 7-வது, 8-வது நிதிக்குழுவில் கிடைத்து வந்த 40 சதவீதம் என்கிற பங்கு 37.575 என்ற சதவீதமாகக் குறைந்து விட்டது.

•

எனவேதான் அறிக்கையிலேயே நான் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறேன். மத்திய அரசுக்கு, மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கை 50 சதவீதமாக உயர்த்தி அதில் எல்லா மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கை 50 சதவீதமாக உயர்த்தி அதில் எல்லா மாநிலங்களுக்கும் 42.5 சதவீதம் என்று வழங்கி விட்டு, ஏற்கெனவே இருந்த 40-க்கு மேலே 2.5 என்று அதாவது 42.5 சதவீதமாக வழங்கிவிட்டு எஞ்சிய 7.5 சதவீதத்தை ஏற்கெனவே கொடுத்த 5-க்கு மேல் 2.5 என்று உயர்த்தி, பற்றாக்குறை மாநிலங்களுக்கு அளிக்கலாம் என்ற கருத்தை மத்திய அரசுக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையின் மூலமாக நான் தெரிவித்திருக்கிறேன். அதையே கடிதமாக பிரதமருக்கும், நிதியமைச்சருக்கும், மத்தியிலே உள்ளவர்களுக்கும் நான் தெரிவித்திருக்கிறேன். 9-வது நிதிக்குழு தமிழ்நாட்டின் வருவாய் ஆதாரங்கள், திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகள் ஆகியவைகளை எல்லாம் கணக்கிடும்போது ஒரு பெரிய தவறு

செய்திருக்கிறது. என்ன தவறு என்றால் தமிழ்நாட்டினுடைய வரவு-செலவில் உபரியாகப் பணம் இருக்கும் என்ற ஒரு தவறான கணக்கை 9-வது நிதிக்குழு தொடங்கி, அந்த உபரித் தொகையையும் மிக அதிகமாகக் கணக்கிட்டு, மின்சார வாரியத் திற்கு நாம் வழங்குகிற மானியம், உணவுக்கு நாம் தருகிற பல கோடி ரூபாய் மானியம், இதைப் போன்ற மானியத் தொகை களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் உபரித் தொகை அதிகமாக இருக்கும் என்ற பொறுத்தமற்ற வாதத்தை 9-வது நிதிக்குழு ஆரம்பித்து, சாதாரணமாக திட்டம் சம்பந்த மாக மத்திய அரசினுடைய மானியம் அல்லது கடன் ஆகிய வற்றை மத்திய திட்டக்குழுதான் ஒதுக்கீடு செய்யும் என்ற நிலைக்கு மாறாக தன்னுடைய கருத்தை 9-வது நிதிக்குழு அறி வித்திருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு 9-வது நிதிக்குழு ஒதுக்கக்கூடிய தொகை, இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களுக்கு 9,000 கோடி ரூபாய். ஆனால் அவர்கள் இன்றைக்கு ஒரு அடிப்படைக் கருத்தை மையமாகக் கொடுத்ததன் காரணமாக இந்த 9,000 கோடி ரூபாயில் நம்முடைய தமிழ்நாட்டினுடைய பங்கு 43.79 கோடி ரூபாய் என்கிற அளவுக்குக் குறைந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற் கெனவே என்.டி.சி. அதாவது 'நேஷனல் டெவலப்பெண்ட் கவுன்சில்', தேசிய வளர்ச்சிக் குழு, மாநில முதலமைச்சர்கள் எல்லாம் அமர்ந்து கருத்துக்களைத் தெரிவிக்கிற, பிரதமர் தலைமையிலே கருத்துக்களைத் தெரிவிக்கிற அந்த தேசிய வளர்ச்சிக் குழுவில் 'காட்கில் ஃபார்முலா' படி நமக்கு வந் திருக்கவேண்டிய தொகை அதாவது அந்த 'ஃபார்முலா' கடைப் பிடிக்கப்பட்டிருந்தால் அந்த 9,000 கோடி ரூபாயில் இந்த மாநிலத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய தொகை 400 கோடி ரூபாய். ஆனால் கடந்த கால மத்திய அரசு நியமித்த 9-வது நிதிக்குழு உபரித்தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நிர்ணயித்த காரணத்தால் 400 கோடி ரூபாய்க்குப் பதிலாக, அதாவது திட்டக்குழுவின் வேலையை நிதிக்குழு ஏற்றுக் கொண்ட காரணத்தால், 400 கோடிக்குப் பதிலாக 43 கோடி என்ற அளவுக்குத்தான் தமிழ்நாட்டிற்கு இன்றைக்குக் கிடைத்து இருக்கிறது.

இதிலே கூட இன்னொரு அநியாயத்தைச் சொல்லவேண்டும் என்றால் இந்த 9,000 கோடி ரூபாயில், அதாவது 5 ஆண்டுக் கான 9,000 கோடி ரூபாயில் உத்தரபிரதேசத்திற்குக் கிடைப்பது 2,886 கோடி ரூபாய்; பீகாருக்குக் கிடைப்பது 1,374 கோடி ரூபாய்; மத்தியப் பிரதேசத்திற்குக் கிடைப்பது 1,047 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்திற்குக் கிடைப்பது 998 கோடி ரூபாய்;

ராஜஸ்தானிற்குக் கிடைப்பது 960 கோடி ரூபாய்; ஆந்திராவிற்குக் கிடைப்பது 341 கோடி ரூபாய்; கேரளாவுக்குக் கிடைப்பது 412 கோடி ரூபாய்; தமிழ்நாட்டிற்குக் கிடைப்பது 43 கோடி ரூபாய்; கர்நாடகத்திற்கு எதுவும் இல்லை. இங்கேதான், இந்த நிதிக்குழுவில் பங்கேற்றிருந்த நீதிபதி திரு. ஷக்தர் குரேஷி அவர்கள் மறுப்புக் குறிப்பு எழுதினார்கள். நாம் அதை எண்ணிப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நீதிபதி ஷக்தர் குரேஷி அவர்கள் எழுதிய மறுப்புக் குறிப்பில் குறிப்பிடுகிறார்.

> "Right from the inception, there was hostile criticism in the Press about the Commission's composition. Its Chairman and Members were labelled as henchmen of the Government of India. There was an apprehension in the minds of several State Governments that this Commission may not be impartial and that it may make the recommendations which will be favourable to the Centre at the cost of the State, especially those ruled by the political Parties different from the one in power at the Centre.
>
> The Commission did try to dispel the apprehensions and to reassure the State Governments and others of Its independence, impartiality and fair approach. The situation would have been avoided if the States were taken into confidence and the composition and the terms of reference of the Commission..."

அதாவது ஆரம்பம் முதற்கொண்டு பத்திரிகையிலே கமிஷனைப் பற்றி கடுமையான விமரிசனங்கள் இருந்து வந்துள்ளன. கமிஷனின் தலைவரும் உறுப்பினர்களும் மத்திய அரசின் எடுபிடிகள் என முத்திரையிடப்பட்டுள்ளார்கள். இந்தக் கமிஷன் பாரபட்சமற்ற முறையிலே செயல்படாது. அது மத்திய அரசுக்கு சாதகமான பரிந்துரைகளையும் செய்யும். அதுவும் மத்தியிலே ஆட்சியிலே இருக்கிற கட்சிக்கு மாறுபட்ட கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் என்ற வகையில் ஐய உணர்வு பல மாநில அரசுகளுக்கு இருந்தது. கமிஷன் இந்த ஐயத்தைப் போக்கி சுதந்திரத் தன்மை, நடுநிலைமை, நேரிய அணுகுமுறை ஆகியவற்றை மாநில அரசுகளுக்கு உணர்த்தவும், உறுதி செய்யவும் முயன்றது. கமிஷனின் அமைப்பைப் பற்றியும், செயலாக்கம் பற்றியும் முன்பே மத்திய அரசு மாநில அரசுகளுக்குத் தெரிவித்திருந்தால்

இப்படிப்பட்ட நிலைமை தோன்றியிருக்காது என்று கூறிவிட்டு, கார்ப்பரேட் வரி, அன்றைக்கு பாண்டியன் அவர்கள் குறிப் பிட்டார்கள், அந்த கார்ப்பரேட் வரி, கம்பெனி வரிகள் கூட மாநிலங்களுக்குத் தராததை நீதிபதி குரேஷி அவர்கள் வன்மையாக அதிலே கண்டித்து, தன்னுடைய மறுப்புள்ள குறிப்பை எழுதி யிருக்கிறார்.

இதிலிருந்து நன்றாகப் புரிகிறது, அன்றைக்கு மத்திய அரசிலே இருந்தவர்கள், அமைத்த நிதிக்குழுவிலே உள்ள வர்கள், கட்சிக் கண்ணோட்டத்தோடு மாநிலங்களைப் பார்த் திருக்கிறார்கள். அதனால்தான் உத்தரப்பிரதேசத்திற்கு 2,856 கோடியும், அப்போது பொம்மை தலைமையிலே அரசாளப்பட்ட கர்நாடகத்திற்கு ஒன்றுமே இல்லாத நிலைமையும், நம்முடைய தமிழ்நாட்டிற்கு, கேட்கவே வேண்டாம் ஏதோ 43 கோடியும், கேரளத்திற்கு 400 கோடியும், ஆந்திரத்திற்கு, என்.டி.ஆர். தலைமையிலே இருந்த ஆந்திரத்திற்கு 340 கோடியும் என்று ஆக்கி, உத்தரப்பிரதேசத்திற்கு 2,856 கோடி, பீகாருக்கு 1,324 கோடி, மத்தியப் பிரதேசத்திற்கு 1,047 கோடி என்கின்ற அளவுக்கு ஆயிரத்தைத் தாண்டி அவர்களுக்கெல்லாம் கொடுத்து, மீதி ஒதுக்கப்பட்டு இருக்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் காணு கிறோம். இதை மத்திய அரசுக்கு இந்த அவையின் மூலமாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதை மீண்டும் பரிசீலனை செய்து, இந்த நிதிக்குழுவினுடைய அறிக்கை மாநிலங்களை ஏமாற்றக்கூடிய ஒன்று, மாநிலங்களிடத்திலே பாரபட்சம் காட்டக்கூடிய ஒன்று, அது மாத்திரமல்லாமல், அதற்கென எடுத்துக்கொண்ட அடிப்படையே தவறானது. திட்டக்குழு ஆற்றவேண்டிய பணியை நிதிக்குழு எடுத்துக்கொண்டது அதை விடத் தவறானது என்று எங்களைப் போன்ற முதலமைச்சர்களுடைய கருத்துக்களுக்குச் செவிசாய்த்து, மத்திய அரசு இதிலே மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் பல்வேறு ஆக்கபூர்வமான பிரச்சினைகள், அவர்களுக்கு எழுந்துள்ள ஐயப்பாடுகள் இவைகள் எல்லாம் எடுத்துக்கூறப் பட்டிருக்கின்றன.

கொள்முதல் பற்றி நம்முடைய ஜனதா தள கட்சியினுடைய உறுப்பினர் நண்பர் பூவராகன் அவர்கள் பேசும்போது நுகர் பொருள் வழங்கு துறையைப் பொறுத்தவரையிலே கொள்முதலைச் சரியாகச் செய்யவில்லை என்கின்ற ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். நான் அவருக்கு விளக்கம் அளிக்க விரும்பு கிறேன். இந்த ஆண்டில் நெல் கொள்முதல் பணி திறம்பட

நடைபெற்று வருகிறது. 16.3.1990 வரை 9,57,711 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இதே நாளில் 7,79,420 மெட்ரிக் டன்கள்தான் கொள்முதல் செய்யப்பட்டது என்பதை நினைவுகூரும்போது, இது மிக அதிகமானது என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடியும். ஒவ்வொரு பகுதிக்கும் பொது விநியோக முறையில் எவ்வளவு அரிசி தேவை என்பது ஏற்கெனவே கணக்கிடப் பட்டுள்ளது. அதற்கு ஏற்பத்தான் அரிசி முன்கூட்டியே அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 19 நவீன ஆலைகளை இயக்கி வருகிறது. இவைகளின் மொத்த அரைவைத் திறன் 4.86 இலட்சம் மெட்ரிக் டன் நெல் ஆகும். இவை அன்றி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரைவை முகவர்களை அமர்த்தி, அவர்கள் மூலமும் நெல் அரைவை செய்யப்படுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நவீன ஆலைகளுக்குத் தேவைப்படும் நெல் போக மீதி நெல்லை அரைவை முகவர்கள் மூலம் அரைவை செய்யப்பட்டு அவை அரசு பொது விநியோகத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. நெல் கொள்முதல் செய்யும்போது தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர், நெல்லின் தரம் குறித்துச் சான்று வழங்கிய பின்புதான் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அவ்வாறு கொள்முதல் செய்த நெல், கிடங்கு வசதிகளுக்கு ஏற்பவும், அமர்த்தப்பட்ட லாரி களுக்கு ஏற்பவும் வெவ்வேறு மாவட்டக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப் படுகிறது. அரிசி முகவர்களிடமிருந்து பெறப்படும் அரிசியின் தரமும் சரிபார்த்த பிறகுதான் வழங்கப்படுகிறது.

பொதுவாக இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர் களும், தோழமைக் கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. லத்தீப் தவிர மற்ற எல்லா உறுப்பினர்களும் இன்றைக்கு அரிசியின் விலை உயர்த்தப்பட்டிருப்பதைப் பற்றி எடுத்துச்சொல்லி, இது மிகக் கடுமையான உயர்வு என்றெல்லாம் பேசி வாதிட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் இன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டார்கள். அதுபோல அன்றைக்குப் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. ரமணி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்களும் மற்றும் உறுப்பினர்களும் இந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இந்த அரசு, இந்த அரிசிக்கு எவ்வளவு மானியம் இதுவரையிலே வழங்கி

வந்து, இன்னமும் அது வழங்கவேண்டியிருக்கிறது என்ற கணக்கை எடுத்துக்கூற விரும்புகிறேன். சாதாரண ரக, அதாவது மோட்டா ரக அரிசியை எடுத்துக்கொண்டால் அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு அடக்க விலை ரூபாய் 3.73 ஆகிறது. விலை உயர்த்தப்பட்டதற்கு முன்பு இந்த அரிசி மக்களுக்கு வழங்கப்பட்ட போது ரூபாய் 1.73க்கு வழங்கப்பட்டது. எனவே, கிலோ ஒன்றுக்கு அரசு மானியம் 1 ரூபாய் 98 காசு தர வேண்டியிருந்தது. சாதாரண அரிசி, மொத்தம் வழங்கியது 4.15 இலட்சம் டன்கள் ஆகும். சாதாரண அரிசி மூலமாக மாத்திரம் அரசுக்கு இழப்பு, அதாவது மோட்டா ரகம் மூலமாக மாத்திரம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது 82 கோடியே 21 இலட்சம் ரூபாயாகும்.

சன்னரக அரிசிக்கு, கிலோ ஒன்றுக்கு அடக்க விலை அரசுக்கு ரூபாய் 3.88 ஆகிறது. மக்களுக்கு அது கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.25க்கு வழங்கப்பட்டது. ஆக, கிலோ ஒன்றுக்கு அரசுக்கு இழப்பு, மானியமாக ஆன செலவு ரூபாய் 1.63. சன்னரக அரிசி மொத்தம் வழங்கப்பட்ட அளவு 7.75 இலட்சம் டன்கள். இந்த அரிசியின் மூலம் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 126.02 கோடி ரூபாய்.

மிக சன்ன ரக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4.11. பொது விநியோகத்தில் வழங்கியபோது இதன் விலை ரூபாய் 2.50. இதனால் கிலோ ஒன்றுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபாய் 1.61. மொத்தம் வழங்கப்பட்ட மிக சன்ன ரக அரிசியின் அளவு 8.10 இலட்சம் டன்கள். இதன் மூலமாக மட்டும் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 130.65 கோடி ரூபாய். எனவே, இந்த மூன்று ரக அரிசிக்கு-மோட்டா ரகம், சன்ன ரகம் மற்றும் மிக சன்ன ரகம் ஆகிய இந்த ரக அரிசியும் ஏறத்தாழ 20 லட்சம் டன்கள் வாங்கிய வகையில் அரசுக்கு இழப்பு-வாங்கி, குறைந்த விலைக்கு விற்ற வகையில் அரசு மானியமாகக் கொடுத்தது 338.88 கோடி ரூபாய். இந்தத் தொகையை அரசு மானியமாகத் தர வேண்டிய சூழ்நிலை. இப்போது இதிலேதான் கொஞ்சம் விலையை ஏற்றியிருக்கிறோம்.

அப்படிப் பார்த்தால்கூட மோட்டா ரக அரிசியின் அடக்க விலை ரூபாய் 3.73. விற்கப்படும் விலை இப்போது 2 ரூபாய். அரசுக்கு இதிலே கிலோ ஒன்றுக்கு இழப்பு ரூபாய் 1.73; 4.15 லட்சம் டன் அரிசி மூலமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபாய் 71.84 கோடி.

சன்ன ரக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.88. விற்கப்படும் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.00.

இதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு, கிலோ ஒன்றுக்கு 88 பைசா. ஆக, 7.75 லட்சம் டன்னுக்கு ஏற்பட்ட இழப்பு 67 கோடியே 89 லட்சம் ரூபாய்.

மிக சன்ன ரக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4.11. இப்போது விற்கப்படும் விலை ரூபாய் 3.50. இதனால் அரசுக்கு கிலோ ஒன்றுக்கு ஏற்பட்ட இழப்பு 61 பைசா. ஆக, 8.10 லட்சம் டன்னுக்கு அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 49 கோடியே 65 லட்சம் ரூபாய். ஆக, இந்த மூன்று ரக அரிசிக்கும் சேர்த்து அரசுக்கு இழப்பு ரூபாய் 189 கோடியே 38 லட்சம் ரூபாய் ஆகிறது. 300 சொச்சம் கோடியிலிருந்து 180 என்கின்ற அளவுக்கு அந்த மானியத் தொகை குறைந்து வந்திருக்கிறது. ஆனால் சத்துணவுக்காக வாங்கப்படும் அரிசிக்குத் தருகின்ற மானியம் ரூ.110 கோடி. இலவச அரிசி - ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குக்கூட இலவச அரிசி வழங்குவதற்கு, 3 தடவை வழங்குவதற்கு ரூ.36 கோடி. ஆக 335.38 கோடி ரூபாய் இப்போதும் நாம் மானியமாக வழங்க வேண்டியிருக்கிறது. எனவே ஏறத்தாழ 400 கோடி ரூபாய் அளவிலே இருந்த இந்த மானியத் தொகை, இந்த விலை ஏற்றங்களுக்குப் பிறகு, நம்முடைய மொத்தத் தேவையினை மனதிலே வைத்துப் பார்க்கும்போது, 335.38 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஆகியிருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஏனென்றால் அண்டையில் இருக்கிற மாநிலங்களின் விலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கர்நாடகத்திலே, இங்கே 2 ரூபாய் சாதாரண அரிசி என்றால், அங்கே 2.70 காசு; சன்ன அரிசி இங்கே 3 ரூபாய் என்றால் கர்நாடகத்திலே 3 ரூபாய் 65 காசு; அங்கே மிகச் சன்ன அரிசி விற்பனை இல்லை. கேரளாவில், இங்கே 2 ரூபாய் என்றால் அங்கே மோட்டா அரிசி 2.66 காசு; சன்ன அரிசி இங்கே 3 ரூபாய், கேரளாவிலே 3.27 காசு. மிகச் சன்னம் இங்கே 3.50, கேரளாவிலே 3.48. 2 காசுதான் குறைவு. மராட்டியத்திலே, இங்கே 2 ரூபாய் மோட்டா அரிசி, அங்கே 2.90. சன்ன அரிசி 3.60, மிகச் சன்னம் 3.85. ஒரிஸ்ஸாவிலே 3.80 வரையிலே விற்பனையாகிறது. 2.95 லேயிருந்து ஆரம்பமாகி 3.80 வரையிலே விற்பனையாகிறது. மேற்கு வங்கத்தில் 2.83 சாதாரண அரிசி, சன்னம் 3.49, மிகச் சன்னம் 3.71. எனவே தான் இந்த அரிசி விலையை ஏற்ற வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதேயல்லாமல் வேறல்ல.

நான் அன்றைக்குச் சொன்னதுபோல், அரிசி விலை ஏறி இருந்தாலும்கூட, மக்களுக்குப் பல நல்வாழ்வுத் திட்டங்கள், பல்வேறு உதவித் திட்டங்கள், பல்வேறு சலுகைகள், விவசாயி

களுக்குப் புதிது புதிதாக வழங்கப்பட்டு வருகிற சலுகைகள், கடன்கள் ரத்து, அவர்கள் வாங்குகிற கருவிகளுக்கு விற்பனை வரியிலே சலுகை, இதுபோன்ற பல்வேறு காரியங்களால் அவர்களுக்கு ஓரளவு தாங்குகிற சக்தி ஏற்பட்டிருக்கிறதென்ற சூழ்நிலையிலேதான் இதையும் தாங்கிக் கொள்வார்கள், இல்லா விட்டால் ஒரு பெரிய பற்றாக்குறை, வரவு செலவுத் திட்டத்திலே ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்துத்தான் இதைச் செய் கிறோம். ஆனால் ஒன்று, இன்னும் பத்து நாளிலோ, 20 நாளிலோ மத்திய அரசு மீண்டும் அரிசியின் விலையை ஏற்றக் கூடும். நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். மத்திய அரசு அப்படி ஏற்றுகிற நேரத்திலே நம்முடைய மாநில அரசு இந்த விலையை விட அதிக விலையாக அந்த விலையை உயர்த்தாது என்ற உறுதியை மாத்திரம் என்னால் இப்போது அளிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். இராதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில் அரிசியின் விலை என்ன, அவர்கள் என்ன வழிமுறைகளைக் கையாள்கிறார்கள் என்பதையும் சொன்னால் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு முதலவர் கலைஞர்:** ஏற்கெனவே பத்திரி கைகளிலே விளம்பரம் மூலமாகவே அரசு சொல்லியிருக்கிறது. ஆந்திராவிலே 2 ரூபாய். எப்படி 2 ரூபாய் என்றால், யாருக்கு என்றால், 500 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்களுக்குத் தான். 501 ரூபாய் உள்ளவர்களுக்குக் கிடையாது. 2 ரூபாய் அங்கே அரிசி விலை. 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு அந்த இரண்டு ரூபாய் அரிசி கிடையாது. வெளிமார்க்கெட்டில் 4 ரூபாய், 5 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும். நான் நேரிலே அறிந்தது. அதைக்கூட மாற்றித்தான் ஆக வேண்டுமென்றும், இல்லாவிட்டால் கட்டுபடியாகாது என்றும் இன்றைய முதலமைச்சர் திரு. சென்னா ரெட்டி அவர்கள் என்னிடம் பேசும்போது சொல்லிக் கொண்டிருந்தார்கள். இது தான் அங்குள்ள நிலைமை.

விவசாயிகளுடைய கடன்களைப் பற்றி மத்திய அரசு வெளி யிட்டுள்ள அறிவிப்பை ஒட்டி இங்கேயும் நம்முடைய உறுப் பினர்கள், கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கிறார்கள். மத்திய அரசு விவசாயிகளுடைய கடன் 10,000 ரூபாய் வரை என்பதற்குச் சில நிபந்தனைகளை எல்லாம் போட்டு, அது அவர்களாகவே விரும்பி வேண்டு மென்றே தராமல் இருக்கிற கடன்களுக்கு அல்ல; கட்ட முடியாத

சூழ்நிலையில் இருக்கிற கடன்களுக்கு; அதுமட்டுமல்லாமல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் மண்டலக் கிராமிய வங்கிகள் - ரீஜினல் ரூரல் பேங்க்ஸ் - இவைகளிலே நீண்டகால மற்றும் குறுகிய காலக் கடன்களுக்கு நிவாரணம் அளிக்கப்படு மென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 2.10.89 அன்று தவணை கடந்த நிலுவைத் தொகைகளுக்கு மாத்திரம் இந்த நிவாரணம் பொருந்தும் என்று சொல்லியுள்ளது. வேண்டு மென்றே கடனைக் கட்டாமல் நிலுவையாக வைத்துள்ள விவ சாயிகளுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட மாட்டாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன் களைப் பற்றி மத்திய அரசு, மாநில அரசுக்குத் தெளிவான வழிகாட்டிகளைத் தரவில்லை என்று திரு. ரமணி அவர்கள் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு நான் இந்த மாமன்றத்திலே பதில் சொல்லியிருக்கிறேன்.

மத்திய நிதி அமைச்சர் மதுதண்டவதே அவர்கள் 23-ஆம் தேதியிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதை இந்த மாமன்றத்திற்கு, தகவலுக்காகத் தர நான் விரும்பு கின்றேன்.

My dear Karunanidhi,

You would have no doubt, seen the announcement made in the Budget speech on 19th March 1990 in regard to the New Debt Relief Scheme in respect of farmers, artisans and weavers. For ready reference, I am enclosing an extract of the relevant portion of the speech. I should appreciate if you could kindly introduce a scheme on the same lines in respect of Co-operative Banks within your purview. An immediate decision needs to be taken by you as it is important to ensure that there is no problem in re-cycling of bank credit, for ensuing kharif season. In order to help the State Governments in working out the debt relief scheme on the same pattern as the Central Government, I am asking NABARD to get in touch with the State Co-operative Banks. I am also requesting the Chairman, NABARD, to provide any assistance that may be needed in finalising the scheme as early as possible. I shall also be happy to discuss the matter with you, if necessary.

yours sincerely

MADHU DANDAVATHE.

என்று நேற்றைக்கு முன்தினம் எனக்கு இந்தக் கடிதம் வந்து இருக்கிறது. அங்கே நிதிநிலை அறிக்கையிலே என்ன கருத்தைச் சொன்னார் என்கின்ற அந்தத் தொகுப்பும் எனக்கு அளிக்கப் பட்டு இருக்கிறது. ஏற்கெனவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கடந்த காலத்தில் சிறு விவசாயிகளுக்கு 67 கோடி ரூபாய் கடன் நிவாரணம் அளிக்கப் பட்டதை, கவர்னர் ஆட்சிக்குப் பிறகு பொறுப்பேற்றுக் கொண்ட இந்த அரசு தன்னுடைய சுமையாக ஏற்றுக் கொள்ள நேரிட்டது. ஏனென்றால் அவர்கள் கடன் ரத்துச் செய்தார்கள், விவசாயிகள் விடுபட்டார்கள். ஆனால் அந்தக் கடனைக் கூட்டுறவு வங்கி களுக்குத் தரக்கூடிய அந்தப் பொறுப்பை அவர்கள் முற்றாக நிறைவேற்றவில்லை. எனவே அதிலே ஒரு 67 கோடி ரூபாயை இந்த அரசு பொறுப்பேற்று அவர்களுக்குத் தரவேண்டிய நிலை மைகள் ஏற்பட்டன. அதைத் தந்தோம். கவர்னர் ஆட்சியிலே,

மத்தியிலே இராஜீவ் காந்தி ஆட்சி இருந்த நேரத்தில் நபார்டு எல்லா மாநிலங்களுக்கும் இதைக் கண்டிப்பாக அறிவித்து விட்டது. இனிமேல் இப்படிக் கடன்களை ரத்து செய்யக் கூடாது, ரத்து செய்தால் கூட்டுறவு வங்கிகள் மேலும் விவசாயி களுக்குக் கடன் தருவதற்கு நாங்கள் பண உதவி செய்ய மாட்டோம். நாங்கள் ஆதரவு அளிக்க மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். கவர்னர் ஆட்சியிலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாங்கள் கடன்களை ரத்து செய்வது இல்லை என்று நபார்டுக்கு அவர்கள் கடிதம் எழுதி அதற்குப் பிறகு தான் நபார்டு கூட்டுறவு சங்கங்களுக்கு உதவிட முன்வந்தது. இந்தச் சூழ்நிலையில் தேர்தல் அறிக்கையிலே சிறுவிவசாயிகளினுடைய கடன்கள் ரத்து செய்யப்படும் என்று அறிவித்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த உடன் ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்களின் தவணை கடந்த தொகைகள் அனைத்தும் அறவே ரத்து செய்தும், குறுகிய மத்திய காலக் கடன்கள் மீது உள்ள அபராத வட்டியும் அறவே தள்ளுபடி செய்தும், நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்திவைக்கப்பட்டுள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்படும் என்று முடிவு எடுத்து, 12.5.1989-ல் ஆணை பிறப்பித்தது. இப்படி ஆணை பிறப்பித்த பிறகு நபார்டு அதற்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்து, நாங்கள் அதற்கு இணங்கமாட்டோம் என்று கூறி விட்டார்கள். பிறகு நம்முடைய அதிகாரிகள் எல்லாம் அங்கே சென்றார்கள். பெரும் படையெடுப்புச் செய்தார்கள். மாநிலத்திலே இருந்து அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லாம் அங்கே சென்று பேசினார்கள். சில உறுப்பினர்கள் கூட, பேசும்போது குறிப்பிட்டார்கள். நீங்கள் ரத்து செய்துவிட்டதாகச் சொல்கிறீர்கள். ஆனால் அந்தக் கடனை வசூலிக்க வேண்டும் என்று ஆணைகள் வந்து கொண்டு இருக்கிறதே என்று கேட்டார்கள்.

நான் அப்போதெல்லாம் உண்மையைச் சொல்லப் பயந்து கொண்டு இருந்தேன். இப்போது பயம் நீங்கிவிட்டது. காரணம், மதுதண்டவதே அவர்களுடைய கடிதத்திற்குப் பிறகு அந்தப் பயம் நீங்கிவிட்டது. பயப்படாதே, நபார்டு நம்பக்கம் இருக்கிறது, நபார்டு உதவி செய்யும் என்று சொன்ன பிறகு, பயம் நீங்கிவிட்டது. நபார்டுக்கு என்ன சொன்னோம் என்றால், நாங்கள் கடனை வசூலிப்போம் என்று எல்லோருக்கும் எழுதி விடுகிறோம் என்று சொன்னோம். அதிகாரிகளுக்கு என்ன சொன்னோம் என்றால், அப்படி கடிதம் வரும், நாங்கள் அடிப்பது போல் அடிப்போம்; அழுவதுபோல் அழுங்கள்; ஆனால் யாரும் வசூலிக்காதீர்கள் என்று சொல்லி, அந்த 39 கோடி ரூபாய்க் கடனை வசூலிக்காமலே, அதே நேரத்திலே நபார்டுகாரருடைய கண்ணிலே 'சத்துணவுப் பொடி காட்டினாரே' அதுமாதிரி பொடி தூவி, நாங்கள் செய்த ஒரு தந்திரமாக அதைச் செய்து, அந்த 39 கோடி ரூபாய்க் கடன் ரத்துக்கும் வழி செய்து இருக்கிறோம். இப்பொழுது மத்திய சர்க்கார் அறிவித்த அந்தக் கடன் எந்த அளவிற்கு, எந்த நிலையில், எந்த அடிப் படையிலே தமிழ்நாட்டிலே நாம் அதை அறிமுகப்படுத்தலாம் என்பது குறித்து மத்திய நிதியமைச்சரே குறிப்பிட்டு இருப்பதைப் போல, நான் காவிரிப் பேச்சு வார்த்தைக்காக ஐந்தாம் தேதி யன்று டெல்லிக்குச் செல்லும்பொழுது, நிதியமைச்சரைச் சந்தித்துப் பேசி ஒரு நல்ல முடிவோடு இந்தக் கடன் நிவாரணத்தைப் பற்றிப் பேசிமுடித்து வருவேன் என்று நம்புகின்றேன். நீங்கள் என்னை வாழ்த்தி அனுப்புவீர்கள் என்று கருதுகின்றேன்.

நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு குறையைச் சொன்னார்கள். ஒரு குற்றச்சாட்டைச் சொன் னார்கள். சொன்னதைச் செய்தோம் என்று நாங்கள் சொன்ன அந்த வாசகத்திற்கு மறுப்பாக ஒரு குற்றச்சாட்டை அவர்கள் சொன்னார்கள். அவர்கள் என்னுடைய தமிழை ஏற்றுக் கொண்டார்கள். தமிழுக்குத் தலைவணங்குவதாகச் சொன் னார்கள், தமிழ் நர்த்தனம் ஆடுகிறது என்றெல்லாம் சொன் னார்கள். அன்றைக்கு அவர்கள் பேசியதைக்கூட நம்முடைய பேராசிரியர் எழுந்து, படிக்கிறாரே படிக்கலாமா என்றுகூடக் கேட்டார்கள். நான் குறிப்புதான் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். அது உண்மை யல்ல. குறிப்பு அல்ல. முழுவதும் எழுதிப் படித்தார். காரணம் என்னுடைய முகத்தைப் பார்த்துப் பேச அவருக்குக் கொஞ்சம் கூச்சம். அதனால்தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட வேண்டுமென்று வீட்டிலே இருக்கும்பொழுது எண்ணுகிறார். நேராக வந்தால் சொல்லக் கூச்சம். எனவே, எழுதியதைப் படித்து விட்டுப் போய் விடுவோம் என்று படித்துவிட்டுப் போய் விடுகிறார்.

அப்படி அன்றைக்கு அவர் படித்தபொழுது ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார். சிறுதொழில் தொடங்குவதற்கு அரிசன மலைவாழ் மக்களைப் பொறுத்தவரை 15,000 ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றும், தொடங்கப்படும் முதலீட்டில் இருபது பங்கு, இருபது சதவீதம் பங்குத் தொகை வழங்கப்படும் என்றும் அரசு முடிவெடுத்து இரண்டு கோடி ஒதுக்கியிருந்தது. ஆயினும் அந்தப் பணம் இதுவரை செலவிடப்படவில்லை என்று கூறி யிருந்தார்கள்.

இதற்கு விளக்கம் என்னவென்றால், தாழ்த்தப்பட்டவர் களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக மத்திய அரசு - முன்பிருந்தே - மத்திய அரசு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையின்ன தாட்கோவுக்கு, தமிழக அரசு மூலம் வழங்குகிறது. பயனாளிகள் வங்கி மூலம் அரைப் பங்கு கடனாகப் பெறும் பொழுது மீதிப் பங்கு மைய அரசு கொடுக்கும் பணத்திலிருந்து மானியமாகவோ குறியீட்டுக் கடனாகவோ தாட்கோ வழங்குகிறது. தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இத்தொகை வழங்கப்படுகிறது. இதுகாறும் இது சிறிய தொகையாக ஐ.ஆர்.டி.பி. முறைப்படி செலவிடப்பட்டது. இதனால் தாழ்த்தப்பட்டவர் களுடைய பொருளாதாரக் குறிப்பு பொருளாதாரம், குறிப்பிட்டுச் சொல்லும் அளவில் மேம்பாடு அடையவில்லை. எனவே, 1989 நவம்பர் திங்களில் தமிழக அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்தது.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசு கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதியை 15,000, 20,000 என்று கடன்களாகக் கொடுக்கின்ற அந்த நிலைக்கு - அந்த நிலையும் உண்டு. இன்னொரு புதிய நிலையை எடுத்து ஒரு பகுதியைத் தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஆர்வமுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை சிறு தொழில்களை உருவாக்க, அதன்மூலம் அவர்களுடைய பொரு ளாதாரத்தை மேம்படுத்துவதுதான் அந்தத் திட்டத்தின் நோக்க மாக இருந்தது.

ஐந்து இலட்சம் ரூபாய் திட்டம் வகுத்து, நான்கு இலட்சம் ரூபாய் வங்கியிடம் கடன் பெற வேண்டும். அதற்கு வங்கி கோரும் 25 பர்செண்ட் தொகையைத் தனி நபர்கள் கொடுக்க இயலாததால் தாட்கோ அதனை 15,000 ரூபாய் மானியமாக வும், 85,000 ரூபாய் பத்து வருஷங்களுக்கு 4 சதவிகித வட்டிக்கான கடனாகவும் கொடுக்கிறது. இது இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கடந்த ஆண்டு அமல்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பத்தில் வங்கிகள், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கத் தயங்கின. தாழ்த்தப்பட்டவர்களாயிற்றே என்று பிணையம் கேட்டார்கள். உடனடியாக 23.2.90-இல் வங்கித் தலைவர்களையும், ரிசர்வ் வங்கி அதிகாரிகளையும் நம்முடைய ஆதிதிராவிடர் நலச் செயலாளர் அழைத்துப் பேசி, தாழ்த்தப் பட்டவர்கள் சிறு தொழில் அதிபர்களின் நிலைக்கு உயர வேண்டுமேயானால், பிணையம் இல்லாமல் அவர்களுக்குக் கடனுதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில், வங்கிகள் உதவி செய்ய முன் வந்தன.

74-75-இல் இதுபோன்ற ஒரு திட்டத்தை அன்றைக்கு இதே அரசு ஆரம்பித்து, பல தடைகள் ஏற்பட்டு அது கைவிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 46 தனி நபர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் மேலும் 30 தனி நபர்களுக்கு உதவிகள் வழங்கப்படும். எனவே 76 பேர் 30.3.90க்குள் பயன் அடைவார்கள் என்ற நல்ல செய்தியை நான் அல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ஒன்றை சொன்னார்கள். இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் 20 கோடியை 2 கோடி என்று சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். நிதிநிலை அறிக்கையிலே 20 கோடிதான் குறிப் பிடப்பட்டிருக்கிறது. சிறுதொழில் தொடங்குவதற்குத் தேவை யான நிதி உதவி அளிக்க 20 கோடி ரூபாயில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றுதான் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருக் கிறோம். அதனுடைய நிலைமை என்னவென்றால், 81-82 லேயிருந்து இந்தச் சிறப்பு உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்து இந்தத் திட்டத்தை நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து, மத்திய அரசு அன்றைக்கிருந்தது, 81-82 இலேயிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பழங்குடி மக்களுக்காக ஒரு தொகையை வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் தொகையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்பது நிபந்தனை. ஆனால் கடந்த ஆண்டுகளில் மத்திய அரசு வழங்கிய தொகை முழுமையாகச் செலவிடப்படாமல் மீதம் வைக்கப்பட்டு விட்டது.

இதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வழங்கும் தொகை முழுமையாகச் செலவிடப்படாமல் மீதம் வைக் கப்பட்டு ஒரு திரண்ட தொகையாக, அப்படி செலவிடப்படாமல்

குவிந்த தொகையாக 1981-82-ஆம் ஆண்டில் செலவிடப்படாத தொகையான ரூ.1.93 கோடி, 1985-86-ஆம் ஆண்டில் செலவிடப்படாத தொகையாக உயர்ந்தது ரூ.17.57 கோடியாகும். தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தரப்பட்ட பணம் 1985-86-ஆம் ஆண்டில் செலவிடப்படாமல் மிகுந்தது ரூ.17.57 கோடி. 1987-88-ஆம் ஆண்டில் இந்தத் தொகை 32.03 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. இந்த நிலையை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டு 1988-89-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதியுதவி 13 கோடி ரூபாயாக இருக்க, தமிழக அரசு 20.87 கோடி செலவழித்து 7 கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்தது. அதனால் செலவிடப் படாமல் குவிந்து இருந்த தொகை குறைக்கப்பட்ட 32 கோடி ரூபாயிலிருந்து 24.16 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அது குறைந்தது. நடப்பாண்டில் 1989-90-ஆம் ஆண்டில் மத்திய அரசு 14.19 கோடி ரூபாய் வழங்கியது. தமிழக அரசு 20.11 கோடி ரூபாய் செலவழித்தது. அதாவது 5.9 கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்தது. எனவே, இப்போது அது 20.24 கோடி ரூபாயாக, 30 கோடி ரூபாயாக குவிந்த தொகையை 20 கோடி ரூபாய் என்ற அளவில் குறைத்து இருக்கிறோம் என்றால் இரண்டு ஆண்டுகாலமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தத் திட்டங்கள் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் - மத்திய அரசு தருகிற தொகையும், மாநில அரசு தருகிற தொகையும் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் என்று எடுத்த முயற்சிகளின் காரணமாக 30 கோடி ரூபாயாகக் குவிந்திருந்த தொகையை இன்றைக்கு 20 கோடி அளவிற்குக் குறைத்து இருக்கிறோம். வரும் ஆண்டில், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன் - மத்திய அரசு வழங்கக்கூடிய உதவி 13 கோடி ரூபாய், நம்முடைய அரசு 12 கோடி ரூபாய் மேலும் செலவழித்து 25 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ரமணி அவர்களும், அழகர்சாமி அவர்களும், வரதராசன் அவர்களும், மற்றும் தொழிற்சங்கங்களில் ஆர்வம் உடைய நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் எல்லாம் தொழிலாளர்களுடைய நலனில் இந்த அரசு மேலும் அக்கறை காட்ட வேண்டுமென்று சொன்னார்கள்.

தொழிலாளர்கள் சுரண்டப்படுவது, அச்சுறுத்தப்படுவது, அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுவது, அவர்கள் வாழ்வு இழந்து வாடி வதங்கித் தெருவில் நிற்பது போன்ற இந்த நிலை

மைகளை எல்லாம் இந்த அரசு ஏற்காது என்பதும், இந்த அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிற நான் பாட்டாளிகளுடைய பிரச்சினையில், தொழிலாளர்களுடைய பிரச்சினையில் கடந்த காலங்களில் எப்படியெல்லாம் தொழிற்சங்கத் தலைவர்களோடு இணைந்து நின்று போராடி இருக்கிறேன், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கூட எப்படியெல்லாம் அவர்களுக்காக வாதாடி இருக்கிறேன் என்பதும் நான் அவர்களுக்கெல்லாம் நினைவூட்ட வேண்டிய அவசியம் இல்லை. அனுபவ ரீதியில் அவர்கள் அதை மிக நன்றாக உணர்வார்கள்.

திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டம், தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் சட்டம், தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தும் சட்டம், சம்பளப் பட்டு வாடா சட்டம், பணிக்கொடை பட்டுவாடா சட்டம், தொழிற்சாலைச் சட்டம், ஈ.எஸ்.ஐ. சட்டம் போன்ற சட்டங்கள் சரிவர அமல் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இதிலே ஒவ்வொன்றாகச் சில விளக்கங்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள் அதாவது நீக்கல், முறைப்படுத்துதல் என்ற சட்டத்தைப் பொறுத்தவரையில் மாநில மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, அதிலே தொழிற்சங்கப் பிரதிநிதிகள், நிர்வாகப் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இந்தக் குழு அடிக்கடி கூடி, தொழில் நிறுவனங்களில் இருக்கிற ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்கி முறைப்படுத்துதல் பற்றி ஆராய்ந்து, ஆலோசனை வழங்கி, அதன்மீது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களை எப்படி நீக்க வேண்டும், முறைப் படுத்த வேண்டும் என்று இருக்கிறதே அல்லாமல், அவ்வாறு நீக்கப்பட்ட தொழிலாளர்களை, கான்ட்ராக்ட் தொழிலாளர் களைத் தான் அதே இடத்தில் நியமிக்க வேண்டுமென்று சட்டத்தில் வழி வகுக்கவில்லை. அதைப் பிடித்துக் கொண்டு இன்றைக்கு நிர்வாகத்தினர் நம்மிடத்தில் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கான சட்ட மாறுதலைச் செய்ய இந்த அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். *(கர ஒலி)*

கைத்தறித் தொழிலாளர்களுக்கான நலச் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரையில் வழக்கு நடந்து, இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பு வந்துவிட்டதால், இந்தச் சட்டத்தை அமல் நடத்த எந்தவிதமான தடையும் இப்போது இல்லை. ஆனால் ஒரே ஒரு பிரச்சினை என்னவென்றால்,

கைத்தறித் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, ஒன்றுபடுத்திப் பணியாற்ற இன்னும் அதிகமான அதிகாரிகளும், பணியாளர்களும் அரசுக்குத் தேவைப்படுகிறார்கள். அதற்கான திட்டம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது நடைமுறைப்படுத்தப்பட ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதிலே, சட்ட அமலாக்கம் தீவிரப்படுத்தப்படும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின்படி 31.12.1989 வரையில், 6,275 தொழிற்சாலைகளில் 16,537 தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். எந்த நிர்வாகத்திலேயாவது இந்தச் சட்டம் அமலாக்கப்படுவதில், குறைகள் இருந்து, அவைகள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டால் தக்க நடவடிக்கை எடுத்து, அந்தக் குறைகள் களையப்படும் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சம்பளப் பட்டுவாடாச் சட்டம், பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், இ.எஸ்.ஐ. சட்டம் ஆகிய சட்டங்கள் செயல்படுவதிலும், தயக்கமோ, தாமதமோ காணப்பட்டால், அவற்றைக் களைந்து, மேற்படி சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலைச் சட்டங்கள் செயல்படும் விதம், இந்தியாவிலே மற்ற மாநிலங்களை விட, தமிழ்நாட்டில்தான் மிக நேர்த்தியாக இருக்கிறது என்று தொழிற்சாலை நடத்துகின்றவர்களே கூட நம் மீது கொஞ்சம் வருத்தப்படுகிறார்கள். அந்த அளவிற்கு தொழிற்சாலைச் சட்டங்களை இந்த அரசு, மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, மிக நேர்த்தியாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. அதிலும் இன்னும் குறைபாடு இருக்குமானால், ரமணியைப் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் சுட்டிக்காட்டுவார்களானால், இந்தக் குறைகளைக் களைவதற்கு அரசு தயாராக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வடலூர், சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலையைப் பற்றி இங்கே கூறப்பட்டது, 'லே-ஆப்' பற்றி. நண்பர் கோவிந்தராஜன் அவர்கள் இங்கே சில வினாக்களை எழுப்பி இருக்கிறார்கள். அது குறித்தும் ஆராய்ந்ததில் 'லே-ஆப்' என்றால் பாதிச்சம்பளம் உண்டு என்றாலும் கூட, அந்தப் பாதிச்

சம்பளத்திலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் எந்த நேரத்திலும் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சமும், ஐயமும் இருக்கின்ற காரணத்தால் இந்த 'லே-ஆப்'க்கான காரணங்கள் என்ன என்பதை இன்னும் தீவிரமாக ஆராயவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்தியிருப்பதை அடிப்படையாகக் கொண்டு, மேலும் தீவிரமாக ஆராய்ந்து இந்த 'லே-ஆப்' கொடுமையிலிருந்து தொழிலாளர்கள் விடுபட அரசு ஆவன செய்யும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். சரக்கு வாகன வரியினால், பொருள்களுடைய விலை ஏறும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சரக்கு வாகனங்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஆம்னி பஸ் பற்றி இணைத்துச் சொன்னார்கள். ஆம்னி பஸ்ஸுக்கு 2,000 ரூபாய் என்பது கர்நாடகத்திலேகூட போடப்பட்டு இருக்கிற வரிதான் என்பதைச் சொன்னார்கள். உயர்நீதிமன்றத்திற்கு அந்த வழக்கு சென்று, கர்நாடகத்தில், உயர்நீதிமன்றம் அந்த வரி செல்லும் என்று தீர்ப்பு அளித்தது. உச்ச நீதிமன்றத்திலே அதற்கு ஒரு ஸ்டே தரப்பட்டிருக்கிறதே அல்லாமல் இன்னும் வழக்கு முடிவு அடையவில்லை, இருந்தாலும் அவர்களுக்கானது நமக்கும் ஆகட்டும். ஏன் என்றால், கர்நாடகத்திற்கும் நமக்கும் காவிரி தொடர்பாக இருக்கிற காரணத்தால், இந்த ஆம்னி பஸ்ஸும் தொடர்பாக இருக்கட்டும் என்ற முறையில் இந்த 2 ஆயிரம் ரூபாய் வரியை இப்போது நாம் மாற்றுவதற்கு இல்லை என்பதை-அவர்கள் கோரிக்கை விடுத்து எத்தனையோ நிறைவேற்றி இருக்கிறேன். இதை நிறைவேற்ற முடியாமைக்காக நான் குமரிஅனந்தன் அவர்களிடத்திலே என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது முடிந்த முடிவல்ல. நீதிமன்றத்தினுடைய உத்தரவை எதிர்பார்ப்போம் என்று அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். சரக்கு வாகனங்களுடைய இந்த வரியினால், விலைவாசி அதிகமாகி, அதன் காரணமாக உயர்ந்து விடாது. வேறு காரணங்கள் உண்டு. பொதுவாக சரக்கு வாகனங்களுடைய மொத்த எண்ணிக்கை நம்முடைய மாநிலத்திலே 83 ஆயிரம். இந்த 83 ஆயிரத்தில் நான் குறிப்பிடுகின்ற அதிக வரி செலுத்த வேண்டிய, 15 ஆயிரம் கிலோ கிராமுக்கு மேற்படுகின்ற சரக்கை ஏற்றிச் செல்லுகின்ற வாகனங்களுடைய எண்ணிக்கை 33 ஆயிரம் ஆகும். இந்தப் பிரிவை உதாரணமாக வைத்து, வரிப் பளுவைக் கணக்கிட்டால், காலாண்டு வரி விகிதம் 1600-லேயிருந்து 1840-ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது.

தற்போது வெளிச்சந்தையில், இம்மாதிரியான வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் போது ஒரு கிலோ மீட்டருக்கு 3 ரூபாய் 40 காசு வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதில் தற்போதுள்ள வரி விகிதப்படி, வரியின் பங்கு 10.67 காசாக இருக்கிறது. இந்த வரி உயர்வினால், ஒரு கிலோ மீட்டருக்கு மேலும் 1.6 காசுதான் கூடுகிறது. உயர்த்தப்பட்ட வரி வீதத்திற்குப் பிறகும் மொத்தமாக வரியினுடைய பங்கைக் கணக் கிட்டுப் பார்க்கும்போது 12.27 காசுதான். அதாவது வரி உயர்வு 0.47 சதவீதம் அளவுதான் இது இருக்கிறது. அதனால் அந்த அளவிற்கு விலைவாசி உயர்வது கட்டுபடியாகத் தான் இருக்கக்கூடும், இது அதிகமாவது அல்ல என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமாக அவையிலே பேசப்பட்டது மது விலக்குப் பிரச்சினையாகும். 1971 ஆம் ஆண்டு கருணாநிதிதான் இந்த அநியாயத்தைச் செய்தான். அதுவரையில் மது என்றால் என்னவென்றே ஒரு தலைமுறைக்கே தெரியாது இருந்தது என்பதை எல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, நம்முடைய இலக்கியச் செல்வர் உட்பட மற்றும் மதுவிலக்கைத் தீவிரமாக ஆதரிக்கின்ற நண்பர்கள் அனைவரும் உணர்ச்சி பூர்வமாக, தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக் கின்றார்கள். 71-லேதான் மதுவிலக்கைக் கொஞ்ச நாளைக்கு ஒத்திவைக்கின்ற ஒரு அறிவிப்பை இந்த மாமன்றத்தில் அன்றைய தினம் நான் அறிவித்தேன். 71-ல் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பொரு ளாளராக இருக்கிறார். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் கோவையில் நடைபெற்ற பொதுக் குழுவிலே தான் மது விலக்கை ஒத்தி வைப்பது என்கின்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டு, அது ஆராயப்பட்டு, அந்தத் தீர்மானம் செயல் வடிவம் பெற்றது. 71-க்கு முன்பே 1969-ல் 13.9.69-ல் மாலை முரசு பத்திரிகையில் நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையை இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது நலம் என்று கருது கின்றேன். 13.9.69 -எம்.ஜி.ஆர். அறிக்கையில் சொல்கிறார்.

'' மதுவிலக்கு அமலில் இருந்தாலும் பர்மிட் உள்ள பணக் காரர்கள் சட்டத்தின் உதவியோடு சாதாரணமாகக் குடிக் கிறார்கள். ஏழைகளும் மதுக் கஷாயம் போன்றவற்றை, சட்டத் தின் உதவியோடு குடிக்கிறார்கள். இவை இரண்டையும் மது விலக்குச் சட்டம் தடை செய்ய இயலவில்லை. பர்மிட்டிற்கு மாநில அரசும் மது கஷாயத்திற்கு மத்திய அரசும் தடை

போடவில்லை. இருந்தாலும் மது விலக்குச் சட்டம் அமல்படுத்தப் படுகிறது. இதில் சிலருக்கு தண்டனை கூடக் கிடைக்கிறது. ஆனால் மதுவிலக்கினால் எந்தத் தீமையும் குறையவில்லை. எந்தத் தீமையைப் போக்க மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டதோ, அது முன்பைவிட இப்போது அதிகமாக உள்ளது.

''குடிப்பவர்கள் தங்களையும் கெடுத்து, தங்கள் குடும்பங் களையும் கெடுத்துக்கொள்கிறார்கள். மதுவிலக்கு பூரணமாக அமல் படுத்தப்பட பர்மிட்களையும், மதுக் கஷாயத்தையும் உடனடியாகத் தடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந் தாலும் அதைச் சுற்றியுள்ள மாநிலங்களில் மதுவிலக்கு தளர்த்தப் பட்டிருக்கிறது. அந்த மாநிலங்கள் மதுவினால் கோடிக்கணக் கான ரூபாய் வருமானம் பெற்று வருகின்றன. ஆனால் தமிழ் நாடு அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டே வருகிறது. ஆனால் யாருமே மது அருந்தாது இருக்கச் செய்ய முடியாத நிலையிலே உள்ளது. பணம் இழந்தாலும் லட்சியம் பூரணமாக நிறைவேறிய பாடில்லை. மேலே கூறப்பட்ட கருத்தும், கொள்கையும் என்னு டையது மட்டுமல்ல, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் இது உடன்பாடு ஆனது. அவருக்கு மாறுபாடு இருக்குமானால், எனது அறிக்கைக்கு மாற்று அறிக்கை விடுத்திருப்பார். ஆகவே கலைஞருடைய கொள்கையும் என்னுடைய கொள்கையும் ஒன்று தான். இதை எல்லோரும் உணர்ந்துகொள்ளவேண்டும். -- எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும் -- மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எந்தத் தனி மனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையைவிட, இந்தக் கொள்கை மக்களுக்குத் தேவை யானது என்ற இலட்சியப் பிடிப்பை விட, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும், அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரை விட அழுத்தமாக என்னால் துணிந்து கூறமுடியும்'' என்று எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கே சொன்னார்.

அதுமட்டுமல்ல, அவர் ஆனந்தவிகடன் பத்திரிகையில் ''நான் ஏன் பிறந்தேன்'' என்ற அந்த நீண்ட தொடர் கட்டுரையிலேகூட அப்போதே, புள்ளிவிவரங்களை - 71-க்குப் பிறகுதான் மக்களே குடிக்க ஆரம்பித்தார்கள், ஒரு தலைமுறைக்கே கள் என்றால் என்னவென்றே தெரியாது என்று எல்லாம் சொல்லப்பட்ட வாதங்கள் எல்லாம் பொடிப்பொடியாக நொறுங்க, எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்தவிகடன் பத்திரிகையிலே எழுதிய கட்டுரை யிலே வந்த புள்ளி விவரத்தைப் படிக்கின்றேன்.

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் போலீசாரால் கண்டுபிடிக்கப் பட்டு, பதிவு செய்யப்பட்ட குற்றங்களுடைய எண்ணிக்கை மாத்திரம் - கண்டு பிடிக்கப்படாதவை வேறு - பதிவு செய்யப் படாத குற்றங்கள் வேறு - 61-ஆம் ஆண்டு 1,12,889 பேர். ஆக கருணாநிதி என்கின்ற கயவன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வராததற்கு முன்பே 69-ஆம் ஆண்டு 1,12,889 பேர் இந்த வழக்கிலே சிக்கியிருக்கிறார்கள். சிக்காதவர்கள் வேறு. 62-இல் 1,29,977 பேர். 63-இல் 1,23,006 பேர். 64-இல் 1,37,716 பேர். 65-இல் 1,65,052 பேர். 66-இல் 1,89,348 பேர். 67-இல் 1,90,713 பேர். 68-இல் 2,53,607 பேர். 69-இல் 3,06,555 பேர், 70-இல் 3,72,472 பேர். - இப்படி ஒரு கணக்கை அன்றைக்கே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்த விகடன் பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

எனவே, 1971-க்குப் பிறகுதான் ஒரு தலைமுறைக்கு கள் என்றால் இன்னதென்று தெரியும். அதற்கு முன்பெல்லாம், அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், சோமா, சுரா என்ற பானங்களின் பெயர்கள் தான். கள்ளையும் சாராயத்தையும் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய கசடன், கயவன் கருணாநிதி தான் என்று சொன்ன வாதத்தை நொறுக்குகின்ற வகையில்தான் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்தப் புள்ளி விவரத்தை அன்றைக்கே ஆனந்தவிகடன் பத்திரிகையில் தந்திருக்கிறார்கள். தம்பி இராதா, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லக்கூடும். நீங்கள் எம்.ஜி.ஆரைப் பின்பற்றித்தான் எதையும் செய்கிறீர்கள் என்று. சில விஷயங்களில், சில உண்மைகள் இராதா அவர் களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நானும் எம்.ஜி.ஆரும் சில நேரங்களில் அவர் என்னைப் பின்பற்றுவதும் நான் அவரைப் பின்பற்றுவதும் உண்டு-அது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அப்படிப் பின்பற்றியிருக்கிறோம் பல விவகாரங்களில்.

1971-லே தான் சட்டம் வருகிறது. 1969-லேயே எம்.ஜி.ஆர். அதைப் பின்பற்றிப் பேசியிருக்கிறார் என்றால், இது கலைஞருக்கு உடன்பாடான விஷயம்தான் என்று எம்.ஜி.ஆர். பேசியிருக் கிறார் என்றால், நாங்கள் அப்பொழுதே, முன்பே, பேசி வைத்துக் கொண்டுதான் எம்.ஜி.ஆர் வெளியிட்ட அறிக்கை அது என்பதை இன்று எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு உணர்ந்திருக்க முடியாது. எனவே, இருக்கிற நிலைமையைக் கருதி, தோல்வியுற்ற ஒன்றை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, இந்தச் சமுதாயத்தை மேலும் அழுக்குப் படிந்த சமுதாயமாக ஆக்க வேண்டுமா என்கின்ற அந்த முனைப்பான கேள்விக்கு, இடையிலே எழுந்த பதிலாகத்தான் அந்த மனு முடிவு ஏற்பட்டது.

இங்கே நம்முடைய உகம்சந்த் சொன்னார். இதற்கு ஒரு அவசரச் சட்டமா, சாதாரணச் சட்டம் கொண்டு வந்திருக்கக் கூடாதா, என்று. அவர்களுடைய ஆட்சியிலே ஒன்றல்ல, 5 அவசரச் சட்டங்கள்-இந்த மதுவிலக்குக்காக 5 அவசரச் சட்டங்கள்; 23-5-1981 அன்று ஓர் அவசரச் சட்டம்-தமிழ்நாடு மதுவிலக்கு இரண்டாவது திருத்த அவசரச் சட்டம் 1981 என்று அதற்குப் பெயர். அதை அடுத்து, 20-7-1982 அன்று மீண்டும் ஒரு அவசரச் சட்டம்-தமிழ்நாடு மதுவிலக்கு மூன்றாவது திருத்தச் சட்டம். இந்த இரண்டு அவசரச் சட்டங்களையும் சேர்த்து ஒரே சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. பின்னர் 1-12-1982-இல் மீண்டும் ஓர் அவசரச் சட்டம். அது தமிழ்நாடு மதுவிலக்கு இரண்டாவது திருத்த அவசரச் சட்டம், 1982 என்பதாகும். அது மாநிலங்களிடையே மதுவகைகள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் அதன் மூலமாக ஆயத் தீர்வை, மற்றும் விற்பனை வரி இழப்பைத் தடுத்து நிறுத்தவும், அதற்கென, சோதனைச் சாவடி நிறுவுவதற்கும், நீதிமன்றங்கள் தடை ஆணை வழங்குவதற்கான அதிகாரத்தைத் தடுத்து நிறுத்தவும் வழிவகை செய்தது. பிறகு 27-5-1983 அன்று ஓர் அவசரச் சட்டம். தமிழ்நாடு மதுவிலக்கு இரண்டாவது திருத்த அவசரச் சட்டம். பிறகு, 8-10-1985-இல் ஓர் அவசரச் சட்டம். இப்படி 5 அல்லது 6 அவசரச் சட்டங்கள் அன்றைக்குப் பிறப்பிக்கப்பட்டன.

**திரு. எஸ்.டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவசரச் சட்டங்களினால் 1981-ஆம் ஆண்டு இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லப்பட்டு, இந்தப் பேரவை யில் விவாதிக்கப்பட்ட பிறகு, நிர்வாகத்திற்குச் சொல்லப்பட்டு இருக்கிற அவசரச் சட்டமே ஒழிய, பேரவையில் விவாதிப்பதற்கு முன்பு இந்த அவசரச் சட்டங்கள் வரவில்லை. *(குறுக்கீடு)* அதற்கு முன்னால் கொண்டு வர வேண்டுமா, வேண்டாமா என்பதை இந்தப் பேரவை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், 1971-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் இந்த மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதற்கு ஒப்புக் கொண்டார்கள் என்றால், அன்றைய தினம் தமிழ்நாடு அரசினு டைய நிதிநிலை மிகவும் மோசமாக இருந்த காரணத்தால் அந்த நிதிநிலையைச் சரியான முறையில் சீராக்க வேண்டுமென்ற காரணத்திற்காக அன்றைக்கு அவர் ஆதரித்தார். வேறு காரணம் இல்லை.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** பிறகு மீண்டும் அவர் ஏன் அதைக் கொண்டு வந்தார், அதற்கு விளக்கம் இல்லை.

பிறகு, 21-3-1981-இல் அ.தி.மு.க. அரசினுடைய நிதிநிலை அறிக்கை இந்த மாமன்றத்திலே நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் படிக்கப் பெற்றது. அதில் சொல்கிறார்கள். ''மதுவிலக்குக் கொள்கையைச் செம்மையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதியாகவே இருந்து வந்ததையும், என்றாலும் சட்ட விரோதமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டும், கள்ளத் தனமாகக் குடிக்கப்பட்டும் வந்ததையும், அனுமதியின்றி கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் கடுமையாகத் தண்டிக் கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டதையும் மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக, ஏழை எளிய குடும்பங்கள் பல இன்னல்களுக்கு உள்ளானதைக் கண்டு, நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அனுமதிச் சீட்டு பெற்று மதுவகைகள் அருந்தும் முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது. மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்ய முடியும் என்று இந்த அரசு கருதுகிறது.''

அதை ஒட்டித்தான் மதுவிலக்கைத் தளர்த்தி, சட்டம் கொண்டுவரப்பட்டது; விவாதங்கள் நடைபெற்றன. 30-3-1981-இல் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது கூறுகின்ற ஓர் அருமை யான வாசகம் - ''மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்து வதிலே தோல்வி ஏற்பட்டது என்பதுதான் எங்களுடைய எண்ணம். அந்த எண்ணம் ஈடேறவில்லை. யார், யாரோ முயன்றும் அந்த எண்ணம் ஈடேறவில்லை. புத்தர் முயன்று பார்த்தார், முடியவில்லை. மகாவீரர் முயன்று பார்த்தார், முடியவில்லை. வள்ளுவர் முயன்று பார்த்தார், முடியவில்லை. நாயன்மார்கள் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை. ஆழ்வார்கள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பட்டினத் தடிகள், இராமலிங்க அடிகள் எல்லாம் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. மகாத்மா காந்தியடிகள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பெருந்தலைவர் காமராஜர் முயன்று பார்த்தார், முடியவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முயன்று பார்த் தார்கள், முடியவில்லை. வள்ளுவர் கூட முயன்று பார்த்தார், முடியவில்லை. *(சிரிப்பு)*

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

அதாவது, குடித்தவனைத் திருத்துவது என்பது எப்படி இருக்கும் என்றால் தண்ணீருக்குள் மறைந்து இருப்பவனை விளக்குக் கொண்டு தேடுவது மாதிரி இருக்கும் என்று சொல்கிறார். எனவே, இது முடியாத காரியம் என்று வள்ளுவரும் சொல்லி விட்டார்'' என்று நாவலர் அந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டார்.

சட்டமன்ற மேலவையில் இந்த மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வின்போது திரு. எஸ்.டி. சோமசுந்தரம், அண்ணா தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராக இருக்கிற எஸ்.டி.எஸ். அவர்கள் 31-8-1981-இல் பேசியது என்ன தெரியுமா?

''இன்றைக்கு மதுவிலக்கு ரத்து செய்யப்படும் நிலையில், அதனால் ஏற்படும் சங்கடங்களைப் போக்க திருத்தச் சட்ட முன்வடிவு இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டுவர வேண்டிய அத்தியாவசிய நிலைக்கு ஏன் அரசு வந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு தன்னால் இயன்றதைச் செய்தது. சமுதாயத்தில் சிலர் மது அருந்தப் பழக்கப் பட்டுவிட்டார்கள். அவர்களை எவ்வளவு கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கினாலும் அவர்களை அதிலிருந்து மீட்டுக் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. மது கிடைக்காதவர்களுக்குக் கள்ளச்சாராயம், கள்ளக் கள் சமுதாய விரோதிகளிடமிருந்து கிடைக்கிறது. அவர்கள் அதை விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலையில் சமுதாயத்தையும் காப்பாற்ற வேண்டும்; மக்கள் உடல் நலத்தையும் காப்பாற்ற வேண்டும். இந்த இக்கட்டான நிலையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஒன்றைச் சொல்லலாம். வீட்டிலே நன்றாகக் காய்ச்சி வடிகட்டி, அதில் இருக்கிற கிருமிகளைக் கொன்று தண்ணீரைக் குடிப்பது நல்லது. குளத்தில் உள்ள தண்ணீர் அவ்வளவு நல்லதல்ல. இருந்தாலும் சிலர் அதைக் குடித்துவிடுகிறார்கள். சாக்கடைத் தண்ணீர் இன்னமும் மோசமானது. மது குடிக்காமல் இருப்பது வீட்டிலே இருக்கும் காய்ச்சிய தண்ணீரைக் குடிப்பதற்குச் சமம். குளத்துத் தண்ணீரைக் குடிப்பது அரசு கொடுக்கும் மதுவுக்குச் சமம். அதைக் கொடுக்காவிட்டால் சாக்கடைத் தண்ணீரைக் குடித்து விட்டுச் சாகிறார்கள். இதிலிருந்து காப்பாற்றத்தான் - மக்களை

நல்ல தண்ணீரைக் குடிக்க வைப்பதற்குத்தான் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். சாக்கடைத் தண்ணீரைக் குடிக்காமல் இருப்பதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது'' என்று நண்பர் எஸ்.டி.எஸ்., அன்றைய அமைச்சர் பேசினார். இதைத் தொடர்ந்துதான் அண்ணா தி.மு.க. ஆட்சியில், எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் மதுவிலக்கு சம்பந்தமான சட்டங்கள், திட்டங்கள் எல்லாம் மாற்றப்பட்டன.

அந்த அறிவிப்பினை ஒட்டி 1-5-1981-இல் சாராயம் மற்றும் கள்ளுக்கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 1981 வரையில் தமிழ்நாட்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது பானங்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் இல்லை. 1981-க்குப் பிறகு இந்த மதுபானங்கள் தயாரிக்கிற உரிமையை நான்கு தனி நபர்களுக்கும் கூட்டுறவுத் துறை நிறுவனத்திற்கும் அரசு அளித்தது. ஐ.எம்.எஃப்.எஸ்., கள், சாராயம் மது பானங்கள் விற்பனை 1-5-1981 முதல் தொடங்கியது. ஆனால் குடிப்பவர் பெர்மிட் ஒன்று பெறவேண்டுமென்று விதிமுறை களில் கூறப்பட்டது. இருந்தாலும் அந்த பெர்மிட் முறை நடை முறையில் இறுதிவரை சரியாகச் செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் மிக நன்றாக அறிவார்கள்.

கள்ளுக்கடைகள், ஏல முறையிலே அனுமதிக்கப்பட்டன. சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டு, சாராயத்தை விநியோகம் செய்கின்ற மொத்த வியாபாரம் 15 தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தனிநபர்களால் உற்பத்தி செய்யப்பட்டு, தனி நபர்கள் மொத்த வியாபாரிகளாக விநியோகம் செய்யும் திட்டத்தின்கீழ் ஆரம்பத்தில் சில்லறைக் கடைகள் மற்றும் டெண்டர் முறையில் விடப்பட்டன. இவ்வாறு 1983 ஜூலை 27-க்கு முன்பு சில்லறை வியாபாரம் ஏலம் மற்றும் டெண்டர் முறையிலே விடப்பட்டன. பிறகு 'டாஸ்மாக்'' நிறுவனம் எடுத்துக்கொண்ட பின்பு, அப்போது அந்த டெண்டர் முறை பின்பற்றப்படாமல், விண்ணப்பங்கள் பெற்று 'நாமினேஷன்' முறையில் தனிப்பட்டவர்களை ஏஜண்டுகளாக நியமித்து விற்பனை செய்து வந்தது. இந்த முறை அரசியல் சட்டத்திற்கு, விதிமுறைகளுக்கு விரோதமானது என்றும், புறம்பானது என்றும் எதேச்சாதிகாரமாக விருப்பு வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு கட்சிக்காரர்களுக்குச் சலுகை கொடுக்கும் விதத்திலும் தேர்வு முறை நடைபெற்றது என்றும் ஒரு சிலர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றனர். உச்சநீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க 15-7-1986 என்று தேதி குறிப்பிட்டது. நாமினேஷன்

முறையிலே கட்சிக்காரர்களுக்கு கொடுக்கிறார்கள் என்று சிலர் சுப்ரீம் கோர்ட்டிற்கு சென்றார்கள். 15-7-1986-இல் இந்த வழக்கை விசாரிக்க உச்ச நீதிமன்றம் தேதி குறித்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** இந்த வழக்கில் சட்டப்படி குற்றச்சாட்டுகள் வலுவானதாகவும், மறுக்க முடியாததாகவும் இருந்த காரணத்தை அரசு மனத்தில் கொண்டு, இந்த முறை நீடித்தால் உச்ச நீதிமன்றத்தின் விமர்சனத்திற்கு உள்ளாக வேண்டிவரும். அதனால் பல விளைவுகளுக்கும் ஆளாக நேரிடும் என்று எண்ணி, எந்தத் தேதியில் உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கத் தேதி குறித்ததோ அந்தத் தேதி முதல் சில்லறை வியாபாரத்தை நாமினேஷன் முறையிலிருந்து திரும்பப் பெற்று மறுபடியும் ஏலம் மற்றும் டெண்டர் முறையிலேயே கொண்டு வர முடிவு செய்து, அதற்கான அவசரச் சட்டத்தை அன்றைக்கிருந்த அரசு பிறப்பித்தது. இந்த முறை 31-12-1986 வரை, அதாவது இறுதியாக கள் மற்றும் சாராயக்கடைகளை மூடுகிற வரையிலும் இருந்து வந்த முறையாகும். அப்போது 14-3-1983 அன்று சட்டப்பேரவை எதிர்க்கட்சியிலே இருந்த நான், சாராய உற்பத்தியையும் விநியோகத்தையும் அரசோ அல்லது கூட்டுறவுத் துறை நிறுவனமோ ஏன் மேற்கொள்ளக் கூடாது என்று கேட்ட கேள்வியை அடிப்படையாகக் கொண்டு, அன்றைக்கு இருந்த அரசு ஒரு ஃபைலையே ஆரம்பித்தது. —ஒரு கோப்பையே ஆரம்பித்தது. இப்போதுதான் தெரியும் எனக்கு, என்னுடைய பேச்சை வைத்து அரசு அப்போது ஒரு கோப்பையே ஆரம்பித்திருக்கிறது என்று. அதில் 'எதிர்க்கட்சித் தலைவருடைய வேண்டுகோளைத் தீவிரமாகப் பரிசீலித்து அரசு மொத்த வியாபாரத்தை மட்டும் டாஸ்மாக்கிடம் கொடுப்பதற்காக டாஸ்மாக் நிறுவனத்தை 27-7-1983 முதல் ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் நிறுவியது. இருந்தாலும் சாராய உற்பத்தியையும் தனிநபரிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையையும் அரசு பரிசீலித்து அது இயலாத காரியம் என்று கைவிட்டு விட்டது.

எதை இயலாது என்று அந்த அரசு கைவிட்டதோ அதைத்தான் இந்த அரசு இயலும் என்று ஒரு செயல் திட்டமாக உருவாக்கி, இன்றைக்கு புதிய மது விலக்குக் கொள்கையின்படி மலிவு மது பானத்தைத் தயாரிக்கும் முழுப் பொறுப்பையும் அரசு நிறுவனமான டாஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளது. அதேபோல டாஸ்கோ நிறுவனம் தயாரிக்க இருக்கிற அந்த

மலிவு விலை மது பானங்களை விற்கின்ற மொத்த விற்பனை உரிமையைத் தனி நபர்களுக்குக் கொடுக்காமல் டாஸ்மாக் நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளது.

சில்லறை விற்பனை முறையிலே பல்வேறு கொள்கைகளை பல்வேறு கால கட்டங்களில், நிலைமைக்கு ஏற்ப, கடைப்பிடித்து வந்த அ.தி.மு.க.அரசின் கொள்கைக்கு மாறாக, சில்லறைக் கடைகளை ஏலம் மற்றும் டெண்டர் முறையிலே இந்த அரசு நடத்த முடிவு செய்து அறிவித்துள்ளது. ஏலம் மற்றும் டெண்டர் என்று சொன்னவுடன் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சில பேர்கள் ஏலம் என்பது ஒரு முறை போலவும், டெண்டர் என்பது வேறு ஒரு முறை போலவும் கருதிக் கொண்டு, அந்த டெண்டரை கட்சிக்காரர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அல்ல.

ஒரு அப்-செட் பிரைஸ் கடைகளுக்கு நாம் முடிவு செய்கிறோம்; 50 ஆயிரம் என்று ஒரு அப்செட் பிரைசை முடிவு செய்து கொண்டு டெண்டர் விடுகிறோம். 8 பேர் 9 பேர் டெண்டர் கேட்கிறார்கள். சீல்டு டெண்டர். அதிலே நாம் 50 ஆயிரம் என்று வைத்திருக்கிறோம். ஒருவர் 60 ஆயிரம் கேட்கிறார், ஒருவர் 70 ஆயிரம் கேட்கிறார், ஒருவர் 90 ஆயிரம் கேட்கிறார் என்றால், 90 ஆயிரம் தான் டெண்டரில் அதிகப்படியானது என்றால் அந்த டெண்டரை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கப்படும். அப்செட் பிரைஸ் 90 ஆயிரத்திலிருந்து ஆரம்பிப்போம். பிறகு ஏலம் கேட்கலாம். ஆக டெண்டர் கேட்பவர்களுக்கே கொடுத்து விடவில்லை. யாருமே ஏலம் கேட்காவிட்டால் தான் 90 ஆயிரம் டெண்டர் கேட்டவருக்குக் கொடுக்கப்படும். 90 ஆயிரம் டெண்டர் கொடுத்த பிறகு, ஏற்கெனவே 50 ஆயிரம் டெண்டர் கொடுத்தவர் கூட 95 ஆயிரத்திற்கு என்று, இலட்சத்திற்குக் கூட என்று ஏலம் கேட்கலாம். எனவே டெண்டர் என்பது அப்செட் பிரைசை நிர்ணயிப்பதற்காக இருக்கிற முறையே தவிர வேறு அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்பற்றிப் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் அதிலும் குறிப்பாக நம்முடைய வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் அவர்கள் இந்தக் கருத்துக்களுக்காக 3 நாட்கள் இந்த அவையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் பேசிய நாள் ஒன்று, தம்பி புகழேந்தி அவர்களுக்குப் பதில் சொன்ன நாள் ஒன்று, தன்னிலை விளக்கம் என்ற பெயரால் இந்த நாள் ஒன்று. ஆக 3 நாட்களைப் பயன்படுத்திக் கொண்டு, தன்னுடைய கருத்துக்களையெல்லாம் அவர்கள் இங்கே குறிப்பிட்டு

இருக்கிறார்கள். அன்றைக்குச் சொன்னார் - காந்தியடிகளோ அல்லது அண்ணாவோ அல்லது காமராசரோ அவர்கள் எல்லாம் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால், அவர்களுடைய கல்லறையே குலுங்கும் என்று சொன்னார்.

அவர், எதிர்க்கட்சி வரிசையிலே நல்ல வார்த்தைகளாகப் போட்டுப் பேசக்கூடிய நபர்களில் அவரும் ஒருவராக இருக்கிறார் என்பதில் எனக்கு மகிழ்ச்சி தான். ஏனென்றால் இந்த மாமன்றத்திலேஇருந்து இன்னும் 4,5 ஆண்டுகளுக்குப் பிறகு நாமெல் லாம் கலைந்து சென்று மீண்டும் இந்த அவைக்கு வருகின்ற நேரத்தில் இதைவிடத் திறமையான பேச்சாளர்களாக இருந்திட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஒருவேளை அல்போன்ஸ் கூறுவதைப் போல நீங்களே நல்ல ஆட்சியை அமைத்தாலும் அமைக்கலாம். 'ஏனென்றால் ராமனுக்கு 14 ஆண்டு வனவாசம், 12 ஆண்டு தருமனுக்கு வனவாசம் எங்களுக்கு 5 நாள் சிறைவாசம், அதனால் ஆட்சியை அமைப் போம்' என்று சொன்னார். அது எல்லாம் ஆண்டுக் கணக்கிலே வாசம். இது நாள் கணக்கிலே வாசம். அமைக்க முடியுமா என்பது கேள்விக் குறி. இருந்தாலும், அமைப்பது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. உங்களைப் போல நல்ல இளைஞர்கள், எதிர்காலத்திலே இந்த நாட்டினுடைய நிலையை உயர்த்துவதற்கு, இந்த மக்களை முன்னேற்றுவதற்குப் பயன்படுவார்களேயானால், நான் ஒரு மூத்தவன்; வயதானவன் என்கின்ற முறையில் - என்னுடைய வீட்டாரெல்லாம் இருக்கிறார்கள் - இருந்தாலும் *(சிரிப்பு)* சொல்கிறேன், வயதானவன் என்கிற ஒரு முறையில் உங்களை எல்லாம் வாழ்த்துவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு சா. பீட்டர் அல்போன்ஸ்:** வயதானவர் என்று சொன்னாலும், எங்கள் முதல்வர் அவர்கள் கவர்ச்சிகரமாக இருக்கிறார் என்று சொல்லுவதில் எங்களுக்கு மகிழ்ச்சி *(சிரிப்பு)*

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** நன்றி கூறிக் கொள் கிறேன், என் வீட்டினரை நினைத்து. *(சிரிப்பு)*

அவர் சொன்னார். நான் திரும்பவும் நினைவூட்ட விரும்பு கிறேன். அண்மையில் ஏப்ரல் திங்கள், 1989-இல், 'ப்ரோப் இந்தியா' என்ற பத்திரிகையில், 'மிஸ்ரா' என்ற துணை ஆசிரியர் எழுதுகிறார். அவர் எழுதிய கட்டுரை முழுவதையும் படிக்க நேரம் இல்லை. அதிலே ஒரு பகுதியை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன். எவ்வளவு உருக்கமான கட்டுரையாக இருக்கிறது அது என்பது அப்போது தெரியும். ஆங்கில வாசகத்தைக்கூட, நான் படிக்க விரும்பவில்லை. தமிழ் வாச கத்தை மாத்திரம் படிக்கிறேன். தமிழ் ஆக்கத்தை மாத்திரம்; அவர் சொல்கிறார்:

''போர்பந்தரில் மகாத்மா காந்தியின் சொந்த ஊரில், ஒரு கள்ளச்சாராய வியாபாரி, தரைக்கு அடியில் பெட்ரோலைச் சேமிப்பதைப் போல, பெரிய குளம் கட்டி 50 ஆயிரம் லிட்டர் சாராயத்தைத் தேக்கி வைத்திருக்கிறார். பெட்ரோல் பங்க் போலவே, அவரது கடையில் ஒரு கை பம்பு இருக்கிறது. கை பம்பை அடித்தால், பாதாளத்திலிருந்து பாய்ந்து வருகிறது சாராயம். எங்கோ, தொலைதூரத்தில், டெல்லி ராஜ்காட்டில், மகாத்மா காந்தி தனது சமாதியில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார். 'தனது பிறந்த வீட்டிற்குப் பக்கத்திலே, நான்கு ரூபாய் தந்தால், கள்ளச் சாராயம் ஒரு முழு கிளாஸ் அளவுக்குக் கிடைக்கிறது' என்பதை காந்தி அறிய நேர்ந்தால், சமாதியின் அடியிலேயே நெளிவார்''

இது மிஸ்ரா, 'ப்ரோப் இந்தியா'விலே எழுதிய கட்டுரையாகும். அதற்காகத்தான் அதை நான் இங்கே படித்துக் காட்டினேன்.

இன்னொன்று: இது நாடாளுமன்றத்திலே நடைபெற்றது. குமாரி மணிபென், அண்மையிலே இறந்துவிட்ட தாய். அவர்கள் பிரதமர் இந்திரா காந்தியைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள், இந்த மதுவிலக்கு சம்பந்தமாக. அதைக்குறித்து, அன்னை இந்திரா காந்தி அவர்கள், 1976-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே பதில் சொல்லும்போது, குறிப்பிடுகிறார்கள்:

"... Kumari Maniben also spoke of people's drinking. Now you know that we are trying to launch a movement against alcoholic drinks. But what about the paragon of virtue in this respect in the State of Gujarat? During the Assembly Elections, I had heard of liquor being distributed by a tanker. The other day, we all read of deaths in Surat due to imbibing of illicit liquor''.

''குமாரி மணிபென், பொதுமக்கள் குடிப்பதைப் பற்றிப் பேசினார். உங்களுக்கு எல்லாம் தெரியும். நாங்கள் குடிப் பழக்கத்திற்கு எதிராக ஓர் இயக்கத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மதுவிலக்குக் கொள்கையிலே, மாதிரி மாநிலம் எனப் பேசப்படும் குஜராத்தில் என்ன நிலைமை? சட்டமன்றத் தேர்தல்களின்பொழுது, டேங்கரில் கொண்டு வந்து சாராய விநியோகம் செய்யப்படுகிற நேரத்திலே சொன்னார்கள். சூரத்தில், சமீபத்தில் கள்ளச் சாராயம் அருந்தி, பலபேர் மரணம் அடைந்த செய்தியைத் தாள்களிலே படித்தேன்''

என்று அவர் சொன்னார். இது 'குமாரி மணிபென்'; இங்கே 'குமரி அனந்தன்' *(சிரிப்பு)* அவர் 28.3.81-இல் இந்த மாமன்றத்திலே ஒன்றைப் பேசினார். ''மதுவிலக்கைப் பொறுத்த வரையில் நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன்'' ... *(குறுக்கீடு)* ஒரு எழுத்துக்கூட மாற்ற மாட்டேன். 'மதுவிலக்கைப் பொறுத்த வரையில் நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன். தீண்டாமை எப்படி ஒரு மாநில் அரசாங்கத்தினுடைய பொருளாக இருந்து கொண்டிருக்கிறதோ, அதைப்போல் இருக்க வேண்டும். இந்தியாவிலே, ஒரு பகுதியிலே ஒருவன் தீண்டத் தகாதவன்; இன்னொரு பகுதியிலே தீண்டத்தக்கவன் என்ற நிலையே இல்லை. அவன் அலை வீசுகின்ற கன்னியாகுமரியி லிருந்து, மலை முகடாக இருந்து கொண்டிருக்கிற இமயத்தின் உச்சி வரை வாழ்ந்து கொண்டிருக்கின்ற எவனாக இருந்தாலும் சரி, தீண்டாமையைப் பின்பற்றக் கூடாது என்பதற்காக - அது மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக எப்படி இருக்கிறதோ, அதைப்போல, கள்ளைக் குடிக்காதே என்று சொல்லுகிற அந்தக் காரியமும், மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக இருந்து, தீண்டாமையைப் போலவே, கடுமையாக மத்திய அரசாங்கம் இதையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பகுதியிலே இருக்கிற வன் குடிக்கலாம்; அந்தப் பகுதியிலே இருக்கிறவன் குடிக்கக் கூடாது என்று சொல்கிற நியாயமற்ற ஒருநிலை இருக்கிறது பாருங்கள். அதை மத்தியிலே உள்ள மத்திய அரசாங்கம் முறியடிக்கவேண்டும். தீண்டாமையைத் தனது பொருளாக எடுத்துக் கொண்டதைப் போல, கள் குடிப்பது என்பதையும் மதுக் கடைகளைத் திறப்பது என்பதையும் கூடாது என்று சொல்கின்ற முயற்சியை மத்திய அரசாங்கம் தனது பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்.

இதே கருத்தைத் தான், லோக் சபாவில் 30-7-80-இல் ரத்தன் சிங் என்பவர் அன்னை இந்திரா காந்தியைப் பார்த்துக் கேட்கிறார் ஒரு கேள்வி.

ரத்தன் சிங்: சார், 'சபாநாயகரைப் பார்த்து 'சார்' என்று விளித்து விட்டு,

''Sir, this is a very important question. The Prohibition policy of this Government has not been spelt out whether this Government is for Prohibition or against Prohibition. So far, there is confusion as far as that aspect is concerned. I would like to ask the Prime Minister whether she is aware of the fact that, in one advertisement, a liquor vendor from Ulhasnagar in Bombay had, in the centre of an advertisement, put a

photograph of the Hon. Prime Minister, Indira Gandhi, giving the impression that the Prime Minister is exhorting all the people of India to consume more liquor. I want to know whether the Government would take prompt action against such people and whether the Government would spell out its policy regarding Prohibition''.

''சார், இது மிக முக்கியமான கேள்வி. இந்த அரசு மது விலக்கை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பது தெளி வாக்கப்படவில்லை. மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில் இதுவரை குழப்பமான ஒரு நிலையே நீடித்திருக்கிறது. பம்பாய் உல்லாஸ் நகரைச் சேர்ந்த ஒரு சாராய வியாபாரி வெளியிட்டுள்ள விளம்பரத்தின் மத்தியில் பிரதம அமைச்சர் இந்திரா காந்தியின் படம் இடம் பெற்றுள்ளதே, இது மக்களை மேலும், மேலும் குடிக்க அழைப்பதைப் போன்ற ஒரு எண் ணத்தை ஏற்படுத்துகிறதே, அந்த விளம்பரத்தைப் பற்றி அறி வாரா, அந்த மாதிரி விளம்பரம் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அரசு தனது மதுவிலக்குக் கொள்கையைத் தெளிவாக்குமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.''

அதற்கு அன்னை இந்திரா காந்தி சொல்கின்ற பதில்:

Sir, I have not seen this advertisement. I can say that it is very wrong to use either my photograph or the photograph of any public person, especially one who does not drink. Our Party's policy is that people should not drink. But the question is whether the Prohibition policy as followed has led to that result or not. This is our concern. That is why, in the earlier period, we had thought that we should lay stress on temperance rather than Prohibition as such. Somehow, we have to work out a policy. So far, I am sorry to say, the Prohibition policy has not worked in any place not even in Gujarat where so much effort was made to this end.

இந்த ஆங்கிலத்திற்குத் தமிழ் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்தப் பாலிசி வெற்றி பெற வில்லை என்பதை அம்மையாரே ஒத்துக்கொண்டு, 'இந்தக் கொள்கையிலே உடன்பாடு உண்டு, ஆனால் இந்தக் கொள் கையைச் சட்டமாக்குவதில் வெற்றி பெறமுடியவில்லை' என் பதை வருத்தத்தோடு இந்திரா காந்தி அவர்களே சொல்கிறார்கள்.

ரத்தன் சிங் கேட்கிறார்:

I am thankful to the Prime Minister. But, I want to say that the gentleman who had put the advertisement happens to be the President of the local Congress (I)

"இந்த விளம்பரத்தை வைத்தவன் வேறு யாருமல்ல, அம்மையார் அவர்களே, பம்பாயிலே உள்ள லோக்கல் காங்கிரஸ் கட்சித் தலைவர் தான் அந்த விளம்பரத்தை வைத்தார்."

இந்திரா காந்தி பதில்: I do not know about it. We will look into it. என்று சொல்லிவிடுகிறார்கள். இதை நான் சொல்வதற்கு...

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று படித்துக் காட்டியது எனக்கு மிகுந்த தெம்பை அளிக்கிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கம்கூட அந்த நிலையிலே உறுதியாக இருக்கவேண்டும். அது அகில இந்தியாவிற்கும் வரவேண்டும் என்பதையும் அதே நேரத்திலே அவர்களிடம் வேண்டுகோள் விட்டுச் சொல்கின்ற அந்தக் காரியத்தை விடாப்பிடியாக இங்கே வலியுறுத்துவதற்கு நான் பிறந்த பூமியிலே நான் இருக்கிறேன் என்பதையும், தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய கொள்கையிலே மாறுபாடு இல்லை என்பதை மிகத் தெளிவாக அது காட்டுகிறது. இன்னும் ஒன்று. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களும், நாமும் சேர்ந்து இருக்கின்ற இந்த அவையிலிருந்தே "மத்திய அரசாங்கமே, நீ முழு மதுவிலக்கைக் கொண்டு வா" என்று சொல்கின்ற தீர்மானத்தைக் கூட நாம் நிறைவேற்றலாம். இரண்டாவது செய்தி *(குறுக்கீடு)* மன்னிக்க வேண்டும். ஒன்றே ஒன்று. பம்பாயிலே ஒருவர், லோக்கல் காங்கிரஸ்காரரர் என்று சொன்னால், அவர் தவறு செய்திருந் தால் அது தவறேதான். மனிதனுடைய உடலிலே விரல் ஒன்று அழுகிப் போய்விட்டது என்றால் அதனை வெட்டி எறிவதிலே தவறில்லை, உடலைக் காப்பதற்காக. அப்படிப்பட்ட காங்கிரஸ் காரர்களை வெட்டி எறிந்துவிட்டு, நாங்கள் இந்தக் காங்கிரசைக் காப்பாற்றுவதற்கு என்றும் தயாராக இருப்போம் என்பதையும் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்க முனைகிறார். நம்முடைய ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி இருந்த போதே செய்திருக்கலாம், அகில இந்தியாவிற்கு. அதை விட்டு விட்டு, இப்போது - உங்களுக்கு உங்கள் ஆட்சி இல்லை. இப்போது போய் வி.பி. சிங் ஆட்சியைப் பார்த்து, மது விலக்கைக் கொண்டு வா என்று சொல்வது, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கின்ற காரியம். இருந்தாலும் முயற்சிப் போம். நீங்களும், நானும் சேர்ந்து முயற்சிப்போம். இந்திய அளவிலே அது வருமேயானால், எல்லோருக்குமே மகிழ்ச்சி

தான். இந்தியா முழுமையும் — அவர் அடிக்கடி சொல்கின்ற, குமரி முதல் இமயம் வரை இந்தக் கொள்கை அமலாக்கப்படுமே யானால், நமக்கு மகிழ்ச்சி தான்.

நம்முடைய இலக்கியத்திலே கூட மது போற்றப்பட்டு இருக்கிறது. *(சிரிப்பு)* நம்முடைய அம்மையார் பொன்னம்மாள் அவர்கள் அன்றைக்குக் கண்ணீர் மல்க மிக உருக்கமாகப் பேசினார்கள். இடையிலே பேராசிரியர் குறுக்கிட்டு ஏதோ ஒரு செய்தியைச் சொல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் முழுவதுமாக அன்றைக்கு அழுது இருப்பார்கள், எனக்குத் தெரியும். நம் முடைய இலக்கியத்திலே கூட மது இருக்கிறது. இலக்கியம் நிறைய படித்து இருப்பார் இலக்கியச் செல்வர். எத்தனையோ இடங் களிலே மது இருக்கிறது.

**திரு. குமரி அனந்தன்:** சில இடங்களிலே கடும் தேறல் அன்ன என்று எல்லாம் வருகிறது. சங்கத் தமிழ் எழுதியவருக்குத் தெரியாதது அல்ல. ஆனால் அது வருகிறது என்பதற்காகவே ஒத்துக்கொள்ளப்பட்டது என்பது அல்ல சமுதாயத்திலே. மது என்பது தேன் என்ற வகையிலும் வந்து இருக்கிறது. அதனாலே மது உண்ட என்று சொல்லுகிறபோது வண்டைச் சொல்லுவதும் உண்டு. அதனாலே அது கள் என்றோ அல்லது வேறு ஒன்று என்றோ சொல்வதற்கு இல்லை.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** ஒரு இலக்கியச் சண்டை, சின்னச் சண்டை இப்போது. ‘சிறிய கள் பெறினே எமக்கீயு மன்னே, பெரிய கள் பெறினே யாம் பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே’ - அதாவது கள் என்றே வருகிறது புறநானூறு 235-வது பாடல். ஔவையாரே பாடியது. ஔவையார் பாடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாடியவர் ஒரு அம்மையார்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** அது தான் அவ்வையார் என்று சொன்னேன். அவ்வையாரும் ஒரு அம்மையார் தானே *(சிரிப்பு)*

**திரு. குமரி அனந்தன்:** ஔவையார் கள் குடித்தார் என்பது நான் ஒத்துக்கொள்வதற்கு இல்லை. அந்தக் கிழவி குடித்தாள் என்பதை இந்தக் குமரி ஒத்துக்கொள்ளவில்லை. *(சிரிப்பு)*

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** இலக்கிய ஆராய்ச்சியில் 3 அவ்வையார்களைச் சொல்கிறார்கள். சில புலவர்கள் 18

அவ்வையார்களைச் சொல்கிறார்கள். அதேபோல் அதியமானோடு இருந்த அவ்வையார் பாடிய பாட்டு அது. அதாவது கொஞ்ச மாகக் கள் இருந்தால் எங்களுக்குக் கொடுப்பான் அதியமான். நிறைய இருந்தால் நாங்களும் அவனும் சேர்ந்து சாப்பிடுவோம் என்று அவ்வையார் பாடினார்; அதற்காகச் சொன்னேன். ஏன்! நம்முடைய இதிகாசங்களில் எல்லாம் இல்லையா என்ன? எவ்வளவோ இருக்கிறது. அன்றைக்குக் கூட அம்மையார் சொன்னார். இந்தக் கள் குடித்தால், சாராயம் குடித்தால், மலிவு விலையில் கருணாநிதி மதுவை விற்க ஆரம்பித்தால் என்ன ஆகும் தெரியுமா? ஒரு வீட்டிலே மனைவிக்கும் மகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் மகளைக் கற்பழிப்பான் - பக்கத்து வீட்டுப் பெண்ணைப் போய்க் கற்பழிப்பான் என்று சொன்னார். இது எல்லாம் மது அருந்தாமலேயே புராண காலத்தில் நடந்து இருக்கிறது. நடக்காமல் இருக்கிறதா?

திரு. ரா. சொக்கர்: தலைவர் அவர்களே, புராண காலத்தில் எத்தனையோ நல்ல விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கலாம், அல்லது தீமைகள் பயக்கக்கூடிய விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கலாம். முதலமைச்சர் அவர்கள் சொன்னார் என்றால், அதை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையில் இருக்கிறார்கள். ஆகவே நல்ல விஷயங்களைச் சொல்லி, மது அருந்துவதால் உள்ள தீமைகளைச் சொல்லி, நிதிப் பற்றாக் குறைக்காக இதை அறிமுகப்படுத்தி இருக்கிறோம் என்ற அளவில் மட்டும் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர்: நான் அந்த வாதத்தில் மாறுபடுகிறேன். நிதிப் பற்றாக்குறைக்காக அல்ல. சமூக நீதி நிலை பெறவேண்டும் என்பதற்காக, நிதிப்பற்றாக்குறைக்காக அல்ல. நிதிப் பற்றாக்குறை என்றால் கஜானா காலியாக இருந்தபோது ஆட்சிக்கு வந்தோம். அப்போதே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கலாம். நிதிப் பற்றாக்குறைக்காக நிச்சயமாக அல்லவே அல்ல. நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்திலே கொண்டுதான்; நான் புராணங்களைச் சொன்னதற்காக வருத்தப்படக்கூடாது. நான் சொல்ல வந்தது எதற்காக என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மது அருந்துவதால் தான் ஒருவன் கெடுகிறான் என்பது அல்ல. அவனவன் மனோநிலையில் அவன் கடவுளாக இருந்தால் கூடக் கெடுகிறான்.

பிரம்மா, திலோத்தமையை உற்பத்தி செய்கிறான். அந்த அவருடைய மகளை அழகான பெண்ணாக உற்பத்தி செய்ததும் அந்தப் பெண் மீது அவருக்கு மையல் ஏற்பட்டது. துரத்திக் கொண்டே ஓடினார். பெண்ணைக் கற்பழிக்க முயற்சிக்கிறார்,

புராணம். அவர் என்ன மலிவு விலை மதுவா அருந்தி இருந்தார்? இல்லை. *(சிரிப்பு)* இந்திரன் ஒரு முனிவருடைய மனைவி அகலிகையைக் கற்பழித்தார்; மது அருந்திவிட்டா சென்றார்? இல்லை. சந்திரன், குரு பத்தினியை தாரையைக் கற்பழித்து அவளோடு கூடிக் கிடந்தான். அவன் மலிவு விலை மதுவா அருந்தி இருந்தான்? இல்லை. இது எல்லாம் ஒரு மனநிலையே தவிர, மது அருந்தியதால் தான் இது எல்லாம் என்று குற்றம் சொல்லக் கூடாது. இவைகளைச் சொல்லுகிற காரணத்தால் - புராணங்களை மேற்கோள் காட்டுவதால், சங்க இலக்கியங்களை மேற்கோள் காட்டுவதால் நான் மது அருந்த வேண்டும் என்று வாதிடுகிறவன் அல்ல. எப்படி இங்கே தம்பி இராதா - எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் - அதனுடைய தீமைகளை எடுத்துச்சொல்லி தன்னுடைய குடும்பத்தில் ஏற்பட்ட அந்தக் கொடுமையைச் சொன்னார். அதைப்போல மதுவினால் வருகின்ற தீமைகளை நாம் நாட்டுக்கு எடுத்துச் சொல்வோம்; சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

சிகரெட் பிடிக்கக்கூடாது என்று சொல்கிறோம். அதே நேரத்தில் சிகரெட் விற்பதைத் தடுப்பது இல்லை. உலகம் முழு வதும் சிகரெட்டினால் வரும் தீமைகள் அந்த சிகரெட்டில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறன. ஆனாலும் சிகரெட் இன்றைக்கு புழக்கத்தில் தான் இருக்கிறது. நம்மால் நிறுத்த முடியவில்லை; நம்மால் சட்டம் போட்டுத் தடுக்க முடியவில்லை. நான் படித்துக் காட்டினேனே இவைகள் எல்லாம் வெறும் புள்ளிவிவரங்களா? 3 இலட்சம் பேர், 4 இலட்சம் பேர் ஆண்டுதோறும் இப்படிப் பட்ட சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள். நான் வெட்கத்தை விட்டுவிட்டுச் சொல்கிறேன், அதிகார வர்க்கமே கூட அதற்கு உடந்தையாக இருக்கிறது. எதற்காக உண்மைகளை மறைக்க வேண்டும்? நம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமாக எதற்காகப் பேச வேண்டும்? நான் ஒத்துக் கொள்கிறேன். நான் தோல்வியை ஒத்துக் கொள்கிறேன். 12 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது கள்ளச் சாராய வியாபாரிகளிட மிருந்து என்று நம்முடைய போலீஸ் அதிகாரி தேவாரம் சொல்கிறார் என்றால் அதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. அபராதமாக 12 கோடி ரூபாய் கட்டக்கூடிய அளவிற்கு இன் றைக்கு நிலைமை என்றால் எவ்வளவு கள்ளச் சாராயம் காய்ச் சப்பட்டு இருக்கும் என்று தான் வருத்தப்படுகிறேனே அல்லாமல் வேறு அல்ல.

எனவே, இந்தச் சமுதாயம் சீர்படவேண்டுமேயானால் அதற்கு இன்றுள்ள இந்தச் சூழ்நிலையில், எல்லோரும் குடிக்கப் போவதில்லை; என்னதான் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டாலும் கூட அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் 8

சதவீதத்திற்கு மேல் இந்த மக்கள் தொகையிலே குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கை யாரும் சொல்லவில்லை. இதுவரையிலே அதே கணக்குதான். முன்பு, காமராஜர் ஆட்சியானாலும் சரி; பெரியவர் பக்தவத்சலம்அவர்களுடைய ஆட்சியானாலும் சரி; அதற்குப் பிறகு இவைகளை ஒத்திவைத்த தி.மு.க. ஆட்சியானாலும் சரி; மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அதை மீண்டும் கொண்டு வந்த அந்தக் காலமானாலும் சரி; பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சி புரிந்து, அவர்கள் கொஞ்ச காலம் மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைப்பிடித்தாரே அந்தக் காலமானாலும் சரி; அதற்குப் பிறகு அவர்கள் ஒத்தி வைத்தார்களே, ரத்து செய்தார்களே அந்தக் காலமானாலும் சரி; இந்தத் தீமையை நாங்கள் உணராதவர்கள் அல்ல. இந்தத் தீமையைப்பற்றி, அது அகற்றப்படவேண்டுமென்பது பற்றி நாங்கள் உங்களோடு முழு மனதோடு ஒத்துப் போகின்றோம். அதிலே இருவேறு கருத்துக்கு இடமேயில்லை. தம்பி ராஜேந்திரன் அன்றைக்குச் சொன்னதைப் போல, 'யதார்த்தம்' என்ற அருமை யான வார்த்தையைப் பயன்படுத்தினார். யதார்த்த நிலையை நாம் இன்றைக்குப் பார்க்க வேண்டும். வீம்புக்கு இன்றைய தினம் நாம் இந்தக் காரியத்தைச் செய்தே தீருவோம் என்று சொல்லு வதால் பொருளாதாரம் மாத்திரமல்ல, சமுதாயத்தினுடைய ஒழுக்கமேகூட இன்றைக்குக் கெட்டுப்போகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் இதைச் சொன்னேன்.

முதலிலே, '71லே இது கொண்டுவரப்பட்ட போதுகூட இதற்காக ஒரு பிரச்சாரக் குழு, கட்சி சார்பிலே அமைக்கப்பட்டு, எம்.ஜி.ஆர். அவர்கள் அதற்குத் தலைவராக இருந்து, மதுரை முத்து போன்றவர்கள் அதிலே குழு உறுப்பினர்களாக அமைந்து, அந்தக் குழு கொஞ்சநாள் பணியாற்றியது. அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். உடைய ஆட்சிக் காலத்திலே மீண்டும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட நேரத்தில் அவர்கள் ஒரு பிரச்சார இயக்கமே நடத்த வேண்டுமென்று, 1 கோடி ரூபாய் கூட அதற்காக ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட பணம், 5,6 ஆண்டுக் காலமாகச் செலவழிக்கப்படவேயில்லை என்று நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தலைவராக இருக்கின்ற பொதுக் கணக்குக் குழு அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1 கோடி ரூபாய் 81-82-லே ஒதுக்கப்பட்ட அந்தத் தொகை செலவழிக்கப்படவேயில்லை. 1981-82-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பாரா 79-இல், குடிப்பதால் விளையும் தீமை களைப் பற்றிய பிரச்சாரத்தை அரசு தீவிரமாக மேற்கொள்ள, திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், பாடல்கள்

போன்றவற்றின் மூலம், மதுவிலக்கு பற்றிப் பிரச்சாரம் செய்வதற்காக முதல் தவணையாக ரூபாய் 1 கோடி ஒதுக்கப் படும் என்று அறிவித்து இருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பணம் செலவழிக்கப்படவேயில்லை. திரும்ப அரசாங்கக் கருவூலத்திற்குச் சென்று விட்டது என்பதை மிகுந்த வேதனையோடு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அந்த அறிக்கையிலே, பொதுக் கணக்குக் குழு அறிக்கையிலே, இறுதியாகத் தெரிவித்து இருக் கின்றார்கள்.

அவர், காட்டிக்கொடுப்பதாக எண்ணிக்கொள்ளக்கூடாது. அவர் தெரிவித்து இருப்பதைத்தான் சொல்கின்றேன். நான் இப்போது சொல்கின்றேன்; குமரி அனந்தனைப் போன்றவர்கள் செயலாள ராக இருந்து மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவை நடத்தட்டும், ஒரு கோடி அல்ல, 5 கோடி ரூபாய் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காகச் செலவழிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. (கர ஒலி) ஒதுக்கப்படும்; செலவழிக்கப்படும்; பீட்டர் அல்போன்ஸ் கணக்கை ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளலாம். செலவழித்து இருக்கிறோமா இல்லையா என்று கணக்கை ஒழுங்காகப் பார்த் துக் கொள்ளலாம்.

மலிவு விலையிலே மது கொடுக்கிறார்கள் ஆகவே இந்த ஆட்சி ஒழிய வேண்டும்; இந்த ஆட்சியை அகற்றுவதற்குக் கொடி பிடிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள்.

ஒரு கட்சி பாண்டிச்சேரியிலே தேர்தலிலே நின்றது. நின்றது என்று நான் சொல்லித்தான் உங்களுக்கெல்லாம் தெரியும். அந்தக் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் - பாட்டாளி மக்கள் கட்சி - என்ன சொன்னார்கள் தெரியுமா? எல்லா பத்திரிகைகளிலும் வெளிவந்தது அந்தத் தேர்தல் அறிக்கை. ''கள், சாராயக் கடைகளை அரசே ஏற்று நடத்தும். (எலக்ஷன் மானிபெஸ்டோவில் சொல்லியிருக்கிறார்கள்.) குறைந்த விலையில் கள், சாராயம் விற்கப்படும்'' என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், இங்கே போராட்டம் என்றால், தி.மு.க. மீது உள்ள ஓர் அலர்ஜி, ஒரு வெறுப்பு, ஓர் எரிச்சல், ஒரு கோபம் என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்பதை, தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மதுப் பழக்கத்தை நிறுத்துவது என்பதும், இதை அகற்றுவது என்பதும் ஒரு சமுதாயப் பிரச்சனை என்பதை மனதிலே கொள்ள வேண்டும். எனவே பிரச்சார இயக்கங்கள் இதற்கு முடுக்கிவிடப்படவேண்டும். அதற்கு அனைவரும் ஒத் துழைக்க வேண்டும்.

இன்றைக்கு 'லோக குரு' சங்கராச்சாரியார் கூட மலிவு விலை மதுவை எதிர்த்துப் பேசியிருக்கிறார். அவர் தன்னை, தமிழக அளவிற்குச் சுருக்கிக் கொண்டு பேசுகிறார் என்றால் தமிழ் நாட்டின் மீது மட்டும் அவருக்கு அவ்வளவு கவலை. உலகத்திற்குக் குருவாக இருக்கிற அவர், இருந்தாலும் உலகத்தைப் பற்றிக் கூட கவலைப்படாமல் தமிழ்நாட்டைப் பற்றி மாத்திரம் கவலைப் படுகிறார் என்றால் அவரைப் போன்றவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சாரத்திற்கு ஆணி வேராக இருக்க வேண்டும். சேவா சங்கங்கள், மாதர் சங்கங்கள் இவர்களெல்லாம் கூட அரசோடு ஒத்துழைக்க வேண்டும். என்ன செலவானாலும் எந்தவகையி லேயானாலும் இந்த மது தீதானது என்பதை மக்களிடத்திலே பிரச்சாரம் செய்ய இந்த அரசு எவ்வளவும் செலவழிக்கத் தயாராக இருக்கிறது. அதேநேரத்திலே உங்களுக்கு உறுதியளிக்கின்றேன், மதுக் கடைகள், கோயில், கல்வி நிலையங்கள், தொழிற் சாலைகள் இங்கெல்லாம் நிச்சயமாக் அமைக்கப்படமாட்டாது என்ற உறுதியைத் தருகின்றேன். கடைகளில் குடிப்பதை நிச்சய மாக அனுமதிக்க மாட்டோம் என்பதற்கு உறுதியளிக்கிறேன்.

பொதுத்துறையில் தமிழ்நாடு ஸ்பிரிட் நிறுவனம் உற்பத்தி செய்யும். பொதுத்துறையில் டாஸ்மாக் நிறுவனம் மொத்த வினியோகம் செய்யும். சில்லறை விற்பனைக் கடைகளில், நான் முதலிலேயே கூறியுள்ளபடி, ஏலம் மற்றும் டெண்டர் முறை களில் அனுமதிக்கப்படுவதால், லஞ்சத்திற்கோ, ஊழலுக்கோ இடம் இல்லாமல் நடக்கும் என்ற உறுதியைச் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே சில அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் உங் களுடைய ஒப்புதலுக்காக, என்னுடைய பேச்சின் இறுதியாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுவிலக்குப் பிரச்சினையில் வாதாடுகின்ற வகையில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஆனால் நான் ஒன்றைப் பணி வோடு வேண்டிக்கொள்கிறேன். கோவை பொதுக்குழுவில், மது விலக்கைத் தளர்த்த வேண்டுமென்று சொன்ன நேரத்திலும், அதற்குப் பின்னால் திண்டுக்கல் தேர்தலில் தோல்வியடைந்த நேரத்திலும், கோவைத் தேர்தலில் தோல்வி ஏற்பட்ட நேரத் திலும், உங்கள் ஆட்சியின் கடைசிக் காலத்தில் பூரண மது விலக்கைக் கொண்டு வருவோம் என்று அறிவித்து, அன்றைக்கு முழு மதுவிலக்கை நீங்கள் கொண்டு வந்தீர்கள். அதற்குப் பின்னால் நீங்கள் மீண்டும் ஆட்சியில், மதுவிலக்கு வருகிறது

என்று சொன்ன நேரத்தில், வாதாடிய நேரத்தில், ஆதரித்துப் பேசிய பேச்செல்லாம் இந்த மன்றத்தின் குறிப்பேடுகளில் இருக்கின்றன. இதை ஒரு வாதப் பிரச்சினையாகக் கருதாமல் ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருதி, மீண்டும் இதை மறுபரிசீலனை செய்யவேண்டும். தேர்தலை மட்டுமே கருதக்கூடாது. தேர்தலில் தோற்றால் ஒத்திவைப்பது, மீண்டும் வந்தால் அறிவிப்பது, மறுபடியும் தேர்தல் வந்தால் மாற்றுவது என்ற நிலை வேண்டாம் என்று தயவுசெய்து நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சமுதாய நிலையில் நீங்கள் இதை அணுக வேண்டும். இதற்கு ஆதாரம் இருப்பதாகக் கூறி மதுவைக் கொண்டுவரவேண்டுமென்பது அவசியமில்லை. இதற்கான வருவாயை எத்தனையோ வழிகளில் தேடிக் கொள்ளலாம். நீங்கள் தயவு செய்து மதுவிலக்குக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** நான் இதற்கு இறுதியாக பதில் சொல்கிறேன். இப்போது சில அறிவிப்புகளைப் பற்றிச் சொல்வதாகச் சொன்னேன். புதிய வரிகள் பற்றி, நம்முடைய இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அதுகுறித்து, சில சலுகைகளை நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் விற்பனை வரி அமைப்பில் 193 பொருட்கள் மாத்திரம் ஒருமுனை வரிவிதிப்பின் கீழும், மீதமுள்ள எல்லாப் பொருட்களும் பலமுனை வரிவிதிப்பின் கீழும் இருந்ததை, வணிகர்களின் நலன் கருதி, இனி எல்லாப் பொருள்களும் ஒருமுனை வரி விதிப்பின் கீழ்வரும் என்றும், பலமுனை வரிக்கு உட்பட்ட பொருள்கள் அனைத்தும் இதுவரை 10 சதவீதமும் அதற்கு மேலும் என்ற அளவிற்கு வரி செலுத்துவதற்கு மாறாக, இனி 8 சதவீதம் வரி மட்டுமே செலுத்தினால் போதும் என்ற வரி அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. அந்த அடிப்படையில், ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரிவிதிப்பு முறை பல ஆண்டுகளாக சிக்கலான சூழலில் இருந்து வந்தது. அதைத்தான் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதை ஒழுங்குபடுத்தும் வகையில், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10 இலட்சத்திற்கும் அதற்கு மேலும் வியாபாரம் செய்கிற ஓட்டல்களின் உணவுப் பண்டங்கள் மற்றும் பானங்கள் மீது 5 சதவீதம் வரி விதிக்க அறிவிக்கப்பட்டது. பிறகு, நடுத்தர ஓட்டல்களுக்குச் சலுகை அளிக்கவேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்கப்பட்டு,

ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் 15 இலட்சம் வரை வியாபாரம் செய்யக்கூடிய ஓட்டல்களுக்கு, கூட்டு வரி முறை (காம்பவுண்டிங் டாக்ஸ்) ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் பேசும்போது கர்நாடக மாநிலத்தைப் பற்றிச் சொன்னார்கள்.

கர்நாடகத்தில் 1 இலட்சம் ரூபாய் டர்ன் ஓவர் இருந்தாலே கூட அங்கே வரி இருக்கிறது. ஆனால் நாம் 10 இலட்சம் முதல் 15 இலட்சம் வரையிலும், காம்பவுண்டிங் டாக்ஸ் இந்த டர்ன் ஓவருக்கு என்று நாம் வைத்திருக்கிறோம். 15 இலட்சத்திற்கு மேல் வியாபாரம் செய்யப்படுகிற ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் பானங்கள் மீது 5 சதவீதம் பலமுனை வரி இருக்கும் என்று முன்பு தீர்மானிக்கப்பட்டது. இந்த வரிவிதிப்பை எதிர்த்து ஓட்டல் உரிமையாளர்கள் சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார்கள். பிப்ரவரி மாதத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழு இந்த வரி விதிப்பு முழுமையாகச் செல்லும் என்று தீர்ப்பு அளித்தனர். இதை எதிர்த்து, அவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தார்கள். உச்சநீதிமன்றம் இதற்குத் தடையாணை எதுவும் வழங்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் வரி விலக்கை எப்படியும் பெறவேண்டுமென்ற முயற்சியில் சில தவறான போக்கில் ஓட்டல் உரிமையாளர்கள் இறங்கியுள்ளதாக எனக்குத் தகவல்கள் வந்துள்ளன. ஏற்கெனவே சிறுதொழில் அதிபர்கள் கூட்டத்தில் நான் திருச்சியில் பேசும்போது, செயற்கை வைர வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை நீக்கவேண்டுமென்ற கோரிக்கையைப் பற்றி அரசு பரிவுடன் ஆய்ந்து கொண்டிருந்தபோது, அந்தச் செயற்கை வைர வியாபாரிகள் தவறான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது குறித்தும், அதன் காரணத்தால் செயற்கை வைரத்திற்கு, தொடர்ந்து வரி விதிப்பு நீடிக்க இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறேன்.

இந்தச் செய்தியை ஏடுகளிலே கண்ட ஓட்டல் உரிமையாளர்கள் அவசர அவசரமாக வந்து என்னைச் சந்தித்தார்கள். நான் அவர்களிடம் இதுபோன்ற வசூல் காரியங்களிலே ஈடுபடக் கூடாது என்றும், எனவே இதுவரையில் வசூலித்த தொகையை உடனடியாக அவரவர்களிடம் திரும்பத் தந்துவிட வேண்டும் என்றும், அது இயலாத காரியம் என்றால் அந்தத் தொகையை முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் அரசுக்கே சேர்த்துவிட வேண்டும் என்றும் தெரிவித்தேன். அவர்களிடத்திலே இருந்து இன்னும் பதில் வரவில்லை. வரி பற்றிய கோரிக்கையைப் பொறுத்தவரையில் பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாக அனைத்துப் பொருட்களையும் கொண்டுவரும் கூட்டத்தில், ஓட்டல் மற்றும் உணவு விடுதிகளில் விற்கப்படும் பண்டங்கள் 33

மற்றும் பானங்கள் மீது விதிக்கப்படும் 5 சதவீத பலமுனை வரி தற்போது இந்த மதிப்பீட்டால் 8 சதவீத ஒருமுனை வரியாக் மாறி இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையிலே பலமுனை வரியிலே இருந்த அனைத்துப் பொருட்களையும் ஒட்டுமொத்தமாக ஒருமுனை வரியாகக் கொண்டுவரும்போது ஒருசில பொருட்களுக்கு 8 சதவீதத்திற்கும் குறைந்த விகிதத்தில் வரி விதிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக அலுமினியப் பாத்திரத்திற்கு 4 சதவீதம்; பித்தளை, செம்புப் பாத்திரத்திற்கு 5 சதவீதம்; தங்கம், வெள்ளி ஆகியவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களுக்கு 4 சதவீதம். காலணி மற்றும் டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதவை களுக்கு 5 சதவீதம்; ஏலக்காய்க்கு 3 சதவீதம்; ரொட்டி, பிஸ்கட் போன்ற டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாத பொருட் களுக்கு 5 சதவீதம். இன்றைக்கு இதே அடிப்படையில் உணவுப் பண்டங்கள் மற்றும் பானங்கள் மீதான விலையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 8 சதவீத ஒருமுனை வரியை 5 சதவீதமாகக் குறைக்க இந்த அரசு தீர்மானித்து இருக்கிறது. *(கர ஒலி)* 1.4.90 முதல் இது நடைமுறைக்கு வரும்.

அடுத்து, பழைய பாக்கி பற்றி திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொண்டு 89-90-ஆம் ஆண்டுப் பாக்கியை 90-91-ல் மாதத் தவணையில் அவர்கள் கட்டலாம் என்கிற சலுகையை அவர்களுக்கு நான் வழங்குகிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னபோது வைரத் தொழிற்சாலையிலே அவர்கள் சொன்ன அறிவிப்புக்குப் பின்னாலே கூட இவர்கள் பல்வேறு முயற்சிகளிலே ஈடு பட்டார்கள் என்பதாலும் அவர்கள் அதைக் கொண்டுவந்து கட்டிவிட வேண்டுமென்று சொன்னதையும் நான் மிகுந்த அளவில் வரவேற்கிறேன். ஏனென்றால் நியாயத்தின் அடிப் படையிலே காரியங்கள் செய்யப்பட வேண்டுமே தவிர வேறு வகையிலே செய்வதை யாரும் ஒத்துக்கொள்ள முடியாது என்பதைப் பொறுத்தவரையில் முதல்வர் அவர்களோடு என்னுடைய உணர்வையும் நான் பொருத்திக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் - மன்னிக்கவேண்டும் என் னுடைய சகோதரர்கள், நான் ஒரு தனி அமைப்பு வைத்திருந்த நேரத்திலே உண்பகத்தினுடைய வரியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினோம். அந்த வகையிலே பார்க்கிறபோதுதான் இது என்னுடைய மனதை மிகவும் தொட்டது. உண்பகத்திற்கு வரி கூடாது, உண்பக உணவுக்கு வரி கூடாது என்று போராட்டமே

நடத்திய காரணத்தால் அதில் ஆழ்ந்து நின்று கொண்டிருக்கிறோம். இன்னும் ஒரு வேண்டுகோளை நான் சொல்கிறேன், அவர்களுடைய பரிசீலனைக்காக. இப்போது நீங்கள் வரி வசூலிப்பதாக இருந்தால் உண்ணுகிறவர்களுக்கும் தொல்லை இல்லாமல், அதனை விநியோகம் செய்கிறவர்களுக்கும் தொல்லை இல்லாமல் இந்த வருமானத்தை நீங்கள் பெற வேண்டும் என்று சொன்னால் மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது ஒரு கருத்தினை வைத்திருந்தார். அதாவது ஏ.பி.சி.டி. என்று நான்கு வகையாகப் பிரித்துக் கொண்டு வருடத்திற்கு ஒரு தடவை உரிமம் பெறுகிற நேரத்தில் 25,000 ரூபாய் 30,000 ரூபாய் என்று அவர்களிடம் இருந்து வசூலித்துக்கொண்டால் அதிகாரிகளின் தொல்லையும் இராது: சாப்பிடுகிறவர்களுக்கும் இடர்ப்பாடு ஏற்படாது. நீங்கள் பண்டங்களின் விலையைக் கூட்டக்கூடாது என்று கூடச் சொல்லுங்கள். மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் சொல்வதற்குக் காரணம் அன்றைக்கு இருந்தே இந்த உணவுப் பண்டங்கள் பற்றிய ஒரு எண்ணத்தோடு இருக்கிறேன் என்பதற்காகத்தான்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் அன்றைக்கும் உங்களைப்போல் ஓட்டல் அதிபர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூறுவது போல் மொத்தமாக 25,000 ரூபாய், 30,000 ரூபாய் கொடுத்து விட்டால் ஓட்டல் வியாபாரிகளுக்கு என்ன ஆதாயம் அதிலே என்றால் - இன்கம்டாக்ஸ்காரர்களை - அவர்கள் இந்த விற்பனை வரியைச் செலுத்துவதன் மூலமாக எவ்வளவு இவர்களுடைய டர்ன் ஓவர் என்பது இன்கம்டாக்ஸ் துறையிலே இருப்பவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. அதாவது இந்த வரிவிதிப்பு இருந்தால், தாங்கள் சொல்வதுபோல் 25,000 30,000 என்று ஏ.பி.சி.டி. என்ற அடிப்படையிலே ஓட்டல்காரர்களைப் பிரித்துக்கொண்டு கொடுத்துவிட்டால் இன்கம்டாக்ஸ்க்கு கணக்கு போய்ச் சேராது. இன்கம்டாக்ஸ்க் கணக்கு மத்தியத்திற்குச் சென்றால்தான் அதிலேயிருந்து வருகிற வருமானப்பங்கு நமக்குக் கிடைக்கும். அதை நாம் இழந்து விடக்கூடாது. எனவே இதைத் தீர யோசிப்போம் பிறகு.

அடுத்து, 'ரெடிமேட் கார்மென்ட்ஸ்' நீங்கலாக அதாவது தைக்கப்பட்ட துணிகள் நீங்கலாக அதாவது 'ஸ்டிட்ச்டு ஐட்டம்' நீங்கலாக மற்றவற்றைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 4 சதவீதம் பலமுனை வரி விதிக்கப்பட்டிருந்தது. ஒருமுனை வரியாக

மாற்றும்போது அது 8 சதவீதமாக அதிகரித்துவிட்டது. தற்போது 3 சதவீதம் என்று ஒருமுனை வரியாக அது குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படக்கூடிய பாலித்தீன் சாக்குகளுக்கு 2 சதவீத பலமுனை வரி விதிக்கப் பட்டிருந்தது. ஒருமுனை வரியாக மாற்றும்போது 8 சதவீதம் என்று விதிக்கப்பட்டதை, தற்போது மீண்டும் அது 2 சதவீதம் ஆகக் குறைத்து ஒருமுனை வரி விதிக்கப்படும்.

தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டத்தில் இயங்கும் ஜவ்வரிசி கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு வரிச்சலுகை ஏற்கெனவே 5 சதவீதம் பலமுனை வரிக்குப் பதிலாக 4 சதவீதம் பலமுனை வரிச்சலுகையாக வழங்கப்பட்டிருந்தது. தற்போது மாற்றியமைக் கப்பட்ட ஒருமுனை வரி முறைப்படி 8 சதவீதத்திற்குப் பதிலாக இனி 4 சதவீதம் ஒருமுனை வரி விதிக்கப்படும்.

இதில் கூட்டுறவுச்சங்கம் சாராத இதர வணிகர்களுக்கு 5 சதவீதம் ஒரு முனை வரி விதிப்பாக மாற்றியமைக்கப்படும்.

எலெக்ட்ரானிக். இதிலே கூட சில குறைபாடுகள் எங்களு டைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கர்நாடகத்திலே டி.விக்கு 3 சதவீதம். மற்ற எலக்ட்ரானிக் பொருள்களுக்கு 6 சதவீதம். ஆந்திராவிலே 2 சதவீதம். கேரளாவிலே 4 சதவீதம். குஜராத்திலே 8 சதவீதம். இப்போது நாம் 4 சதவீதம் என்று ஆக்கினோம். அதையும் குறைக்கவேண்டும் என்று அவர்கள் இன்றைக்கு வாதிடுகிறார்கள். எனவே ஒரு சமரசமாக இனிமேல் அது 3 சதவீதம் என்கிற அளவுக்குக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈட்டுறுதித் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள். இரண்டு மூன்று முறை திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் இந்த மாமன்றத்திலே அதைப் பற்றிக் கருத்துக் கூறியிருக்கிறார். 10 ரூபாய் விவசாயத் தொழிலாளர் களிடத்திலே பெற்று அந்தப் பணம் திருப்பிச் செலுத்தப்பட வில்லை என்று சொன்னார். இதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் குறு விவசாயிகளுக்கென ஒரு ஈட்டுறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டம் 1984ல் ஏற்படுத்தப்பட்டது. அரசு ஆணை எண் 503, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, தேதி 5.8.1989ல் இது நிறுத்தப்பட்ட்து. ஆனால் இத்திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்பே, அதாவது அரசாணை எண் 1255, தொழிலாளர்

மற்றும் வேலை வாய்ப்புத் துறை தேதி 27.6.1989ல் நிறுத்தப்பட்ட கணக்குகளை எப்படி முடிவு படுத்துவது என்று தெளிவான விவரங்கள் உள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தொடக்கத்தில் இத்திட்டத்தில் அதிக நபர்கள் சேர்க்கவேண்டுமென்று முயற்சிகள் எடுக்கப்பட்டன முன்பிருந்த ஆட்சியில். ஒரு குறியீட்டின் அடிப்படையில் பல கணக்குகள் ஏற்படுத்தப்பட்டன. இப்படிச் செய்ததில் மொத்தம் 16.6 இலட்சம் நபர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் 31.12.1988-இல் உள்ள கணக்குப்படி அந்த 16.6 இலட்சம் என்பது வெறும் 4.5 இலட்சம் நபர்கள் மாத்திரம் என்ற அளவுக்குக் குறுகிவிட்டது. எனவேதான் 16.6 இலட்சம் என்ற எண்ணைவிட மிகக் குறைவான நபர்கள் இத்திட்டத்தில் தொடர்ந்து பங்கேற்பார்கள் என்பதை எண்ணிப் பார்த்தோம். 10 ரூபாய் கட்டினால், அவர் இறந்து போனால், 5 ஆயிரம் ரூபாய் தரப்படும் என்பதற்குப் பதிலாக, இந்த 10 ரூபாய் கூடக் கட்டாமல், இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவித்து சகலவிதமான தொழிலாளர்களுக்கும் என்ற அளவில், அன்றைக்குக்கூட நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேறு சில தொழிலாளர்களைப்பற்றிக்கூட அன்றைக்கு இணைத்துச் சொல்லியிருக்கிறார். அப்படி எல்லாத் தொழிலாளர்களுக்கும், அவர்களுக்கு இந்தத் திட்டத்தின்மூலம் ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு 10 ரூபாய் தரப்பட வேண்டும். அதை ஈட்டுறுதியாக அவர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் என்று வழங்கப்படும் என்ற நிலையை மாற்றி, விபத்திலே அவர்கள் மாண்டுவிடுவார்களேயானால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றும், குடும்பத் தலைவரை இழந்து வாடும் வறிய குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் தரப்படும் என்றும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. அந்த பழைய பாக்கித் தொகை 11 கோடி ரூபாய் அளவுக்குத் திருப்பித் தரப்படவேண்டியிருக்கிறது. அதற்கான ஆணை பிறப்பிக்கப்படவிருக்கிறது என்பதையும் வெகு விரைவிலே அந்த 11 கோடி ரூபாய் - அந்தப் பணம் கொடுத்தவர்களுக்கெல்லாம் திருப்பித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டாயிரம் நிதி வழங்குகின்ற திட்டம், குடும்பத் தலைவர் இறந்தால் இரண்டாயிரம் நிதி வழங்குகின்ற இந்தப் புதிய திட்டத்தின்படி, நடப்பாண்டில் 10,517 குடும்பங்கள் பயன் பெற்று உள்ளன. எனவே இந்தத் திட்டத்தில் இரண்டாயிரம் ரூபாய் என்ற நிதி அளவு இந்த ஆண்டிலிருந்து மூவாயிரமாக உயர்த்தப்படுகிறது என்பதையும், இதற்குக் கூடுதல் செலவு 1½ கோடி ரூபாய் ஆகும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய ஆட்டோ பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயே அதைப்பற்றிக் கலந்தாலோசித்து ஓர் அறிக்கையை இங்கே தர விரும்புகிறேன். 30.6.1989 வரை சென்னையில் 5,846 ஆட்டோ பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. கோவையில் 4,304 ஆட்டோ பெர்மிட்டுகளும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் 31.12.1989 வரை, 3,560 ஆட்டோ பெர்மிட்டுகளும் கொடுக்கப்பட்டு உள்ளன. சென்னையைத் தவிர மற்ற இடங்களில் ஆட்டோ பெர்மிட்டுகள் கொடுப்பதற்குத் தடைகள் இப்போது எதுவும் இல்லை. சென்னையிலே புதிய ஆட்டோ பர்மிட் வழங்கப்படாத காரணத்தால் செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, திருவள்ளூர் போன்ற புறநகர்ப் பகுதிகளில், ஆட்டோ பெர்மிட் பெற்றவர்கள் அந்த ஆட்டோக்களை சென்னைக்கு ஓட்டி வருகிறார்கள்.

மேலும் சென்னை நகரத்தில் பெர்மிட் இல்லாத ஆட்டோக்கள் புழக்கத்தில் இருப்பதாகவும், ஒரே பெர்மிட்டில் இரண்டு மூன்று ஆட்டோக்கள் ஓடிக்கொண்டிருப்பதாகவும், அதற்கு ஒருசில அரசு அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் உடந்தையாக இருப்பதாகவும், இவர்களுக்குக் கடன் கொடுப்பவர்களுக்குச் சாதகமாக பெர்மிட் முறை அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் ஓட்டுபவர்களை விட இந்த ஆட்டோ பெர்மிட்டுகளை முடக்கி வைத்திருப்பவர்கள் அதிக லாபமும் அடைகிறார்கள் என்றும், அந்த பெர்மிட்களுக்குத் தடை இருந்தபோதிலும் 1986 அக்டோபர் வரை அவ்வப்போது தடைகளைத் தளர்த்தி புதிய பெர்மிட்களை அரசு கொடுத்து வந்தது என்றும், இதனால் முறைப்படி ஒரு கொள்கையை அரசு கடைப்பிடிக்காத காரணத்தால் ஆட்டோக்களைப் போக்குவரத்திற்கு உபயோகப்படுத்துகின்ற பொதுமக்கள் பல்வேறு இடையூறுகளுக்கு ஆளாகிறார்கள் என்றும், மீட்டர்களைப் போடாமல், ஓட்டுபவர்கள் பணம் அதிகமாகக் கேட்கிறார்கள் என்றும் இதனால் சச்சரவுகள் ஏற்பட்டுப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும் பல்வேறு புகார்கள் கூறப்படுகின்றன.

நாங்கள் இந்தப் புகார்களை ஆராய்ந்து வருகிறோம். மலிவான ஒரு போக்குவரத்து ஆட்டோ, என்பதை மனதில் கொண்டு இதை ஒரு கருவியாக்கி சிலர் லேவாதேவி நடத்துவதற்கு இந்த அரசு எந்தக் காலகட்டத்திலும் உடன்படாது. இது இந்த அரசின் நிலையான கருத்து. இந்தக் கருத்தின் அடிப்படையில் இப்போது இருக்கிற முறைகளை மாற்றி, சில திருத்தங்களைச் செய்ய அரசு முன்வந்துள்ளது.

1) 1.10.1986 முதல் 31.12.1989 வரை தற்போதுள்ள திட்டப்படி வழங்கப்பட வேண்டிய பெர்மிட்கள் 1,732. அதற்காக விண்ணப்பித்து இருப்போர் 3,850 பேர். அவர்களில் 1,319 பேர்களைப் போக்குவரத்து ஆணையர், மத்திய அரசும் மாநில அரசும் அறிவித்த விதிமுறைகளின்படி ஏற்கெனவே பல்வேறு கட்டங்களில் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்துச் சிபாரிசு செய்துள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் உடனடியாக பெர்மிட்கள் வழங்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2) 1-4-1990 முதல் சென்னை நகரில் ஆட்டோ பெர்மிட் வழங்குவதற்கு இருந்த தடை நீக்கப்படுகிறது. தகுதியுள்ள அனைவரும் இந்த பெர்மிட்டைப் பெற விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம். இப்போதுள்ள சிறப்புத் திட்டமும் தொடர்ந்து அமல்படுத்தப்படும்.

3) பெர்மிட் பெற்று, ஆட்டோ வாங்கப் பண உதவி பெற விரும்புவோர், இந்த அரசு, சென்ற ஆண்டு அறிவித்த கடன் மற்றும் மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4) பெர்மிட் முறைக்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளதால் ஏற்கெனவே பெர்மிட்களை வைத்துச் சட்டத்திற்குப் புறம்பாக உபயோகப்படுத்துவோர் மீதும், பொது மக்களுடைய நலன்களுக்கு ஊறு விளைவிப்போர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். சமூகத்தின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கும் முறையில் இந்த பெர்மிட்டை வைத்திருப்பவர்கள் மீதும் அரசு இனி கடும் நடவடிக்கை எடுக்கும்.

அடுத்து அகவிலைப்படி பற்றிய அறிவிப்பு. அரசு அலுவலர் அகவிலைப்படி உயர்வு. மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் மற்றும் அகவிலைப்படி வழங்கும் முறையினை முழுமையாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு கடந்த ஆண்டு ஜூன் திங்களில் அதற்கான ஆணையினைப் பிறப்பித்தது. மத்திய அரசு அலுவலர்களுக்கான அகவிலைப்படி ஆணைகள் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் தரப்பட்ட உடன், இந்த அரசு, ஆணை எண் 1069, நாள் 27.9.1989-இல் மத்திய அரசு அளித்த அகவிலைப்படி விகிதத்திலே மாநில அரசின் அனைத்து அலுவலர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியது. இந்த ஆண்டு மீண்டும் மத்திய அரசு 20.3.1990 அன்று அகவிலைப்படி விகிதத்திலே சில மாற்றங்களைச் செய்து ஆணை பிறப்பித்து

உள்ளது. இதன்படி 1.1.1990-ஆம் தேதியிலிருந்து மத்திய அரசு புதிய அகவிலைப்படி விகிதங்களை மாற்றியமைத்துள்ளது. இதை அப்படியே பின்பற்றி மாநில அரசின் அனைத்து அலுவலர், ஆசிரியர் மற்றும் பல்கலைக் கழக மானியம் பெற்று வருகின்ற கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் போன்ற அனைவருக்கும் அகவிலைப்படி 1-1-1990-இல் இருந்து உயர்த்தி வழங்கப்படும். இந்தப் புதிய அகவிலைப்படி விகிதத்தால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய் 60 கோடியாகும்.

அரசு அலுவலர்களுக்கு, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பற்றி ஒரு விளக்கம். நிதிநிலை அறிக்கையில் அரசு அலுவலர்களுக்கு, குறிப்பாக முதுநிலையிலே உள்ளவர்களுக்கு நலம் அளிக்கும் வகையில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைப் பதவித் தகுதி ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு ஆண்டொன்றுக்கு கூடுதல் செலவு ரூ.10 கோடி ஆகுமென்று தெரிவிக்கப்பட்டது. ரூபாய் 2,500ஐ விடக்குறைவான தொடக்கச் சம்பளம் பெறும் சம்பள விகிதங்களிலுள்ள அனைத்து வகை அலுவலர்களுக்கும் இது பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை என்ற முறை முன்பு, அதாவது 1970-இல் இந்த அரசால் கொண்டு வரப்பட்டது. அப்போதிருந்த சூழ்நிலை, மாநில அரசின் ஊதிய விகிதங்களுக்கும், மத்திய அரசின் ஊதிய விகிதங்களுக்கும் பெரும் வித்தியாசம் இருந்தது. எனவே மாநில அரசு அலுவலர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தேர்வு நிலை முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு படிப்படியாக, தேர்வு நிலை பல பதவிகளுக்கு உருவாக்கப்பட்டது. சிறப்புநிலை என்பது ஒருசில பதவிகளுக்கு மாத்திரம் பிறகு ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். தேர்வு நிலை ஏற்படுத்தியதன் அடிப்படை நோக்கம் மத்திய மாநில அரசுகளின் விகிதங்களில் உள்ள வேறுபாடுகளை ஈடுகட்டும் ஓர் இடைக்கால முயற்சி என்பதை இங்கே புரிந்து கொள்ள வேண்டும். தற்போது மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்களை இந்த அரசு வழங்கி உள்ளது.

மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்களை ஏற்படுத்திய பிறகு, மத்திய அரசு பின்பற்றக்கூடிய முறைகளைத் தான் மாநில அரசும் பின்பற்ற இயலும். மத்திய அரசு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைகளை உருவாக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையை அனுதாபத்தோடு பரிசீலித்து, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஏற்படுத்தப்படுமென்று இந்த அரசு அறிவித்துள்ளது. எனினும்

தேர்வு நிலை பதவி உயர்வு அளவுக்கு இருக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசு அலுவலர்களுடைய அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டது.

அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகியவற்றின் நிலையைக் கவனித்தால், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் தேர்வு நிலை மாத்திரம்தான் இருக்கிறது. இந்தத் தேர்வு நிலை சாதாரண நிலையைவிட ஓர் அடுக்கு அதிகமாக இருக்கிறது. ஒன் ஸ்கேல் அபன். ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் சிறப்பு நிலை ஏற்படவில்லை. கேரள மாநிலத்தில் தேர்வு நிலை, மற்றும் சிறப்பு நிலை இருக்கிறது. கேரள மாநிலத்திலேயும் தேர்வு நிலை ஓர் அடுக்கு அதிகம், சிறப்பு நிலை அதற்குமேல் ஓர் அடுக்கு நிலை. இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தேர்வு நிலை, பதவி உயர்வு அளவுக்கு இருக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இல்லை. பதவி உயர்வு அளவுக்குச் செல்ல வேண்டுமென்றால் 3 அடுக்குக்கு மேல் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனினும் முன்பு இருந்த நிலையைக் கருதி, தற்போதுள்ள புதிய சூழ்நிலையில், தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைத் திட்டத்தை எவ்வாறு செயற்படுத்துவது என்று அரசு ஊழியர்களின் அமைப்புகளோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதன் அடிப்படையில் பெரும்பாலான பதவி களுக்கு தேர்வு நிலை இரண்டு அடுக்குகளுக்குக் குறையாமலும், சிறப்பு நிலை அதைவிட ஓர் அடுக்கு மேல் என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆணைகள் இன்று பிறப்பிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய முறையில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையானது தொடக்க ஊதியம் ரூபாய் 2,500ம் அதற்குக் கீழே உள்ள ஊதிய விகிதங்களில் உள்ள அனைத்து அலுவலர் களுக்கும் பொருந்தும். இதிலே குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முன்பு இருந்த முறையில் சில பதவிகளுக்கு மட்டுமே சிறப்பு நிலை இருந்தது. இந்த நிலையை மாற்றி, தொடக்க ஊதிய விகிதம் 2,500ம், மற்றும் அதற்குக் கீழே உள்ள ஊதிய விகிதங்களைப் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் தற்போது சிறப்பு நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையினால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 15 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொகை நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட 10 கோடி ரூபாயைவிட 5 கோடி அதிகமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி மன்றங்களுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள், தமிழ்நாட்டிலே உள்ள ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் நிதி நெருக் கடியால் இடையில் நிறுத்தப்பட்டது. ஊராட்சிகள் தங்கள் நிதி வசதிகளுக்கேற்பத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்துக் கொள்ளலாமென்ற ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 12,616 ஊராட்சிகள் இருக்கின்றன. அவைகளில் 9,612 ஊராட்சிப் பகுதிகளில் தொலைக்காட்சி ஒளிபரப்பைக் காண இயலும் என்பது தற்போதைய நிலை. இதில் 4,417 ஊராட்சிகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு உள்ளன. மீதமுள்ள 5,195 ஊராட்சிகளில் சுமார் 2,000 ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி இல்லாததால், அரசாங்கமே அவைகளுக்கு மானிய அடிப்படையில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இந்த அரசின் முன் வைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, வரும் ஆண்டில் 1990-91-ஆம் ஆண்டில், ஆயிரம் ஊராட்சிகளுக்கு முழு மானிய அடிப்படையில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி களை வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 1¼ கோடி ரூபாய் செலவாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தியாகிகளுடைய, மொழிக் காவலர்களுடைய பேருந்து பாஸ். சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிக் காவலர்கள் ஆகியோர் ஆண்டு ஒன்றுக்கு 5,000 கிலோமீட்டர் தமிழகத்திற்குள், தமிழக போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணம் இல்லாமல் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்கள் பேருந்துகளில் பயணம் செய்ய டோக்கன்கள் அல்லது பயணச் சீட்டுகள் பெற்று அதனைப் பாதுகாப்பாக வைத்திருந்து பயன்படுத்துவதிலே சிரமங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், ஒவ்வொருமுறையும் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சென்று பயணச் சீட்டுப் பெறு வதற்கு அலைவதைத் தவிர்க்கவும், நடைமுறைச் சிக்கல் எதுவும் இன்றி வசதியாக அவர்கள் விரும்பும்போது போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் - திருவள்ளுவர் பேருந்து உட்பட, எல்லாப் பேருந்துகளிலும் பயணம் செய்யவும் வழி வகை செய்யப்பட்டு, 5 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் வரை பயணம் செய்ய என்ற வரையறையை நீக்கி, விருப்பப்படி தமிழகத்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிக் காவலர்கள் ஆகி யோருக்கு, சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரால் நிழற்படம் ஒட்டப்பட்ட அடையாள அட்டை,

'ஐடென்ட்டி கார்டு' வழங்கப்படும். அந்த அடையாள அட்டை அடிப்படையில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

மாணவர்களுக்கு பஸ் பாஸ். தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்கள் தமிழக அரசின் போக்குவரத்துப் பேருந்துகளில் பள்ளி சென்றுவர சலுகைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இந்தச் சலுகைக் கட்டணம் சென்னை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 50 சதவீதமாகவும், இதர பகுதியில் 33.3. சதவீதமாகவும் இருக்கின்றது. இந்தச் சலுகையினால் போக்கு வரத்துக் கழகத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு இழப்பு ரூ.6 கோடி. இதிலே போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுகட்டும் பொறுப்பை அரசு மேற்கொண்டுள்ளது. துவக்கக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கின்றது. அனைத்து மாணவ, மாணவியர்களும் குறைந்தபட்சம் 8-வது வகுப்பு வரை கண்டிப்பாகப் பயில வேண்டும் என்ற எண்ணத்தைச் செயல் படுத்த இந்த அரசு பல முயற்சிகள் எடுத்து வருகின்றது; மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகம், சீருடை, காலணி மற்றும் சத்துணவு ஆகியவை வழங்குகிறது. அத்துடன் அவர்கள் பள்ளிக்குத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழகம் எங்கும் 8-வது வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் தமிழக அரசின் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாக *(கரவொலி)* வீட்டிலிருந்தே பள்ளி சென்றுவர வசதிகள் செய்து தரப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ஏறத்தாழ 11 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் தொகையினை அரசு, போக்குவரத்துக் கழகங் களுக்கு வழங்கும்.

மேலும் தற்போது சென்னையிலும், கன்னியாகுமரியிலும் 50 சதவீதச் சலுகைக் கட்டணம் உள்ளது. இது தமிழகம் எங்கும் விரிவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளியிலே பயிலும் மாணவ, மாணவியருக்குக் கூடுதல் சலுகை கிடைக்கும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ.1.5 கோடியாக அமையும்.

மாணவர்களுக்கு மருத்துவ வசதி. தமிழ்நாட்டில் பள்ளி மாணவ, மாணவியர் மருத்துவ வசதித் திட்டம் 'ஸ்கூல் ஹெல்த் புரோகிராம்' 153 தொடக்க சுகாதார நிலையங்களிலும், 40 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. ஒரு தொடக்க சுகாதார நிலையத்தில் 2 ஆயிரம் மாணவ மாணவியர், ஒரு

நகராட்சியில் 10 ஆயிரம் மாணவ மாணவியர் என்ற அடிப்படையில் 706 இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு மருத்துவ ஆய்வு நடத்தப்படுகிறது. தற்போது தொடக்க சுகாதார நிலையம் 30 ஆயிரம் ஜனத் தொகைக்கு ஒன்று என்று ஏற் படுத்தப்பட்டு உள்ளதால் மாநிலம் முழுவதும் புதிய சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் பள்ளிக்கூடங்களில் பயிலும் அனைத்து மாணவ மாணவியர் களுக்கும் ஆண்டு மருத்துவ ஆய்வு மற்றும் சிகிச்சை செய்வதற் காக ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தால் 12 கோடிக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் பயன் பெறுவார்கள். இதற்கு முதல் கட்டமாக 1 கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படும்.

இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தி, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் படம். இந்தப் படத்தை வரைந்த வேணுகோபால் சர்மா அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையிலும், நான் சார்ந்துள்ள கழகத்தின் சார்பிலும், இந்த அரசின் சார்பிலும் அவர் மறைவதற்கு முன்பும், மறைந்த பிறகும்கூடப் பல உதவிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவர் வரைந்த அந்தப் படத்தை அரசே எடுத்து, உரிமை வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவருடைய பிள்ளைகள், அவர் மறைந்த பிறகு எங்களுக்கு எழுதினார்கள். அதுகுறித்து அவர் களோடு அதிகாரிகளை விட்டுப் பேசச் சொன்னேன். அவர்கள் தந்துள்ள கடிதத்தை இங்கே படிக்க விரும்புகிறேன்.

''ஐயா, ஓவியர் அமரர் வேணுகோபால் சர்மா அவர்களின் குடும்பத்தாராகிய எங்கள் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எங்கள் தந்தையார் வரைந்த திருவள்ளுவர் திரு உருவப் படத்தின் உரிமையைத் தமிழ்நாடு அரசு பெற்றுக் கொண்டு எங்களுக்கு உதவும்படி எங்கள் தந்தையின் செயற்கரிய செயலைக் கண்டு உளம் மகிழ்ந்த தங்களின் மேலான முடிவுக் குப் பெரு மகிழ்வும் திருப்தியும் அடைகிறோம்'' எனக் குறிப் பிட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து இருந்தோம். எங்களின் நிலையைக் கருத்தில்கொண்டு கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் 3 இலட்சம் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளதாகச் செய்தித் துறை இயக்குநரால் இன்று (26.3.90) சொல்லப்பட்டது. இந்த 3 இலட்ச ரூபாய்க்கு எங்கள் தந்தையார் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்தின் உரிமையை, தமிழ்நாடு அரசுக்கு வழங்கு வதில் எங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் முழுமையான சம்மதம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

இது தொடர்பாக சட்டபூர்வமாக எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தருவோம்" என்று குடும்பத்தார் கையெழுத்திட்டு உள்ள கடிதத்தை அனுப்பி இருக்கிறார்கள்.

இதுவன்னியில்பாரதிதாசனுடைய நூல்களை அரசுடைமை யாக ஆக்க வேண்டும் இந்த நூற்றாண்டு விழாக் காலத்திலே என்ற முயற்சியைப் பற்றி நானும் கல்வியமைச்சரவர்களும் அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அந்தக் குடும்பத் தாரோடு அதைப்பற்றித் தொடர்பு கொண்டிருக்கிறோம். விரைவில் அதிலும் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மே தினத்தையொட்டி சென்னை மாநகரத்தில் - தமிழகத்தின் தலைநகரத்தில் மேதின சின்னம் ஒன்று அமைக்க வேண்டு மென்று நம்முடைய நண்பர் வரதராஜன் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்கான அடிக்கல் நாட்டு விழா இந்த மே தினத்திலே நிச்சயமாக நடைபெறும் என்பதையும் நான் தெரி வித்துக் கொண்டு, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர் களும், காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரும் மற்றும் கட்சி களுடைய தலைவர்களும் எனக்கு ஆக்கபூர்வமாகவும், ஆதரித்தும் எதிர்த்தும் தந்துள்ள கருத்துக்களையும், தோழமைக் கட்சிகளின் சார்பாக ஆதரித்துத் தந்த கருத்துகளையும், நம்முடைய ரமணி அவர்கள், நம்முடைய பாண்டியன் அவர்கள், நம்முடைய தீட்சிதர் அவர்கள், லத்தீப் அவர்கள், அழகர்சாமி அவர்கள், வல்லரசு அவர்கள் ஆகிய அத்தனை கட்சிக்காரர்களும் தந்துள்ள ஆதரவுகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நீண்ட நேரம் நான் தந்துள்ள கருத்துக்களில் உங்களுக்கு ஒப்புதல் இருந்தாலும், ஒப்புதல் இல்லாவிட்டாலும்கூட இந்த அரசினு டைய முயற்சிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் நடை பெறும் என்கின்ற அந்த நம்பிக்கையோடு இந்தப் பணிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் அமை கின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. உ.ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தினுடைய மணிவிழா ஆண்டு என்று குறிப் பிட்டு, அந்தக் கவிஞனுக்குப் பட்டுக்கோட்டையிலே ஒரு கலை யரங்கம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் எழுப்பியிருந்தேன். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு நல்லதொரு முடிவை இங்கே அறிவிப்பார்கள் என்று வேண்டி அமைகின்றேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** மணி விழா என்று சொல்வார்கள். பொதுவாக, மறைந்துவிட்டவர்களுக்கு அதற்குப் பிறகு நூற்றாண்டு விழா தான் கொண்டாடுவது வழக்கம். அவர்கள் உயிரோடு இருக்கும்பொழுதுதான் மணிவிழா, வைரவிழா இதெல்லாம் எடுப்பது வழக்கம். மறைந்து விட்டவர் களுக்கு வேண்டுமானால் 60-வது ஆண்டு நிறைவு நாள் என்று கொண்டாடலாம். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மீது வரதராசன் அவர்களுக்குள்ள அதே அன்பு எனக்கும் உண்டு.

இன்னும் சொல்லப்போனால், இளம் வயதில், என்னுடைய கூட்டங்களில் மேடைகளிலேயிருந்து பாடிய இளைஞன் அந்தப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். எப்படி நினைவுச்சின்னம் அமைக்கலாம் என்பது பற்றிக் கலந்து பேசி முடிவெடுக்கலாம்.

இந்த ஆண்டு, அது மாத்திரமல்ல, டாக்டர் தருமாம்பாள் அம்மையாருடைய நூற்றாண்டு விழா, சுவாமி சகஜானந்தா அவர்களுடைய நூற்றாண்டு விழா, இவைகளெல்லாம் வரு கின்றன. அவைகளையெல்லாம் நடத்தவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். இரர்தா:** மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு மூன்று பிரச்சினைகள் என்ற அளவிற்கு நான் எழுப்ப வேண்டுமென்று நினைத்தேன். நேரத்தைக் கருதி, முன்னாலே எழுப்பிய பிரச்சினைகளுக்கு முதல்வரவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அளவிற்கு ஒரு பதிலைச் சொல்லி விட்டார்கள்.

அதிலே ஒன்று, அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதற்கு அவர்கள் கணக்கைக் காட்டி, ஏறிய அரிசி விலை ஏறியதுதான் என்று சொல்லிவிட்டார்கள்.

அதேபோல, மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்திச் சொன்னதற்கும்கூட அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தப் பதிலில் எங்களுக்கு மன நிறைவு இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

அதேபோல், எங்களுடைய பொதுச் செயலாளர், தாக்கப் பட்டது இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு நீதி விசாரணை வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறோம். அதற்கும் முதல்வரவர்கள் தன்னுடைய பதிலைச் சொல்ல வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** அதற்கு நீதி விசாரணை வேண்டுமென்று உங்களுடைய பொதுச் செயலாளர் அரசுக்குக் கடிதம் எழுதுவாரேயானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

வெளியீடு:

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு அச்சகம்

தமிழரசு

16-4-90

இதழின்

# இலவச இணைப்பு